T. 2451

தமிழ்

# புலவர் வரிசை

## எட்டாம் புத்தகம்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.

கழக வெளியீடு: ௭௮௭

# தமிழ்ப்புலவர் வரிசை

[எட்டாம் புத்தகம்]

ஆசிரியர் :

திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Aug., 1955.

THAMIZHP PULAVAR VARISAI - VIII

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

*Head Office:*

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1200.

# பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அப் புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தந்நலமின்மை, தாய்மொழிப் பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றன.

அம் முறையில் நம் நாட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணுக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும் செய்யும் நல்தொண்டாகும் எனக்கருதி **தமிழ்ப் புலவர் வரிசையில்** இதுகாறும் **ஏழு** நூல்கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல், இவ்வரிசையில் **எட்டாம் புத்தக**மாகும்.

இதன்கண் **வடமலையப்ப பிள்ளையன்** முதல் **வித்துவான் தாண்டவராய முதலியார்** ஈறாக நஉ புலவர் பெருமக்கள் வரலாறுகளும், ஆங்காங்கு அவ்வப் புலவர் பெருமக்கள் யாத்த பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன.

இதனை எங்கள் வேண்டுகோளின்படி ஆக்கித்தந்த திரு. **சு. அ. இராமசாமிப்புலவர்** அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

இதனையும் முதல் ஏழு புத்தகங்கள் போலவே, ஆசிரியர்களும், மாணுக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவார்களாக.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

## உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| க. | வடமலையப்ப பிள்ளையன் | ... | 1 |
| உ. | பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் | ... | 8 |
| ௩. | திரிகூடராசப்பன் கவிராயர் | ... | 12 |
| ௪. | சிவக்கொழுந்து தேசிகர் | ... | 16 |
| ரு. | நாராயண தீட்சிதர் | ... | 20 |
| சா. | மாவைச் சின்னக்குட்டிப் புலவர் | ... | 25 |
| எ. | குழந்தைக் கவிராயர் | ... | 29 |
| அ. | திருமயிலை சண்முகம் பிள்ளை | ... | 33 |
| கூ. | ந. ச. பொன்னம்பலம் பிள்ளை | ... | 39 |
| க0. | சபாபதி நாவலர் | ... | 42 |
| கக. | சோமசுந்தர நாயகர் | ... | 47 |
| கஉ. | பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் | ... | 51 |
| க௩. | வெண்பாப்புலி வேலுச்சாமிப் பிள்ளை | ... | 56 |
| க௪. | சுவாமிநாத பண்டிதர் | ... | 60 |
| கரு. | மாணிக்க நாயக்கர் | ... | 63 |
| கசா. | பூரணலிங்கம் பிள்ளை | ... | 69 |
| கஎ. | பண்டிதமணி கதிரேசச் செட்டியார் | ... | 75 |
| கஅ. | கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை | ... | 84 |
| ககூ. | சாத்தூர் கந்தசாமி முதலியார் | ... | 89 |
| உ0. | இரசிகமணி சிதம்பரநாத முதலியார் | ... | 94 |
| உக. | சேலை சகதேவ முதலியார் | ... | 97 |
| உஉ. | துடிசைகிழார் சிதம்பரனார் | ... | 99 |
| உ௩. | கல்கி, கிருட்டிணமூர்த்தி | ... | 102 |
| உ௪. | மனோன்மணி அம்மையார் | ... | 106 |
| உரு. | நாகை நீலாம்பிகை அம்மையார் | ... | 111 |
| உசா. | இராசேசுவரி அம்மையார் | ... | 119 |
| உஎ. | வேதநாயக சாத்திரியார் | ... | 122 |
| உஅ. | சரவணப்பெருமாட் கவிராயர் | ... | 131 |
| உகூ. | பம்மல் விசயரங்க முதலியார் | ... | 132 |
| ௩0. | திருத்தணிகைக் கந்தப்பையர் | ... | 134 |
| ௩க. | புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் | ... | 138 |
| ௩உ. | வித்துவான் தாண்டவராய முதலியார் | ... | 142 |

# தமிழ்ப் புலவர் வரிசை

## [எட்டாம் புத்தகம்]

### க. வடமலையப்ப பிள்ளையன்

தோற்றம்

புரவலர்களினுஞ் சிலர் புலவர்களாக இருந்து நூல் செய்திருக்கின்றனர். அரசராக இருந்த அதிவீரராமபாண்டியர் தமிழ்நூல்களைக் கற்று அறிஞராகி நைடதம் முதலிய நூல்களைச் செய்திருக்கிறார். குலசேகரபாண்டியர் என்னும் அரசர் இலிங்கபுராணம் பாடியிருக்கிறார். வடமலையப்பபிள்ளையன் மச்சபுராணம் திருநீரேர்த் தலபுராணம் முதலியவைகளைப் பாடியிருக்கிறார். இந்த வடமலையப்ப பிள்ளையன் பிறந்த நாடு பாண்டிநாடு எனச் சிலரும் சோழ நாடு எனச் சிலரும் கருதுகின்றனர். இவருடைய உண்மை வரலாறு நன்கு அறியக்கூடாமலிருக்கிறது. ஆயினும் நூல் வழக்காற்றிலுள்ளபடி இவ்வரலாற்றை முடிப்பாம்.

வடமலையப்ப பிள்ளையன் குழந்தைப் பருவமாயிருக்கும்போதே பெற்றோர் காலமாயினர். வடமலையப்பருடைய சிற்றப்பனே வடமலையப்பரை வளர்க்கும் பொறுப்பை மேற்கொண்டான். வடமலையப்பர் உலகிற் சிறந்து விளங்குதற்கான வழிகள் யாவற்றிற்கும் அவன் முட்டுக்கட்டை கொடுத்தான். கல்விப் பயிற்சியில் வடமலையப்பரை விடுதற்கு மனமற்றவனாகினான். கீரைத்

தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கப் பழக்கினன். அத் தொழிலினும் வடமலையப்பரை மிகவும் வருத்தினன். சிற்றப்பன் பாதுகாப்பில் இருத்தலை வெறுத்த வடமலையப்பர் எவருக்குந் தெரியாவாறு ஊரைவிட்டு வெளியேறினர்.

வியத்தகு நிகழ்ச்சி

வடமலையப்பர் வைகைக் கரையோரமாய் நடந்து மதுரைக்கு அண்மையாக வந்து சேர்ந்தார். வைகைக் கரையில் ஓரிடத்தில் படுத்து உறங்கிவிட்டார். இரவு முழுதும் நடந்து விடியற்காலையில் உறங்கத் தொடங்கினராகலின் அயர்ந்து உறங்கிவிட்டார். கதிரவன் சுடர் யாண்டும் பரவியது. வடமலையப்பரின் முகத்தில் கதிரவன் கதிர் நன்கு வீசியது. அப்பொழுது ஒரு கரும் பாம்பு வடமலையப்பருக்கு அண்மையில் வந்து மண்டலமிட்டது. படத்தையும் நன்கு விரித்தது. கதிரவன் சுடர் வடமலையப்பர் மீது படாதபடி படத்தை அவருடைய தலைக்கு மேலே உயர்த்தியது. இந்நிகழ்ச்சியின்போது வடமலையப்பர் பன்னிரண்டு ஆண்டு நிரம்பப்பெற்ற சிறுவராயிருந்தார்.

வைணவ முனிவர்

அந்நாளில் மதுரையை ஆண்டுவந்த நாயக்கருக்கு ஆசிரியராகிய வைணவ முனிவர் காலைக்கடன் கழித்தற் பொருட்டும் நீராடற் பொருட்டும் வைகையாற்றின் கரைக்கு வந்தார். இவர் வடமலையப்பராகிய சிறுவர் உறங்கிக்கொண்டிருத்தலையும் பாம்பு படமெடுத்துப் பாதுகாத்திருத்தலையும் கண்டார். அவருக்கு மிகுந்த வியப்பும் திகைப்பும் உண்டாயின. "இந்தச் சிறுவன் பிற்காலத்தில் பெருமைபெற்றுப் பிறங்குவான். இவன் தலைக்கு மேல் வெண்கொற்றக் குடை நிழற்றும்" என்று எண்ணினர். ஆயினும் பாம்பைப்பற்றிய அச்சம் அவரையும் விட

வில்லை. மிகவும் நடு நடுங்கினர். பாம்பு நீங்கும்பொருட்டு ஆரவாரஞ் செய்தார். பாம்பு போய்விட்டது. வடமலையப்பரும் துயில் ஒழிந்தார். வைணவ முனிவர் வடமலையப்பருடைய வரலாற்றைக் கேட்டார். அவரைத் தமது திருமடத்திற்கு அழைத்துக்கொண்டு திரும்பினர். வடமலையப்பர் அந்த முனிவருடன் இருந்து அவருடைய குற்றேவலைப் புரிந்தார். முனிவர் வடமலையப்பர் திடமான கல்விப் பயிற்சி பெறுதற்கு ஆகவேண்டியவைகளையெல்லாம் செய்தார்.

அரசராகிய நாயக்கருக்கு மடத்திலிருந்து கொண்டு போகவேண்டியவைகளைக் கொண்டுபோதற்கும் அங்கிருந்து வாங்கிவர வேண்டியவைகளை வாங்கி வருதற்கும் வடமலையப்பரே இடை நின்றார். இதனால் அரசரைக் கண்டு பழகுதற்கும் வடமலையப்பருக்கு இடம் வாய்த்தது. ஆண்டுகள் பல சென்றன. வடமலையப்பர் திடமான ஆளாக வளர்ந்து அறிவினும் ஆற்றலினுஞ் சிறந்து விளங்கினர்.

சிற்றரசர்கள் தொல்லை

அந்நாளில் திருநெல்வேலியினும் அதனைச் சார்ந்த இடங்களினும் இருந்த சிற்றரசர்கள் மதுரை நாயக்க அரசருக்கு உட்பட்டுக் கப்பங் கட்டுபவர்களாக இருந்தார்கள். அவர்கள் தங்கள் கப்பங்களை ஒழுங்காகக் கட்டாமல் தில்லுமல்லுச் செய்தார்கள். இறைப்பொருளை வாங்கச் செல்லும் படைவீரர்களை வழியில் ஆள்வைத்துக் கொன்றுவிட்டு ஏமாற்றி வந்தார்கள். இச்செயல்களை வடமலையப்பர் கேள்விப்பட்டார். தாம் அவர்களை அடக்கித் திறைப்பொருளை வாங்கிவந்து தருவதாக நாயக்கரிடம் நவின்றார். நாயக்கர் வடமலையப்பரின் ஆசிரியரைக் கலந்து எண்ணியபின் வடமலையப்பர் கூறியதற்கு இணங்கினர்.

சூழ்ச்சியுங் கொலையும்

வடமலையப்பன் தமது ஆற்றலை வெளிப்படுத்துவதற்குக் காலம் வாய்த்ததை எண்ணி மகிழ்ந்தார். சிற்றரசர்களின் நாட்டிற்குப் போவதற்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளையெல்லாஞ் செய்தார். போர்வீரர்களோடு சென்றால் வழக்கப்படி வடமலையப்பரும் கொலையுண்டு மாண்டொழிதல் திண்ணம். இதனை வடமலையப்பர் நன்குணர்வார். ஆகவே இரத்திந வணிகனைப்போலச் செல்லவேண்டும் என்று முடிவு செய்தார். அவ்வணிகத்திற்குரிய ஒன்பான்வகை மணிகளினும் (நவரத்திநங்கள்) போதுமான அளவு எடுத்துக்கொண்டு தந்தச்சிவிகை ஒன்றிற் புறப்பட்டார். படைகளாகப் பலபேர் சூழ்ந்து சென்றார்கள். வணிகர்களைக் கொலைபுரிதல் எந்த நாட்டினும் வழக்கமில்லை. எனவே வடமலையப்பர் உடலுக்கு ஊறு ஒன்றும் நேரவில்லை. இவர் சென்றவிடங்களிலெல்லாம் இவருக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. ஒவ்வொரு சிற்றரசர் மாளிகையினும் தங்கி அவர்கட்கெல்லாம் நண்பரானார். இறுதியில் தாம் வடநாட்டிற்குச் செல்லப்போவதாக அவர்களுக்குத் தெரியப்படுத்தினார். முக்கூடல் என்னும் ஊரில் தங்கித் தமக்கோர் அரண்மனையையும் அமைத்துக்கொண்டார். தம் படைகளையெல்லாம் அங்கே தங்கியிருக்கும்படி செய்தார். மணிவணிகர் வடநாட்டிற்குச் செல்லப் போவதாக அறிந்த சிற்றரசர்கள் வருந்தினார்கள். வடமலையப்பர் தாம் அவர்கட்கு விருந்து ஒன்று செய்ய விரும்புவதாக ஒரு கடிதம் எழுதினார். அந்தச் சிற்றரசர்கள் விருந்துக்கு வருவதாகத் தெரியப்படுத்தினார்கள். நண்பர் இல்லத்திற்குச் செல்லும்போது படைகளோடு செல்லுதல் தக்கது அன்று என்று எண்ணினார்கள். தம்மோடு சிலரைத் துணையாக அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தார்கள்,

விருந்து சமைத்தற்பொருட்டு நூற்றுக்கணக்கான மடைத் தொழிலாளர்கள் அமைக்கப்பட்டிருந்தனர். சிற்றரசர்களுள் கம்பளத்தார், நாயக்கர், மறவர் முதலான வகுப்பு வேறுபாடுகள் இருந்தமையால் அவர்கள் எல்லோரையும் ஒரு வரிசையில் வைத்தல் இயலாததாயிற்று. அது வடமலையப்பருக்கு மிகுந்த நன்மையாயிற்று. ஒவ்வோர் அரசரும் ஒவ்வொரு தனியறையில் வைக்கப்பட்டனர். அவர்களோடு வந்த ஆட்கள் வெளியே நிறுத்தப்பட்டனர். உணவு படைத்தற்குப் பலர் அமர்த்தப்பட்டிருந்தனர். தண்ணீர் கொண்டு செல்பவர் ஏனத்துள் ஒரு கத்தியையுங் கொண்டு செல்லவேண்டும் என்பது வடமலையப்பர் கட்டளை. இவ்வளவு ஏற்பாடுகளும் மறைமுகமாக நடந்தபடியால் சிற்றரசர்கட்கோ அவர்களுடன் சென்றவர்களுக்கோ ஒன்றுந் தெரியாது. அவர்கள் நல்விருந்து சாப்பிடப் போவதாகவே இறுதிவரையில் எண்ணிக் கொண்டிருந்தனர். தண்ணீர் கொண்டுபோகிற ஆட்கள் உள்ளே சென்றதும் மறைத்துவைக்கப்பட்டிருக்கும் கத்திகளை எடுத்து ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை வேலை முடித்துவிட வேண்டுமென்பதும் கட்டளை. புறத்தேயுஞ் சில வீரர்கள் சிற்றரசர்கட்குக் காவலாளிகளைப்போல அமைந்து நின்றனர். திட்டப்படி அரசர்கள் எல்லோரும் ஒரே கணத்தில் வேலைதீர்க்கப்பட்டார்கள். இவ்வாறு வழங்கும் வரலாறு பொய்யோ மெய்யோ நாம் அறியோம். மதுரைநாயக்கரால் திருநெல்வேலி ஆட்சிக்கு நேரடியாக அனுப்பப்பெற்றவரென வேறு வரலாறுகள் கூறும். எது எப்படியாயினும் வடமலையப்பர் நெல்லையில் அல்லது முக்கூடலில் இருந்து ஆட்சிபுரிந்ததுமட்டும் தேற்றம். கல்வியறிவிற் சிறந்து புலவராக விளங்கிய ஒருவர் மேற்கண்டவாறு சூழ்ச்சியாகக் கொலைத்தொழில் புரிந்திருப்

பாரா என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். மேற்படி கொலைக்குக் கழுவாயாகத் திருநெல்வேலியைச் சார்ந்த ஊர்களில் உள்ள சிவன் கோயில்கள் எல்லாவற்றினும் வடமலையப்பர் பெயரால் நண்பகற்போதுக் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவாம்.

**மச்சபுராணம் பாடல்**

வடமலையப்பர் நெல்லையில் ஆட்சி தொடங்கியதும் தமிழ்ப்புலவர்கள் பலரையும் தம்முடன் வைத்திருந்தார். எல்லோரும் சேர்ந்து தமிழ் ஆராய்ச்சி செய்து காலங் கழித்தனர். பின்னர் வடமலையப்பர் கி. பி. 1706, 1707-ஆம் ஆண்டுகளில் மச்சபுராணத்தைப் பாடி முடித்து அரங் கேற்றஞ் செய்தார். அப்புராணஞ் சொற்சுவையிலுஞ் பொருட்சுவையிலும் சிறந்து விளங்குகிறது. பாடலின் தொகை ஐயாயிரமாகும்.

> மானினொடும் அம்பரசு தரித்த லானும்
> வடுக்கண்ணி அகலாத மெய்யி னானும்
> ஊனமிலா உம்பர்மலர் தூவி ஆர்ப்ப
> ஒருகாலில் நின்றாடும் உண்மை யானும்
> தேனிதழி குழைதோலின் உடையி னோடும்
> சீறரவும் அம்புலியும் சேர்த லானும்
> நானிலத்தோர் உம்பர்புகழ்ந் தேத்த லானும்
> நம்பனையே போலுமால் நைமிசா ரண்யம்.

என்பது நைமிசாரணியச் சிறப்புரைக்கும் பாடலில் ஒன்றாகும்.

**புலவர்ப் போற்றல்**

வடமலையப்பர் தாம் அறிஞராக அமைந்தமையின் புலவர்களைப் போற்றிக் காப்பதில் தலைமைபெற்று நின்றார். புலவர்கள் பலர் வடமலையப்பரைச் சூழ்ந்திருந்ததன்றிப் பலர் தனிப்பாடல்களைப் பாடிக்கொண்டு சென்றுந் தக்க

வாறு பரிசில்பெற்று மீண்டனர். நாராயண தீட்சிதர் என்பவரும் வேறு சிலரும் கீழ் அதிகாரிகளால் தொல்லைப் படுத்தப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். செய்தியை உணர்ந்த வடமலையப்பர் விரைந்து சென்று அவர்களைச் சிறைநீக்கிப் போற்றியதுடன் அவ்வாறு செய்த கொடிய அதிகாரியை நன்கு ஒறுத்து நாட்டைவிட்டும் விரட்டினர்.

## முருகக் கடவுள்

"வடமலையப்பர் அரசுபுரிந்திருந்த காலத்தில் மேலை நாட்டு மிலேச்சர்கள் இந்நாட்டில் மதவெறிகொண்டு வெறிச்செயல்கள் பல புரிந்தனர். திருச்செந்திலம்பதிக் கோயிலுட் புகுந்து அணிகலன்கள் நிதிகள் முதலியவை களைக் கவர்ந்ததோடமையாது முருகக்கடவுளையுந் தூக்கிச் சென்றனர். அக்கடவுளின் மாயையினால் சுழல்காற்றுப் படகினை மோதியடித்தது. அவர்கள் மனங்கலங்கித் திருவுருவைக் கடலில் வீழ்த்திவிட்டுத் தம்வழியே சென்றனர். பிறகு முருகக்கடவுள் வடமலையப்பர் கனவில் தோன்றி நிகழ்ந்ததை அறிவித்தார். தாம் கடலில் கிடக்கும் இடத்தையும் குறிப்பித்துத் தம்மை யெடுத்துப் போய்க் கோயிலில் அமைக்குமாறும் பணித்தார். வடமலை யப்பர் மனமகிழ்ந்து கட்டளைப்படியே சென்று கடலில் இருந்து எடுத்துவந்து கோயிலில் அமைத்து முறைப் படியே குடமுழுக்கும் செய்தார்" என்றும் ஒரு வரலாறு கூறுப.

## இறுதி

வடமலையப்பர் பெரும்புகழோடு அரசுசெய்திருந்தா ராயினும் அவருக்கு மக்கட்பேறு இல்லை. அதன் பொருட்டுப் பல தானதருமங்களைச் செய்துபார்த்தார். யாதுசெய்தும் மகப்பேறு உண்டாகவில்லை. ஒருவாறு

மனந்தேறினார். தம் உடன் பிறந்தாளுடைய மகனை வளர்ப்பாக எடுத்து வளர்த்தார். மகனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் அவனுக்குச் செய்தார். தங்கருத்து முழுவதையும் இறைவனுடைய அடிகளில் செலுத்தி மேலுலகஞ் சென்றார். அவருடைய வளர்ப்பு மகன் வடமலையப்பரால் எல்லா நலங்களையும் ஒருங்கே பெற்றவனாகையால் மதுரைமன்னனால் வடமலையப்பரைப் போல் சிற்றரசாக ஏற்படுத்தப்பட்டு அரசாட்சியை மேற்கொண்டிருந்தான். வடமலையப்பர் சைவ வைணவ சமயங்களிடத்தில் ஒரே தன்மையான போக்குடையவர். அரசாட்சியில் பல அலுவல்கட்கிடையே பெரிய நூலைப் பாடி முடித்த அவருடைய முயற்சி போற்றத்தக்கதாகும்.

---

## உ. பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

### தோற்றம்

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் சற்றேறக் குறைய இருநூற்றைம்பது யாண்டுகளுக்கு முன்னர் மதுரையிலே வாழ்ந்திருந்தார். இவருடைய வழிமுறையினர், பலபட்டடைக் கணக்கு என்னும் பெயருடைய அலுவலில் மதுரையை ஆண்ட அரசர்களிடம் அமர்ந்திருந்தனர். அதனால் பலபட்டடை என்னுஞ் சொல் இவர்களுடைய பெயருக்கு முன்னால் அமைவதாயிற்று. சொக்கநாதப் புலவர் என்னும் பெயருடையவர்கள் மற்றும் சிலர் இருந்தாராகலான் ஒவ்வொருவரும் தத்தம் பெயருக்கு முன்னால் அடைமொழி ஒன்றைச் சேர்த்து வழங்கலாயினர். அழகிய சொக்கநாதப் புலவர் என்பவரும் இவ்வாறே அழகிய என்னும் அடைமொழியைச் சேர்த்து

வழங்கினர். பலபட்டடைச் சொக்கநாதப் புலவருடைய தந்தையார் பெயர் பலபட்டடைச் சொக்கலிங்கப் புலவர்.

**வாழ்க்கை**

சொக்கநாதப் புலவர் ஓர் ஊரில் ஓரிடத்தில் தங்கியிருந்து ஓர் அலுவலை மேற்கொண்டு வாழ்க்கை நடத்தியவரல்லர். அந்நாளில் இருந்த வள்ளல்கள் பலரையும் பாடிப் பரிசில்பெற்றுப் பரிசில் பொருள்களைக்கொண்டே வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார். இவர் அவ்வக் காலங்களில் பாடிய எண்ணற்ற தனிப்பாடல்களில் இறந்தொழிந்தனபோக எஞ்சியன தனிப்பாடலில் இடம் பெற்றுள்ளன. மதுரைப்பதியில் எழுந்தருளிய கடவுள் மீது ‘மதுரை மும்மணிக்கோவை’ என்னும் ஒருநூல் பாடினர். திண்டுக்கல்லில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது ‘பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது’ என்று ஒருநூல் இயற்றினர். இராமேசுரத்தலத்தில் எழுந்தருளிய கடவுள்மீது தேவைஉலா என்றோர் உலாச்செய்தார். அந்நாளில் கன்னிவாடியில் இருந்த பெருநிலக்கிழாராகிய நரசிங்க நாயகர் என்பவர்மேல் வளமடல் ஒன்று பாடினர். திருமாலிருஞ்சோலைமலை அழகர்மீது கிள்ளைவிடுதூது ஒன்றுசெய்தார்.

**புலவர் பகை**

சொக்கநாதப்புலவர் காலத்தில் சுப்பிரதீபக் கவிராயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருமங்கலந் தாலுக்காவில் கம்மாளர் குலத்திற் பிறந்தவர். சிற்றின்பச் செய்யுள் பாடுவதில் மிக வல்லவர். நாமகூளப்பநாயகன் காதல் விறலிவிடுதூது முதலியன இயற்றியவர். இவருக்கும் சொக்கநாதப் புலவருக்கும் எப்படியோ பகை மூண்டுவிட்டது. சொக்கநாதப்புலவர் சண்பகநல்லூர்ச் சிவபெருமான்மீது வண்டுவிடுதூது என்னும் தூது நூலைப் பாடி அரங்கேற்றஞ்செய்யத் தொடங்கினர். உடனே சுப்பிரதீபக்

கவிராயர் "சண்பக மலரில் வண்டு படியாது. ஆகவே நீவிர் இந்தப் பதிக் கடவுள்மீது வண்டுவிடுதூது பாடியது வழுவாம். இந்நூல் பொருந்தக்கூடியது அன்று" என்று கூறி மறுக்கத்தொடங்கினர். வேறுசிலரும் சுப்பிரதீபக் கவிராயரின் சார்பாக இருந்துகொண்டு அவர்பக்கமே பேசினர். புலவர், "சண்பகமலரில் வண்டு படிதலும் உண்டு. நான் அதனை உங்கட்குக் காட்டுவேன். நாளைக்குப் பொழிலுக்கு எல்லோரும் வருவீர்களாக" என்றுகூறி அரங்கேற்றத்தை நிறுத்திவிட்டார். அன்று இரவு முழுவதும் புலவர் கலைமகளைப் போற்றி வணங்கினர். "தேவி! எனது மொழியில் நீ இருந்து அருள்புரிவது உண்மையானல், நாளை ஒருநாளைக்கு மட்டும் சண்பகமலரில் வண்டு படியுமாறு செய்தருளல் வேண்டும். அவ்வாறு செய்யாதொழியில் என் பெருமைக்கே யன்றி, நின் பெருமைக்கும் இழுக்குண்டாதல் திண்ணம்" என்று கூறிப் போற்றினர். மறுநாள் சுப்பிரதீபக் கவிராயரையும் மற்றும் பலரையும் அழைத்துக் கொண்டு பொழிலுக்குச் சென்றார். சண்பக மலரில் கலைமகளின் திருவருளால் வண்டுகள் வந்து அமர்ந்திருந்தன. அதனை எல்லோருக்குங் காட்டினர். பிறகு வண்டுவிடு தூதின் அரங்கேற்றம் நடைபெற்றது.

விஞ்சைக் கோவை

மற்றும் சொக்கநாதப் புலவர் சேது மன்னரின் அமைச்சராக அமர்ந்திருந்த தெய்வகன்னி என்பவர் மேல் கோவை ஒன்று பாடி அரங்கேற்றினர்.

"கொல்லாத மானென்றும் ஈசன்னகம் மான்இக் குவலயத்தில்
வெல்லாத யானைவெள் ளானையொன் றேமெய்ப் புனமகளார்
இல்லாத வீரம் இவரதன் றேவினி யாதவன்பால்
கல்லாத முத்து ரகுநாதன் விஞ்சையிற் காவலனே."

"எத்திக்கும் போற்றும் ரகுநாதன்
விஞ்சைக் கிருசிதியாய்
வர்த்திக்கு மந்திரி மால்தெய்வ
கன்னி வரையிடத்தே
முத்திக்கை யால்தொட்டுக் கட்டிக்
கொண்டாளம் மொழிக்குமொழி
தித்திக்கு நெஞ்சுக்கும் நாவுக்குங்
கண்ணுக்குந் தித்திக்குமே."

என்பன அக்கோவையின் இரண்டு செய்யுட்கள். இக்கோவை அரங்கேற்றஞ் செய்யப்பட்ட எட்டாவது நாளில் தெய்வகன்னி இறந்துவிட்டார். சுப்பிரதீபக் கவிராயர், கோவை நூலில் உள்ள ஆநந்தக் குற்றம் காரணமாகவே தெய்வகன்னி இறந்துபோயிருக்க வேண்டும் என்று எண்ணியவராய்ப் பல பட்டடைச் சொக்கநாதப் புலவரைப் பலவாறு இகழ்ந்துரைத்தார். மேலும்,

"தேவைரகு நாதன்மெச்சும் தெய்வகன்னி மீதினிலே
கோவையென்று பில்லிவைத்துக் கொன்ருயே—பாவியுன்றன்
இட்டடைச்சொல் லார்பொறுப்பார் ஏண்டா மடையபல
பட்டடைச்சொக் காமுழுவம் பா."

என்று வெண்பா ஒன்றினுலும் இகழ்ந்து பாடினுர். இவர் இவ்வாறு இகழ்ந்து பாடியதை அறிந்த சொக்கநாதப் புலவர் சுப்பிரதீபக் கவிராயரை இகழ்ந்து பாடுவதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். ஒருவரை ஒருவர் இகழ்வது வழக்கமாகிவிட்டது.

மிதியடி

ஒருநாள் சுப்பிரதீபக் கவிராயர் மிதியடிக் கட்டை மீது ஏறி நடந்துகொண்டிருந்தார். அதனைக் கண்ட பல பட்டடைச் சொக்கநாதப் புலவர், கம்மாளனுக்கு மிதியடியில்லாமல் சரிப்படவில்லையோ என்று எண்ணியவராய்;

"சாணுருங் கள்ளைக் குடியார்கள் ஈழுவர் தாமுந்தொடார்
கோணுமல் பாத குறடுசெய் வார்க்கதன் கூலியல்லால்
நாணுமல் ஏறி நடப்பதுண் டோஇந்த நானிலத்தில்
வீணு அடாசுப்ர தீபாஅஞ் ஞான விளக்கொளியே."

என்று இகழ்ந்து பாடினுர். இவருடைய தனிப் பாடல்கள் அருண்மையும் பெருமையும் அமையப் பெற்றவை.

"கான்றெண்டன் இட்ட கனங்குழ
லாளைஎன் கண்மணியைத்
தேன்தொண்டை வாய்ச்சியைத்
தென்கூடல் வாழ்சிறு பெண்பிள்ளையை
யான்தெண்டன் இட்ட பொழுதே
இயமன் எனக்குமடி
யேன்தெண்டன் இட்டவிண் ணப்பமென்
ருேலை எழுதுவனே."

என்பது தனிப்பாடல் திரட்டுப் பாட்டுகளில் ஒன்ருகும். இவர் சைவ சமயத்தினராயினும் வைணவம் முதலியவற்றிடத்தில் சிறிதும் வெறுப்பற்ற பொது நோக்காளராவர்.

---

## ௩. திரிகூடராசப்பன் கவிராயர்

தோற்றம்

தென் பாண்டி நாட்டிலே சிறந்து விளங்குவது திருக்குற்ருலம். அத் திருக்குற்ருலத்திற்கு அண்மையில் அமைந்த மேலகரம் என்னும் சிற்றூரிலே ஏறக்குறைய இருநூறு யாண்டுகளுக்கு முன்னர் திரிகூடராசப்பன் கவிராயர் பிறந்தார். கவிராசர் தோன்றிய குலம் வைசிய வேளாள குலம். திரிகூடராசர், திரிகூட நாதர் என்பன திருக்குற்ருலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய சிவபெருமானுடைய திருப்பெயர்கள். திருவாவடுதுறை ஆதீனத்தில் எழுந்தருளியிருந்த சுப்பிரமணிய ஞானதேசிக

சுவாமிகள் அவர்கள் கவிராயரது வழிமுறையில் தோன்றியவர்களே.

**கல்வி முதலியன**

கவிராயர் மிக இளமைக் காலத்திலேயே கற்க வேண்டிய இலக்கண இலக்கிய நூல்களையெல்லாம் தக்கார்பால் ஐயந்திரிபறக் கற்று முத்தமிழ்ப் புலவராக விளங்கினர். இவருடைய குலத்தினர் திருக்குற்றால நாதரையே வழிபடு தெய்வமாகவும் குலதெய்வமாகவுங் கொண்டவர்கள். கவிராயர் பெரும்பாலும் திருக்குற்றாலத்திலேயே தங்கி இறை வழிபாடு செய்தலையும் இறைவன்மீது நூல்கள் இயற்றுதலையும் தமது கடமையாகக் கொண்டார்.

**இவர் இயற்றிய நூல்கள்**

1. திருக்குற்றாலக் குறவஞ்சி
2. திருக்குற்றாலத் தலபுராணம்
3. திருக்குற்றால மாலை
4. திருக்குற்றாலச் சிலேடை வெண்பா
5. திருக்குற்றால யமகவந்தாதி
6. திருக்குற்றால உலா
7. திருக்குற்றால ஊடல்
8. திருக்குற்றாலப் பரம்பொருள்மாலை
9. திருக்குற்றாலக் கோவை
10. திருக்குற்றாலக் குழல்வாய்மொழி கலிப்பா
11. திருக்குற்றாலக் கோமள மாலை
12. திருக்குற்றால வெண்பாவந்தாதி
13. திருக்குற்றாலப் பிள்ளைத்தமிழ்
14. திருக்குற்றால நன்னகர் வெண்பா.

என்னும் பதினான்கு நூல்களைக் கவிராயர் திருக்குற்றாலத்திற்குப் பாடினர். பிற சிவப்பதிகள்மீதோ அல்லது மனிதர்கள் மீதோ இவர் செய்யுள் பாடியதாகத் தெரிய

வில்லை. இவரது காலத்தில் பாண்டி நாட்டை ஆட்சி புரிந்திருந்த விசயரெங்க சொக்கலிங்க நாயக்கர் கவிராயரின் பெருமையை நன்குணர்ந்தார். திருக்குற்றாலக் குறவஞ்சியைக் குறும்பலாவீசர் திருக்கோயிலில் அரங்கேற்றுவித்தார். கவிராயருக்குச் சிறப்புக்கள் யாவற்றையும் முதன்மையாகச் செய்து திருக்குற்றால நாதர் கோயிற் புலவர் என்று சிறப்புப் பெயர் வழங்கினார். நன்செய் நிலங்கள் பலவற்றை நன்கொடையாக வழங்கித் தாமிரத் தகட்டில் உறுதிமொழிச் சீட்டும் எழுதித்தந்தார். அந்நிலங்கள் உள்ளவிடம் இப்பொழுது குறவஞ்சி மேடு என்னும் பெயருடன் வழங்குகிறது. கவிராயருக்குக் கிடைத்த சிறப்புப் பெயர் நன்செய் நிலம் முதலியவைகளைக் கவிராயருடைய வழிமுறையினர் இன்றும் உரிமையாக வைத்திருக்கின்றனர்.

### சமகாலத்திய அறிஞர்கள்

திரிகூட ராசப்பன் கவிராயருடைய காலத்தில் பழுத்த தமிழ்ப் புலமை வாய்ந்த அறிஞர்கள் பலர் இருந்தனர். அவர்களுள் தலைசிறந்தவர் பாவநாசத் தலத்தில் எழுந்தருளிய உலகம்மையின் திருவருள் கைவரப் பெற்ற நமசிவாயக் கவிராயர். மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமான அடிகளாரும் இக்காலத்தினரே என்பது அறிஞர்கள் சிலர் முடிவு.

### பா நயங்கள்

திரிகூட ராசப்பன் கவிராயருடைய நூல்கள் யாவுமே சொல்லணிகளும் பொருளணிகளும் நிரம்பிக் கற்பவர்கட்குக் களிபேருவகை யளிப்பனவாக விளங்குகின்றன. திருக்குற்றாலக் குறவஞ்சியில் முருகக் கடவுள் வணக்கம் பாடும் போது,

"பன்னிருகை வேல்வாங்கப் பதினேருவர்
படைதாங்கப் பத்துத் திக்கும்
நன்னவவீ ரரும்புகழ மலைகளேட்டும்
கடலேழும் நாடி யாடிப்
பொன்னின்முடி ஆறேந்தி அஞ்சுதலை
எனக் கொழித்துப் புயநால் மூன்றுய்த்
தன்னிருதாள் தரும்ஒருவன் குற்ருலக்
குறவஞ்சித் தமிழ் தந்தானே"

என்னுஞ் செய்யுளைப் பாடும்போது பன்னிரண்டு முதல் ஒன்று வரை எண்ணமையைப் பாடியிருப்பது எண்ணி மகிழ்தற்குரியது.

"அந்தரதுந் துபிமுழங்கு நன்னகர்க்குற்
ருலலிங்கர் அருளைப் பாடி,
வந்தகுற வஞ்சிதன்னை வசந்தவல்லி
கண்டுமனம் மகிழ்ச்சி கொண்டு,
சந்தமுலை துவளும்இடைத் தவளநகைப்
பவள இதழ்த் தையலேஉன்,
சொந்தமலை எந்தமலை அந்தமலை
வளம் எனக்குச் சொல்லென் ருளே."

"நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்
நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்,
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து
சுழலக் காண்பது பூந்தயிர் மத்து
வீங்கக் காண்பது மங்கையர் கொங்கை
வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை
ஏங்கக் காண்பது மங்கல பேரிகை
ஈச ராரிய நாடெங்கள் நாடே."

என்பன போன்ற பாடல்களும் பாடிக் களித்தற்குரியன. இக்குறவஞ்சி எல்லோராலும் போற்றிக் கற்கப் பெறுகிறது. குறவஞ்சிகளில் திருக்குற்ருலக் குறவஞ்சிதான் தலைசிறந்ததென்பது அறிஞர்கள் துணிபு.

## ௩. சிவக்கொழுந்து தேசிகர்

### தோற்றம்

சோழவள நாட்டிலே திருக்குடந்தையை ஒட்டியுள்ளதும், காவிரியின் வடகரையில் அமைந்ததும், ஏரண்டபுரம் என நூல்களில் வழங்கப்பெறுவதும், தேவாரம் பெற்றதும், கோடி லிங்கங்களைக் கண்டு போற்றிய பலனைக் கொடுக்கக்கூடிய சிவலிங்கம் அமையப்பெற்றுள்ளதும், கொட்டையூர் எனத் தற்காலத்தில் வழங்கப்பெறுவதுமாகிய சிவப்பதியிலே, ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் சிவக்கொழுந்து தேசிகர் பிறந்தார். சிவக்கொழுந்து தேசிகரின் தகப்பனார் பெயர் தண்டபாணி தேசிகர். இவருடைய மரபு வழிவழிச் சைவாசாரிய மரபு. சிவக்கொழுந்து என்பது கொட்டையூருக்குத் தென்பால் உள்ள திருச்சத்திமுற்றத்தில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள சிவபெருமானுடைய திருப்பெயர்.

### கல்வி

இவர் ஐயாண்டளவில் பள்ளிக்கு அனுப்பப்பெற்றுக் கல்விப் பயிற்சியைத் தொடங்கிவைக்கப் பெற்றார். பள்ளிக் கல்வி முடிந்ததும் வேறு பலரிடம் கல்வி கற்றார். இலக்கண விளக்க நூலாசிரியராகிய வைத்தியநாத தேசிகருடைய வழிமுறையில் தோன்றியவரும் தமிழ்ப்புலமை நிரம்பப் பெற்றவரும் ஆகிய ஒரு பெரியாரிடத்திலே பல இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத் தேறியமையால் இவருடைய சிறப்பு மிகவும் பெருமைபெற்றதாயிற்று.

### வாழ்க்கை

இவருடைய உலக வாழ்க்கைக்குப் போதிய நிலங்களும் வீடுவாசல் தோட்டந்துரவுகளும் கொட்டையூரில் இவருக்கு

இருந்தன. ஆகவே இவர் காவிரியில் நீராடுவதும் சிவபூசை சிவ வழிபாடு முதலியன செய்வதும், பாடங்கேட்க விரும்பிய மாணவர்கட்குப் பாடஞ்சொல்லுவதும் ஆகிய செயல்களை மேற்கொண்டு மனநிறைவோடு வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தார்.

### அரண்மனையில் அலுவல்

அந்நாளில் தஞ்சையில் சரபோசி மன்னர் இருந்தார். அவர் புதிதாக ஒரு நூல்நிலையத்தை அமைத்துப் பல மொழிகளில் உள்ள பலவகை நூல்களை அதில் தொகுத்துப் பல புலவர்களைப் பலவிடங்களில் இருந்தும் அழைத்தார். அந்நூல் நிலையத்தில் இருந்து நூலாராய்ச்சி செய்தல் நூலெழுதுதல் முதலிய அலுவல்களைப் பார்க்கும்படி ஏற்பாடு செய்தார். அம்மன்னர் சிவக்கொழுந்து தேசிகருடைய முத்தமிழ்ப்புலமையைப் பலராலும் கேள்வியுற்றார். இவரையும் தம்முடைய அரண்மனைக்கு அழைத்து நூலாராய்ச்சிக் குழுவிற் சேர்த்துக்கொண்டார். அங்கமர்ந்து தேசிகர் பல அரிய வேலைகளைச் செய்தார்.

### சென்னையில் வேலை

அந்நாளில் சென்னை அரசாங்கத்தார் ஒரு கல்விச் சங்கம் அமைத்துப் பல புலவர்களை ஒன்று சேர்த்துப் பல நூல்களை இயற்றுவித்தும், பழைய நூல்களை ஆராய்ந்து பதிப்பித்தும், பலருக்குப் பாடஞ்சொல்லச் செய்தும் பல வேலைகள் செய்தார்கள். அந்தக் கல்விச் சங்கத்தில் வித்துவான் தாண்டவராய முதலியார் தலைமைத் தமிழ் ஆசிரியராக அமர்ந்திருந்தார். அவருடன் இருந்து உதவி செய்தற்கு ஒரு தமிழ்ப்புலவரைத் தேடினார்கள். சிவக்கொழுந்து தேசிகரின் அறிவாற்றல் அவர்களுக்கு எட்டியது. சிவக்கொழுந்து தேசிகரைச் சென்னைக்கு அனுப்பி

வைக்கவேண்டுமென்று சரபோசி மன்னரைக் கேட்டுக் கொண்டார்கள். மன்னருந் தேசிகரைச் சென்னைக்கு அனுப்பிவைத்தார். தாண்டவராய முதலியாரோடு சில காலம் அமர்ந்து தண்டமிழ்த்தொண்டு செய்திருந்தார். அக் காலத்தில்தான் திருவாசகம் முதன்முறையாகத் தேசிக ரால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டதெனத் தெரிகிறது.

மனைவி மக்கள்

தேசிகருக்கு மனைவியர் இருவர். ஆண்மக்கள் இருவர். பெண் மக்கள் ஐவர். திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவராக அமர்ந்திருந்து காலஞ்சென்ற காசிவாசி சாமி நாதத் தம்பிரான் சுவாமிகள் சிவக்கொழுந்து தேசிகரின் வழிமுறையினரேயாவர்.

இறுதி

சிவக்கொழுந்து தேசிகர் தொண்ணூறாண்டுகள்வரை மண்ணுலகில் வாழ்ந்து பிறகு பொன்னுலடைந்தார்.

நூல்கள்

1. சரபேந்திரர் வைத்திய முறைகள்
2. சரபேந்திரர் சன்னிரோக சிகிச்சைகள்
3. சரபேந்திரர் வைத்தியம்
4. கோடீச்சுரக் கோவை
5. தஞ்சைப்பெருவுடையார் உலா
6. சரபேந்திரர் பூபால குறவஞ்சி நாடகம்
7. திருவிடைமருதூர்ப் புராணம்
8. ஆச்சாபுரத் தலபுராணம்
9. கொட்டையூர் உலா.

முதலியன சிவக்கொழுந்து தேசிகரால் இயற்றப்பெற்ற அரிய நூல்களாம். இவருடைய பாடல்கள் இனிய எளிய நடையில் அமைந்தவை. சொல்லணி முதலியவைகளை

அழகுபெற அமைப்பதில் இவர் மிகவும் வல்லவர். கோடீச்சுரக்கோவை ஆழ்ந்த கருத்துடன் இயற்றப்பெற்ற அருமையான கோவை. ஒவ்வொரு பாடலும் ஆழ்ந்து எண்ணி அமைதியாகப் பாடப்பெற்றவை.

"செல்வி வளர்திருக் கோடீச்சு ரேசர் செழுங்கிரிமேல்
சொல்விற லுற்ற அறமுதல் நான்கும் தொகஇயற்றும்
பல்வித மான புகழ்நல்கும் வேந்தர் பரவச்செய்யும்
கல்வி அழகே அழகாம் எவருக்குங் காரிகையே."

என்பது கோடீச்சுரக் கோவையின் 421 ஆவது பாடல்.

"காவென்றும் கீயென்றும் குக்கூ என்றும்
　　ககவென்றும் கிகியென்றும் கக்கோ என்றும்
கூவிக்கொண் டிருந்த வெல்லாஞ் சும்மா இங்கே
　　குந்தியிரு நாங்கள்போய் வருவோம் என்று
போவது பார் உனை நாப்புக் காட்டி நீஇப்
　　போதுபக்கி பிடித்ததினிப் போதும் உன்றன்
ஆவியன்ன சிங்கிதனைத் தேடு சிங்கா
　　அண்ணல்சர போசிதஞ்சை அணுகித் தானே."

என்பது சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகத்தில் அறுபதாவது பாடல். தேசிகருடைய செய்யுட்களெல்லாம் இவ்வாறே சொன்னயமும் பொருணயமுஞ் செறியப்பெற்றனவாய் விளங்குகின்றன. இவருடைய நூல்களில் கோடீச்சுரக்கோவை, தஞ்சைப் பெருவுடையார் உலா, சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் ஆகிய நூல்கள் நல்ல முறையில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துலாவுகின்றன.

## ரு. நாராயண தீட்சிதர்

### பிறப்பு

நாராயண தீட்சிதர் என்பவர் இற்றைக்கு ஏறக்குறைய முந்நூற்றைம்பது யாண்டுகட்கு முன்னே பாண்டி நாட்டில் தென்திருப்பேரை என்னும் ஊரில் பிறந்தார். அவர் வைணவர் குடியில் பிள்ளைமங்கலத்தார் என்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய தாய்தந்தையர் பெயர் முதலியன அறியக்கூடவில்லை.

### கல்வியறிவு முதலியன

நாராயண தீட்சிதர் தம் தந்தையாரிடமும் வேறு சில புலவர்களிடமும் தமிழ்நூலை நன்கு கற்ருர். கல்வியறிவிற்குப் பயன் கடவுளுடைய திருவடிகளைப் போற்றுதலேயாம். இதனை நன்கு உள்ளத்தில் பதித்த நாராயண தீட்சிதர் அவ்வூரில் எழுந்தருளிய மகரநெடுங்குழைக்காதர் என்னும் திருமாலிடத்திலே பெருமால்கொண்டார். அப்பெருமானைப் போற்றுதலையே தமது கடமையாகக் கொண்டார். நம்மாழ்வாரிடத்தில் அளவற்ற அன்புடையவர். தென்திருப்பேரைக்கு அண்மையில் உள்ள ஆழ்வார் திருநகரிக்கு நாள்தோறுஞ் சென்று அங்கே எழுந்தருளியிருக்கும் நம்மாழ்வாரையும் போற்றி வணங்கித் துதித்து வருவார். நம்மாழ்வார் தாசரென்றும் சிலர் நாராயண தீட்சிதரை நவின்று வந்தார்கள். தீட்சிதருக்கு நிலம் வீடு வாசல் முதலியன இருந்தன. அவைகளை வைத்துக்கொண்டு அவர் கடவுளைப் போற்றுவதும் கல்வி கற்பதுமாகக் காலங் கழித்துக்கொண்டிருந்தார்.

### சிறையில் அடைப்படுதல்

ஓர் ஆண்டில் மழை நன்ருகப் பொழியவில்லை. ஆகவே பயிர்கள் நன்ருக விளையவில்லை. தீட்சிதராலும் அவருடைய கூட்டத்தார் சிலராலும் அரசிறையை அளிக்கமுடிய

வில்லை. அந்த நாளிலே அவ்வரியை வாங்குவதற்கென்று வடமலையப்ப பிள்ளையன் என்னும் சிற்றரசர், ஓர் அதிகாரியை நியமித்திருந்தார். இந்த வடமலையப்ப பிள்ளையன் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றவர். தமிழ் அறிவு நிரம்பப் பெற்றவர். அவரைப் பிள்ளையன் என்றே பெரும்பாலும் வழங்குவார்கள். அவர் கார்காத்த வேளாளர் குலத்தில் தோன்றியவர். கடவுளன்பும் நிரம்பப் பெற்றவர். அவர் மச்சபுராணம், நீடூர்த் தலபுராணம் முதலிய நூல்களைச் செய்தவர். தமிழ் அறிஞர்களிடத்தில் வடமலையப்பபிள்ளையனுக்கு மிகுந்த அன்பு உண்டு. அவருடைய ஆதரவில் பல தமிழறிஞர்கள் தமிழாராய்ச்சி செய்து இன்புற்று வாழ்ந்திருந்தார்கள். வடமலையப்பபிள்ளையனால் வரி வாங்குவதற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த அதிகாரி, அதிகக் காரமாக இருப்பான். "தேளுக்கு மணியங் கொடுத்தால் நாளுக்குப் பலமுறை கொட்டும்" என்னும் பழமொழிக்குத் தகுதி வாய்ந்தவன். மிகக் கொடிய மனம் உடையவன். தம்மைக் கண்டவர்கள் எல்லோரும் நடுநடுங்குமாறு செயல்கள் புரிவதில் வல்லவன். கடவுளன்பு தமிழ்ப்பற்று முதலியவைகளைக் கனவிலும் அறியாதவன். நாராயண தீட்சிதரிடமும் அவரைச் சேர்ந்த மற்றவர்களிடத்திலும் வரியை வாங்குவதற்குக் கடுமையான முறைமைகளையெல்லாம் கையாண்டான். தீட்சிதரிடத்திலும் பிறரிடத்திலும் எவ்வளவோ முயற்சித்தும் வரியை வாங்க முடியவில்லை. அவர்கள், "விளைவு நன்றாக இல்லையென்றும் மறு ஆண்டில் சேர்த்துச் செலுத்திவிடுவதாகவும் கெஞ்சிக் கேட்டுப்பார்த்தார்கள். அந்த அலுவலாளன் இவர்களுடைய வேண்டுகோளுக்குச் சிறிதும் இணங்கவில்லை. வரி செலுத்ாதவர்களைத் திருநெல்வேலிக்குக் கொண்டு போய்ச் சிறையில் அடைத்துவிட்டான்.

சிறையில் கடவுளைப் பாடுதல்

சிறைப்பட்ட தீட்சிதரும் பிறருந் தமது தீவினையை எண்ணி எண்ணி வருந்தினர். தீட்சிதர் தாம் தமது கடவுளைப் போற்ற முடியாமற்போனது குறித்துப் பெரிதும் மனங் கவன்றார். இந்தக் கொடியவன் நமது உடலைத்தான் சிறையில் இட்டானேயல்லாமல் உள்ளத்தைச் சிறையில் இடவில்லையே! அக்கடவுள்மீது பூமாலையினும் சிறந்த பாமாலை புனைந்து வணங்குவோம். பாட்டிற்கிரங்கும் பரமன் நமது கேட்டினை ஒட்டாதிரான் என்று உள்ளத்தில் துணிந்தார். மகர நெடுங்குழைக்காதர்மேல் பாமாலை ஒன்று பாடத் தொடங்கினர். பாடிய பாடல்களையே திரும்பத் திரும்பக் கூறிப் போற்றினர். அவருடன் இருந்த வேறு தமிழ்அறிஞர்களும் பாட்டுப் பாடுவதில் நாட்டங்கொண்டு வாட்டம் போக்கினர்.

நாராயண தீட்சிதர்,

“ கன்றுக்(கு) இரங்கிய கற்றாவைப் போலக் கருணையுடன்
என்றைக்(கு) இரங்குவ ரோவறி யேன்எழு பாருமுய்யக்
குன்றைக் கவிகை எனத்தரித் தோர்குழைக் காதரைநாம்
சென்றெப் பொழுது தொழுவதும் பாவங்கள் தீர்வதுமே.”

என்று தொடங்கி அறுபது பாடல்கள்வரை பாடினர். அந்தோ நாம் இவ்வாறு சிறையில் அகப்பட்டுக்கொண்டு துன்பப்படுதலை வடமலையப்ப பிள்ளையனிடம் சென்று செப்புவாரும் இல்லையே. தமிழறிஞராகிய அவர் நாம் சிறைப்பட்டு வருந்துஞ் செய்தியை அறிந்தால் வெளியே விட்டுவிடுமாறு கட்டளையிட்டாலும் இடக்கூடுமே என்று எண்ணினர். அதனை ஒரு செய்யுளில் அமைத்து,

“ வள்வார் முரசதிர் கோமான் வடமலை அப்பன்முன்னே
விள்வாரும் இல்லை இனி எங்கள் காரியம் வெண்டயிர்பால்
கள்வா! அருட்கடைக் கண்பார் கருணைக் களிறழைத்த
புள்வாக னு! அன்பர் வாழ்வேதென் பேரைப் புராதனனே.”

என்று பாடினர். இந்தப் பாட்டை ஒருமுறை இருமுறை அல்ல, பலமுறை பாடினர். ஒருநாள் இந்தப் பாட்டைத் தீட்சிதர் பாடிக்கொண்டிருக்கும்போது சிறைக்காவலன் கேட்டான். "இந்தப் பாட்டில் நம்முடைய அரசர் பெயர் வருகிறதே. இங்கிருப்பவர்கள் தமிழ்ப்புலவர்களாக இருப்பார்கள் போல் தெரிகிறதே. நம்முடைய அரசர் தமிழ்ப் புலவர்கள் இடத்தில் பேரன்புடையவராயிற்றே. இங்கிருப்பவர்கள் புலவர்கள் என்னுஞ் செய்தி அரசருக்குத் தெரிந்தால் நமக்குக்கூட ஏதேனும் தொல்லை யேற்படக்கூடும். நாம் இப்பொழுதே சென்று அரசரிடத்தில் தெரியப்படுத்தி விடுவோம்," என்று முடிவு செய்தான்.

விடுதலை

முடிவு செய்த காவலன் விரைந்து வடமலையப்ப பிள்ளையனிடஞ் சென்றான். "அரசே! சிறையில் சில பேர் அடைபட்டிருக்கிறார்கள். அவர்களிற் புலவர்களும் இருப்பார்கள் போல் தெரிகிறது. அவர்கள் தமிழ்ப்பாடல்களை அடிக்கடி பாடுகிறார்கள். அந்தப் பாடல்களில் தங்களுடைய பெயரும் வருகிறது," என்று சொல்லி முடித்தான்.

வடமலையப்பர் திடீரென்று இருக்கையை விட்டு எழுந்தார். குதிரையைக் கொண்டுவரச் சொன்னார். குதிரை வந்தது. அதன்மீது ஏறிக்கொண்டு சிறைவாசலை அடைந்தார். சிறைக்கதவுகள் விரைவாகத் திறக்கப்பட்டன. நாராயண தீட்சிதர் முதலியவர்களுடைய வரலாறுகளையெல்லாம் கேட்டார். தமிழறிஞராகிய அவருடைய உள்ளம் உருகியது. நாமும் தமிழறிஞராக இருக்கிறோம். இருந்துந் தமிழ்ப்புலவர்கள் இவ்வாறு வருந்துமாறு விட்டு விட்டோமே என்று வருந்தினர். வண்டிகளைக் கொண்டு

வரச்செய்து அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு தமிழறிஞர்கட்கு நல்ல சிறப்பு நடந்தது. "இந்தத் தவறு எனக்குத் தெரியாமல் நிகழ்ந்துவிட்டது. பிழை பொறுத் தருளவேண்டும்," என்று அறிஞர்கள் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். தமிழறிஞர்கள் தரவேண்டிய வரிகளையெல்லாம் தள்ளிவிட்டார். அவர்கள் எந்த நாளுமே வரி கொடுக்கவேண்டியது இல்லை என்று கூறி அவர்களுடைய நிலங்களையெல்லாம் வரியில்லா நிலங்களாகச் செய்துவிட்டார். தீட்சிதர் தாம் பாடிய மாலையை முற்றிலும் பாடி முடிக்கச் செய்தார். தீட்சிதரும் அம்மாலையைப் பாடி முடித்து, "மகர நெடுங்குழைக்காதர் பாமாலை" என்று பெயரிட்டு வடமலையப்பபிள்ளையன் முன்னே அரங்கேற்றஞ் செய்தார். இவரால் செய்யப்பட்ட வேறு சில சிறு நூல்கள் மறைந்துபோயின. சிறையிலடைத்த அதிகாரி வேலையிலிருந்து விரட்டப்பட்டுப் பல தொல்லைகட்கு உள்ளானான்.

## இறுதி

தீட்சிதர் நாள்தோறும் குழைக்காதரை வணங்கிப் போற்றும் வழக்கமுடையவர். தாம் வருவதற்குச் சிறிது போது தாழ்த்தாலும் காத்திருக்குமாறு பூசகரிடம் சொல்லி ஏற்பாடு செய்திருந்தார். ஒருநாள் நெடுநேரமாகியும் நாராயண தீட்சிதர் கோவிலுக்கு வரவில்லை. பூசகர் ஒருவரோடு பேசிக்கொண்டு நின்றார். அப்போது நாராயண தீட்சிதர் உள்ளே போவதுபோல் தெரிந்தது. பேசிக்கொண்டிருந்தவரைப் பார்த்து, "சிறிதுபோது இருங்கள். தீட்சிதருக்கு வழிபாட்டுப்பொருள் (பிரசாதம்) வழங்கிவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றார். உள்ளே தீட்சிதர் காணப்படவில்லை. தேடிப்பார்த்தும் பய

னில்லை. வெளியே வந்து உசாவியபோது அன்று அவர் வைகுண்டபதவியடைந்தார் என்று தெரியவந்தது. அந்தச் செய்தியை எல்லோருக்குந் தெரியப்படுத்தினர். கேட்டவர்கள், "தீட்சிதர் நல்ல அருளாளராகையால் மகர நெடுங்குழைக்காதர் மலரடியை அடைந்தார்" என்று பேசிக்கொண்டார்கள்.

---

## ௬. மாவைச் சின்னக்குட்டிப் புலவர்

### தோற்றம்

தண்டிகைக் கனகராயன்பள்ளு என்னும் பள்ளு நூலைப் பாடிய மாவைச் சின்னக்குட்டிப்புலவர் என்பவர் ஏறக்குறைய இருநூறு யாண்டுகட்குமுன்னர் யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் பிறந்தார்.

### கல்வி

அந்நாளில் திருமறைக்காட்டைச் சேர்ந்த கணபதிக் குருக்கள் என்பவர் ஐந்திலக்கணங்களையும் கற்று அவைகளில் வல்லவராக விளங்கி மாணவர் பலருக்குக் கல்வி கற்பித்தார். அவருடைய மாணவர் ஒருவர் இடத்திலே சின்னக்குட்டிப்புலவர் கல்விகற்றுப் பெரும்புலவரானர்.

### கனகநாயக முதலியார்

அக்காலத்தில் கனகநாயக முதலியார் என்பவர் தெல்லிப்பழையில் கல்விச்செல்வத்திலும் பொருட்செல்வத்திலும் சிறந்தவராய் அரசாங்க அலுவலிலே அமர்ந்திருந்தார். சின்னக்குட்டிப்புலவர், அந்தக் கனகநாயக முதலியாரின் இல்லத்துப் புலவராக விளங்கினர். கனகநாயக முதலியார்க்கு நண்பராக அமர்ந்த புலவர் முதலியாருடைய மகனுக்குக் கல்வி கற்பித்தல், முதலியாருக்குத்

தக்க சமயங்களில் துணைபுரிதல் முதலிய உதவிகளைச் செய்துகொண்டு முதலியாரின் ஆருயிர் நண்பராக விளங்கினர். கனகநாயகமுதலியாரின்மீது பள்ளு என்னும் ஒருவகை நூலைப்பாடி அரங்கேற்றினர். வயலில் வேலை செய்யும் பள்ளர்கள் ஒவ்வொரு வேலையையும் செய்யும் பொழுது பாடுவதற்காக இயற்றப்படுவது பள்ளுநூல். சின்னக்குட்டிப்புலவர் பாடிய நூல் தண்டிகைக் கனகராயன் பள்ளு என்னும் பெயருடன் வழங்குகின்றது.

மகன் திருமணம்

கனகநாயக முதலியார் அரசாங்க அலுவலில் ஈடுபட்டு மிகுதியாக உழைத்துக்கொண்டிருந்தாராகலின், கனகநாயக முதலியாருடைய மகன் கந்தப்பன் திருமணத்திற்குப் புலவரே பெண்பேசித் திருமண ஏற்பாடுகளையுஞ் செய்தார். கனகநாயகமுதலியார் அரசிறை வருமானங்களை முடிவுகட்டிய வகையில் கணக்கில் மாறுபாடு காணப்பட்டது. அக்காலத்து வழக்கப்படி முதலியார் கொழும்புத் தலைநகருக்கு வந்து கணக்கைச் சரியாகக் காட்டவேண்டும் என்று கட்டளை பிறந்தது. அவ்வாறே கனகநாயக முதலியார் கொழும்புக்குச் சென்றார். அவர் திரும்பி வருவதற்குள் திருமணத்திற்குக் குறிப்பிட்ட நன்னாள் கடந்துவிடும்போல் தெரிந்தது. குறிப்பிட்ட நாளில் திருமணத்தை முடித்துவிடவேண்டும் என்று புலவர் விரும்பினர். தந்தையார் மீண்டபிறகே திருமணத்தை நடத்தவேண்டுமென்பது முதலியாருடைய மகன் கந்தப்பனின் எண்ணமாக இருந்தது. திருமணம் விரைவில் நிறைவேறுவதுதான் தக்கது என்று புலவர் கந்தப்பனுக்குப் பலவாறு அறிவுரைகள் பகர்ந்து திருமணத்தைச் சிறப்பாக நடத்தி முடித்தார். தந்தையில்லாத கவலை மணமகனுக்குத் தோன்றாதிருக்கவேண்டும் என்று புலவர் எண்ணினர்.

தெல்லிப்பழையில் மணமகன் இல்லத்தில் இருந்து நவாலியில் உள்ள மணமகள் வீட்டையடையும் வரையினும் புலவர் ஓயாமற் பாமாரி பொழிந்துகொண்டே சென்றார்.

திருமணம் முடிந்த சிலநாட்களில் கனகநாயக முதலியார் அரசிறை வருமானக் கணக்குகளையெல்லாம் ஒழுங்காகக் காட்டிவிட்டு ஊருக்கு வந்துசேர்ந்தார். மகனுடைய திருமணம் நடந்தேறிய மகிழ்ச்சியை அரசிறை வருமானக்கணக்கில் நேர்ந்த பிழை கெடுத்துவிட்டது. அதனால் முதலியார் தமக்கு இழிவு நேர்ந்துவிட்டதே. நாம் நம்முடைய மகன் திருமணத்திற்குக்கூட இருக்க முடியாமல் போய்விட்டதே என்று எண்ணிஎண்ணி ஏங்கினார். அந்த ஏக்கமே அவருக்கு நோயை உண்டாக்கியது. சின்னக்குட்டிப்புலவர் கனகநாயக முதலியாரைத் தெளிவிக்க முயன்றும் முதலியார் தெளிவுபெறவில்லை. ஓராண்டுவரை நோயாக இருந்து பிறகு காலமானார். அவர் காலமாகும்போது புலவரைப் பார்த்துத் தம் மகனையும் குடும்பத்தையும் பாதுகாக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். தம் மகனைப் பார்த்துப் புலவருடைய மனங் கோணமல் நடந்து இறுதிவரை அவரைக் கைவிடாமல் ஆதரிக்கவேண்டும் என்று கட்டளையிட்டார்.

புலவர் பாதுகாப்பு

பிறகு புலவர் கந்தப்பனுக்கு வேண்டிய அறிவுரைகளைக் கூறி அவனை நன்னெறியில் இயக்கினின்றார். கந்தப்பன்மீதும் பல பாடல்கள் பாடினார். கனகநாயக முதலியாரின் பெருமையை யாண்டுங் கூறுவதே சின்னக் குட்டிப் புலவருக்குப் பெரிய வேலையாக இருந்தது.

ஒருமுறை பலர் கூடியிருந்த இடத்தில் புலவர் கனக நாயக முதலியாரைப் புகழ்ந்து பேசினார். அங்கிருந்த

வேறொரு புலவர், "கந்தப்பனுக்கு அரசாங்க அலுவ லில்லை" என்று குற்றம் சொன்னார்: உடனே சின்னக் குட்டிப் புலவர், "வேளாம் அரசே அரசு மற்ற வெல்லாம் இன்றுதோன்றி நாளை அழியும் பூ அரசு என்று உலகத்தார் கூறும் பழமொழியை நீர் அறியீரோ" என்று கூறி அவருடைய வாயை அடக்கினர். இறுதிவரை சின்னக்குட்டிப்புலவர் கந்தப்பனுக்கு உறுதுணையாக அமைந்து நின்று பிறகு காலமானர். புலவரின் வழிமுறை யினர் கனகநாயக முதலியாரின் வழிமுறையினரிடம் இன்றும் அன்புடையவர்களாக இருக்கின்றனர்.

பள்ளு

சின்னக்குட்டிப்புலவர் தமது பள்ளுநூலை 1789-ஆம் ஆண்டுக்குச் சற்று முன்பின்னகப் பாடி அரங்கேற்றி யிருக்கலாம் என்று அந் நூலைப்பற்றி ஆராய்ச்சி செய்த வர்கள் எண்ணுகின்றனர். பள்ளுநூலின் பாடல்களைப் பாடும் வழக்கம் இந்தியாவில் பல ஆண்டுகட்கு முன்னரே மறைந்துவிட்டது. யாழ்ப்பாணத்தில் பள்ளுப்பாட்டை இன்றும் வயலில் வேலைசெய்யும் ஆட்கள் பாடுகின்றனர் என்று தெரிகிறது. இந்தப் பள்ளைத்தவிரக், கதிரை மலைப் பள்ளு, பருளைவிநாயகர் பள்ளு, முக்கூடற்பள்ளு முதலிய வேறு பள்ளு நூல்களும் உள்ளன. தண்டிகைக் கனகராயன்பள்ளு கனகநாயக முதலியாரின் பெருமை இடையிடையே அமையப் பாடப்பெற்றது.

காளைமுட்டப் பள்ளன் விழுந்து மூர்ச்சித்துக் கத்தல்

சிந்து

பாரியர் காவிக் கண்ணியான் தண்டிகைக்
கனகநாயகன் காரை வயலில்
மூரியேற்றில் நுகம்வைத்துப் பூட்டி
முடுகச் சால்விட் டுழுகின்ற நேரம்

நீரில் நின்றிள வாளை குதிக்க
　　நிகரில்லா வெள்ளைக் காளை வெருண்டு
வீரியப் பள்ளன்மேல் சீறிப் பாய
　　விளங்குசெய்யில் விழுந்தான்காண் ஆண்டே.

## பள்ளியர்புலம்பப் பள்ளன் எழுந்திருத்தல்

சிந்து

எங்கள்குலத் தவப்பயனே என்இரண்டு கண்மணியே
உங்கள்கிளைக் கொருமருந்தே ஓவியமே தீவியமே
குங்குமப்பூ மேனியெங்கும் குழைவுறவே நீகிடந்தாய்
பங்கயப்பூ நிகர்முகத்தைப் பார்ப்பவரார் காப்பவரார்?

குறைந்தமதித் தமியேற்குக் கூறுதுணை வேறுமுண்டோ
புறம்படவே கண்டகனைப் பொய்யாகப் போச்சிலையே
மறந்தவறு மனமுடைய வாழ்வேநீ எழுந்திரென்னச்
சிறந்தபுனல் தெளிந்திடவே தெளிந்துபள்ளன் எழுந்தனனே.

என்பன தண்டிகைக் கனகராயன் பள்ளுப்பாடல்களிற் சிலவாம்.

---

## எ. குழந்தைக் கவிராயர்

### தோற்றம்

குழந்தைக் கவிராயர் என்பவர் சிவகங்கை நாட்டைச் சேர்ந்த மிதிலைப்பட்டி என்னும் ஊரில் வழிவழியாகத் தமிழ்ப்புலமை வாய்ந்த குடும்பத்தில் தோன்றியவர். இவருடைய தந்தையார் பெயர் மங்கைபாகக் கவிராயர். அந்த மங்கைபாகக் கவிராயர் நத்தம் பெருநிலக்கிழவராகிய முடிலிங்க நாயகர் புதல்வர் சொக்கலிங்க நாயகர்மீது வருக்கக்கோவை ஒன்று பாடிப் பூசாரிப்பட்டி என்னும் ஊரை நன்கொடையாகப் பெற்றவர்.

கல்வியறிவு நூல் முதலியன

குழந்தைக் கவிராயர் நன்றாகக் கல்விகற்றுச் சிறப்படைந்திருந்தார். இவருடைய முன்னோரும் பின்னோரும் பாடியுள்ள நூல்கள் பல. அவர்கள் தங்கள் காலத்தே வாழ்ந்திருந்த சிற்றரசர்களைப் பாடி அவர்களால் சிற்றூர் முதலியன இறையிலி நிலங்களாக அளிக்கப்பட்டு வாழ்ந்திருந்தனர். குழந்தைக் கவிராயர் பல செல்வர்களாலும் பெருநிலக் கிழவர்களாலும் நன்கு ஆதரிக்கப்பட்டு வாழ்ந்திருந்தார். சிவகங்கை சமத்தானத்தில் இருந்த தாண்டவராய பிள்ளை என்பவர்மீது மான்விடு தூது என்னும் நூலைப் பாடி அவரால் பலவகையான சிறப்புக்களைப் பெற்றார். இவர் பாடிய வேறு நூல்களும் தனிப்பாடல்களும் உள்ளன.

நெல் நன்கொடை

குழந்தைக் கவிராயரால் மான்விடு தூதையும் வேறு பல தனிப்பாடல்களையும் பெற்ற தாண்டவராய பிள்ளை இவருக்கு ஆயிரக்கலம் நெல் நன்கொடை வழங்குமாறு தம் கீழுள்ள ஏவலருக்குக் கட்டளையிட்டனர். அந்த ஏவலர்கள் அந்தக் கட்டளையை நிறைவேற்றற்கு முயலாமல் காலங்கடத்தினர்கள். அப்பொழுது கவிராயர்,

“ அருள்விசய ரகுநாதப் பெரியவுடை யாத்தேவர்
அவர்கள் தந்த
நிருபமுந்தாண் டவராய சாமிசொன்ன உத்தரவும்
நிலையா என்றால்
துருவனுடைப் பட்டமும்போய்ப் பஞ்சகருத்
தாக்களுடைத் தொழிலு மாறி
இருசுடரும் ஒளிமழுங்கி எழுபுவியும் இருளுறைந்த
தென்ன லாமே.”

என்னுஞ் செய்யுளைப் பாடினார். தம் கட்டளை போற்றி மதிக்கப்படாமையைக் கண்ட தாண்டவராய பிள்ளை

மீண்டுங் கடுமையான கட்டளை பிறப்பித்தார். உடனே கவிராயருக்கு நெல் அளக்கப்பட்டது. "சாமி வரங் கொடுத்தும் பூசாரி இடங்கொடுக்கவில்லை" என்னும் பழமொழி நெல் அளப்பதற்குத் தில்லுமல்லுச் செய்தவர்கள் செயலில் நன்கு பொருந்திவிட்டது. தமக்குப் பலவாறு பேருதவி செய்து மான்விடு தூது என்னும் நூலையும் பெற்ற தாண்டவராய பிள்ளை இறந்தபோது இக் கவிராயர் மனம் வருந்தி,

"கருணை கரமுல்லைத் தாண்டவ ராயகங் காகுலனே
இருணாடு நீவங் திராநாடு நீவங் திருந்தசபை
பொருணாடு நாவலர் வித்யாப்ர சங்கம் பொருந்துமையோ
தருணை தருணம் அறிந்தே உதவுந் தயாநிதியே"

என்னும் பாடலைப்பாடி வருந்தி இரங்கினர்.

செய்யுளின் சிறப்பு

குழந்தைக் கவிராயர் பேரறிஞராக விளங்கியதற்கு ஏற்ப அவருடைய பாடல்களும் பலித ஆற்றலில் சிறந்து விளங்கின. குழந்தைக் கவிராயர் ஒரு நாள் நத்தம் பெருநிலக்கிழாரிடம் சென்றுவிட்டுத் தம் பல்லக்கில் ஏறிச் சிங்கம்பிடாரி [சிங்கம் புணரி என்று இந்நாளில் செப்புகின்றனர்] என்னும் ஊர்வழியாக வந்துகொண்டிருந்தனர். அந்தணப்பெண்கள் சிலர் அடுத்த ஊருக்குச் செல்ல எண்ணினர். கவிராயருடைய பல்லக்குத் துணையோடு போய்விடலாம் என்று எண்ணிப் பல்லக்கைத் தொடர்ந்து வந்தனர். பல்லக்குச் சிறிது முந்தியது. அந்தச் சமயத்தில் கள்ளர்கள் சிலர் அந்தணப் பெண்களை வழிமறித்துத் துன்பப்படுத்தி அவர்களுடைய நகைகள் தாலி முதலியவைகளைக் கைப்பற்றிக்கொண்டனர். துன்பம் அடைந்த அந்தப் பெண்கள் கவிராயரிடம் வந்து தமக்குற்ற அல்லலைத் தெரி

வித்தனர். அதனைக்கேட்டு மனம் வருந்திய கவிராயர், அவ்வூரில் உள்ள ஐயனார்மீது,

“ அண்டர்தொழுஞ் சிங்கையிற்சே வகராயா
கேட்டாயோ ஐயோ உன்றன்
வண்டுவிழி மலர்மாதர் பூரணைபுட்
கலைதாலி வாங்கி னாரோ
விண்டுலவு கள்ளர்கள்வந் தென்பிறகே
தொடர்ந்துவந்த மேலாம் சாதிப்
பெண்டுகளை அணிகவர விட்டாயே
கெட்டாயே பேர்பட் டாயே.”

என்னுஞ் செய்யுளைப் பாடினார். ஐயனாருடைய அருளால் அந்தக் கள்ளர்களுக்குக் கண்பார்வை தெரியாமல்போய் விட்டது. ஆகவே, அவர்கள் மிகுந்த அச்சமடைந்தனர். உடனே அவ்வூரிலுள்ள அதிகாரியிடம் தட்டுத் தடுமாறிச் சென்று நிகழ்ந்ததைக் கூறித் தாங்கள் பறித்த தாலி முதலியவைகளைக் கொடுத்துத் தாங்கள் செய்த பிழையைப் பொறுக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். அதிகாரியும் அணிகலன்களை உரியவர்களிடம் கொடுத்து அந்தக் கள்ளர்களின் குற்றத்தையும் மன்னித்தார். குழந்தைக்கவிராயர் மிகுந்த சிறப்போடு நெடுநாளிருந்து காலமானார்.

# அ. திருமயிலை சண்முகம்பிள்ளை

தோற்றம்

பிற்காலத்தில் திருமயிலையில் வாழ்ந்திருந்தமையின் திருமயிலை சண்முகம் பிள்ளை என்று பெயரடைந்த சண்முகம் பிள்ளை 1858 ஆம் ஆண்டு சென்னைக் குயப்பேட்டையிற் பிறந்தார். சண்முகம் பிள்ளையின் தந்தையார்க்கு மனைவியர் இருவர். அவர்களுள் மூத்த மனைவியார் வயிற்றில் தோன்றியவர் சண்முகம் பிள்ளை. சண்முகம் பிள்ளையின் தந்தையார் வைணவ சமயத்தினர். ஆயினும் சைவத்தினிடமோ பிற சமயங்களிடமோ சிறிதும்வெறுப்பற்றவர். ஆகவேதான் தம் மகனுக்குச் சண்முகம் என்று பெயர் இட்டனர்.

கல்வியறிவு

பள்ளிக் கல்வியை சண்முகம் பிள்ளை முயற்சியாகக் கற்றார். கிறித்துவக் கல்லூரியிலும் சிறிது நாள் கல்வி பயின்றார். இவருடைய நோக்கம் தமிழ் கற்றுச் சிறப்படையவேண்டும் என்னும் போக்குடையதாக இருந்தது. அந்நாளில் புரசையில் அட்டாவதானி சபாபதி முதலியார் என்பவர் சிறந்த தமிழ் அறிஞராக விளங்கினர். சண்முகம் பிள்ளை சபாபதி முதலியாரைத் தமிழாசிரியராகக் கொண்டு தமிழ்க்கல்வியை வரன்முறையாகக் கற்றுத் தெளிந்து பிறருக்குக் கல்வி புகட்டத்தக்க ஆற்றலையும் அடைந்தார். அந்நாளில் தமிழ் படித்துணர்ந்தவர்கள் தக்கார் வாயினால் தமிழ்ப்புலவர் என்று கூறப்பெற்றமையொன்றினானே தமிழ்ப்புலவர்களாகத் திகழ்வது இயற்கை. இவ்வாறு தமிழ்ப்புலவராகிய சண்முகம் பிள்ளை தமது கல்வியை மேலும் பெருக்கிக்கொள்ள விரும்பினார். கோம

ளேசுரன் பேட்டையில் அந்நாளில் இராசகோபால பிள்ளை என்பவர் கம்பராமாயணம் இலக்கணம் முதலிய நூல்களில் வல்லவராகத் திகழ்ந்திருந்தார். சண்முகம் பிள்ளை இராசகோபால பிள்ளையிடம் இராமாயணம் நன்னூல் முதலிய நூல்களைப் பாடங்கேட்கத் தொடங்கினர்.

இராசகோபால பிள்ளை கடுமையான வைணவ மனப்பான்மை கொண்டவர். சைவ சமயத்தினிடத்தும் சிவ பரம்பொருளினிடத்தும் அளவற்ற வெறுப்புடையவர். கோமளேசுரன் பேட்டை என்னும் பெயரில் 'ஈசுவர' என்னும் ஒலி இருப்பதற்காக அந்தப் பேட்டையின் பெயரைக் கோமளபுரம் என்று மாற்றிவிட்டார். மேலும் தம்மிடம் படிக்க வருபவர்களின் பெயரிலும் வைணவ மாற்றங்கள் சேர்ப்பார். வைத்தியநாத முதலியார் என்பவரை வாசுதேவ முதலியாராக மாற்றினர். நடராச முதலியாரை நாராயண முதலியாராகச் செய்தார். சண்முகம் பிள்ளையின் பெயரோடு சீநிவாச என்பதனையுஞ் சேர்த்துச் சீநிவாச சண்முகம்பிள்ளை என்று மாற்றினர். தாம் அச்சிட்ட வில்லிபாரதத்தில் இருந்த சிவபரமான புல பாடல்களை நீக்கிவிட்டு அச்சிட்டார். இவ்வாறு இராசகோபாலபிள்ளை அச்சிட்டமையால்தான் ஆறுமுக நாவலர் பாரதத்தை உள்ளபடியே தாம் அச்சிட்டு வெளிப்படுத்தினர். சண்முகம்பிள்ளை இராசகோபால பிள்ளையிடம் கம்பராமாயணம் நன்னூல் ஆகிய இரண்டையுங் கற்றுக் கொண்டார்.

### ஆசிரியத் தொழில்

சண்முகம்பிள்ளை இலக்கண இலக்கிய நூற்பயிற்சியில் வல்லவரானதும் தமிழாசிரியத் தொழில் அவரைத் தேடிக் கொண்டு வந்தது. தொண்டமண்டலம் துளுவவேளாளர்

உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியரானார். மாணவர்கட்குக் கல்வி போதிக்கும் ஆற்றல் சண்முகம்பிள்ளைக்கு நன்கு அமைந்திருந்தது. அக்காலத்தில் அப்பன் செட்டியார் என்னும் பெயருடைய மற்றொரு தமிழ்ப்புலவரும் சண்முகம்பிள்ளையோடு தமிழாசிரியராகப் பணிபுரிந்துகொண்டிருந்தார். சண்முகம்பிள்ளை அமைதியான பொறுமைக் குணம் உடையவர். அப்பன் செட்டியாரோ சண்முகம்பிள்ளைக்கு நேர்மாறானவர். அளவு கடந்த சினம் உடையவர். நினைத்த பொழுதெல்லாம் மாணவர் மீது சீறிவிழுவார். சண்முகம் பிள்ளைக்கு மக்கட்பேறில்லை. அதனால் ஊரார் மக்களையெல்லாம் தம் மக்களாகவே எண்ணி எல்லாப் பிள்ளைகள்மீதும் அன்பு செலுத்தினார். பிற ஆசிரியர்கள் மாணவர்களை அடிப்பதைக் கண்டால் சண்முகம்பிள்ளை அந்த ஆசிரியர்களைக் கண்டிக்கத் தொடங்கி விடுவார். ஒருநாள் அப்பன் செட்டியார் சரவணன் என்னும் ஒரு மாணவனை அடித்துவிட்டார். அடியுண்ட சரவணன் அழுது கொண்டு நின்றான். அப்பன் செட்டியார் மீது சண்முகம் பிள்ளைக்கு அளவு கடந்த சினம் உண்டாகி விட்டது. அவர் அப்பன் செட்டியாரைப் பார்த்து, "நீர் ஏன் அந்த மாணவனை அடித்தீர்? தலைமையாசிரியரிடம் சொல்லி உமக்குச் சரியான சூடு கொடுக்கச் சொல்லுகிறேன் சிறிது பொறும்" என்று கூறிவிட்டுத் தலைமையாசிரியருடைய அறையை நோக்கிச் சென்றார். அப்பன் செட்டியார் சண்முகம்பிள்ளை செல்லும் வழியை மறித்துக் கொண்டு, "இனிமேல் எந்த மாணவனையும் அடிக்கவில்லை. தலைமையாசிரியரிடம் வெடிவைக்க வேண்டாம்," என்று வேண்டிக் கொண்டார். சண்முகம்பிள்ளையும் அப்பன் செட்டியார் வேண்டுகோளுக்கிணங்கித் தலைமையாசிரியரிடம் சொல்லாமல் நிறுத்திக் கொண்டார்.

கா. ரா. நமசிவாய முதலியார்

சண்முகம்பிள்ளையின் வீட்டில் எப்பொழுதும் மாணவர் பலர் கூடியிருப்பார்கள். ஒவ்வொருவரும் தத்தமக்குத் தோன்றிய இரண்டொரு நூல்களைப் பாடங்கேட்டுவிட்டு ஓய்ந்துவிடுவார்கள். கா. ரா. நமசிவாய முதலியார் அந்நாளில் இளைஞராக விளங்கினர். சண்முகம்பிள்ளையின் புலமையைப் பலராலும் கேள்விப்பட்ட நமசிவாய முதலியார் தமக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்று சண்முகம்பிள்ளையை வேண்டிக்கொண்டார். சண்முகம்பிள்ளையும் அதற்கு இணங்கி ஐந்திலக்கணங்களையும் இலக்கியங்களையும் நமசிவாயருக்குக் கற்பித்தார். நமசிவாயர் மற்றைய மாணவர்களைப்போல் சின்னாள் பாடங் கேட்டுவிட்டு நின்றுவிடவில்லை. பன்னிரண்டு யாண்டுகள் வரை பாடங் கேட்டார். நல்ல தமிழ்ப் புலவர் ஒருவரிடம் ஒரு மாணவன் பன்னிரண்டு யாண்டுகள் வரை பாடங்கேட்டான் என்றால் அவன் அடையும் அறிவுத் திறமைக்கு ஓர் எல்லையும் உரைக்க இயலுமோ? நமசிவாயர் தாம் கல்வி கற்றுச் சிறப்படைதற்குக் காரணமாக இருந்த ஆசிரியரைப் பிற்காலத்தில் மறந்துவிடவில்லை. ஆசிரியரின் மனைவியைத் தம் தாயைப்போல் பாதுகாத்து ஆவனசெய்தார்.

நூலாசிரியர்

சண்முகம்பிள்ளை தமிழாசிரியராகப் பணிபுரிந்ததுடன் நின்றுவிடவில்லை. தமது பெயர் நிலத்தில் நிலைத்து நிற்குமாறு நூல்களும் செய்தார். இராமாயணம் உரையற்றதாக விளங்கிய அந்நாளில் அயோத்தியா காண்டத்திற்கு ஓர் அரிய உரை இயற்றினர். மணிமேகலை மூலத்தை மட்டும் நன்கு ஆராய்ந்து அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார். நன்னூல் விருத்தியுரை, தஞ்சைவாணன் கோவை

யுரை, மச்சபுராணம் என்னும் நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டார். கம்பராமாயண அயோத்தியா காண்ட உரையையேயன்றிப் பொன்வண்ணத் தந்தாதியுரை, திருக் கைலாய ஞானவுலாவுரை, திருவாரூர் மும்மணிக்கோவை யுரை என்பனவும் இவரால் எழுதி வெளியிடப்பட்டன.

இயற்கை

சண்முகம்பிள்ளை அமைதிப்பண்பு மிகுதியும் அமை யப் பெற்றவர். வெளிப் பகட்டு முதலிய தீய குணங்கள் இல்லாதவர். மாணவர்கட்குக் கல்வி போதிப்பதினும் நூல்கள் இயற்றுவதினும் இவர் பேராற்றல் படைத்திருந் தாராயினும் சொல்லாற்றல் - அஃதாவது அவைகளிலே பலருக்கு அறிவுரை கூறும் ஆற்றல் இவரிடம் அமைய வில்லை. இவரது புகழைக் கேள்வியுற்று வரச்செய்து பார்த்தார் திருவனந்தபுரம் சுந்தரம்பிள்ளை. அவையில் எதுவுஞ் சொல்ல முடியாத இவருடைய நிலைமை அவருக்கு மிகுந்த வியப்பை அளித்தது. அயோத்தியா காண்டத்தில் இவருக்கு ஈடுபாடு மிகுதியும் உண்டு. அக் காண்டத்தை இவர் படிக்கும்போது உள்ளம் உருகிக் கண்ணீர் விடுவா ராம். பின்னாளில் இவர் திருமயிலையை அடுத்த செந்தோம் கல்லூரியில் ஆசிரியராக அமர்ந்து திருமயிலையையே தமது இருப்பிடமாக இறுதிவரை கொண்டிருந்தார்.

இவர் காலமானபோது கா. ரா. நமசிவாய முதலியார் பாடிய இரங்கற்பாக்களில் ஒன்று,

“ அரிந்தமன்சீர் எடுத்துரைக்கும் காப்பியத்தின்
அரிவரிதாய் அகத்தில் உற்ற,
விரிந்தபொருள் எவ்வெவரும் இறும்பூது
கொளப்புகலும் மேதக் கோயே,

பரிந்தமனத் தன்னையினும் இனிதாகப்
பன்னூலும் படிற னேற்குத்,
தெரிந்திடச்சொற் றௌயாண்ட சண்முகநற்
பெயர்க்குரிய சீரி யோயே."

என்பதாம். இவரால் இயற்றப் பெற்றனவும் பதிப்பிக்கப் பட்டனவுமான நூல்கள் பின்வருபவைகளாம்:

1. வடதிருமுல்லைப் பதிற்றுப்பத் தந்தாதி
2. திருப்போரூர் ஆண்டவன் பதிற்றுப்பத் தந்தாதி
3. சென்னை விநாயகர் பதிற்றுப்பத் தந்தாதி
4. கூவம் திரிபுரசுந்தரி பதிற்றுப்பத் தந்தாதி
5. கழுகாசல சதகம்
6. வேதகிரீசர் வண்ணம்
7. சந்தானகுரவர் நான்மணிமாலை
8. பழநி மும்மணிக்கோவை
9. கந்தகோட்ட மாலை
10. விநாயகர் இரட்டைமணிமாலை
11. திருத்தணிகை மாலை
12. இராச ராசேசுவரிமாலை
13. வடிவுடையம்மைமாலை
14. மாசிலாமணிமாலை
15. சென்னைக் கந்தர்மாலை
16. கந்தரநுபூதி உரை
17. பிச்சாடன நவமணிமாலையுரை
18. கம்பராமாயணம் அயோத்தியா காண்டம் உரை
19. திருமுல்லைவாயிற் புராணம்
20. சிற்றிலக்கண வினாவிடை
21. கந்தபுராண வசனம்
22. மணிமேகலை மூலம்
23. நன்னூல் விருத்தியுரை
24. தஞ்சை வாணன் கோவையுரை
25. மச்சபுராணம்
26. திருமயிலைக் கலம்பகம்

27. திருமயிலை உலா
28. சிற்றம்பல நாடிகள் சாத்திரக்கொத்து
29. கந்தசாமி தோத்திரம்
30. மாணிக்கவாசக சுவாமிகள் மாலை
31. கபாலீசர் பஞ்சரத்திநம்
32. திருத்தொண்டர் கீர்த்தனம்
33. கற்பகவல்லிமாலை
34. நவமணிமாலை
35. உயிர்வருக்கக் கோவை
36. புவனாம்பிகை சோடசயாகோத்தவமாலை
37. விண்ணப்பமாலை
38. சவுந்தரநாயகி மாலை
39. ஆளுடைய அரசு தோத்திரமாலை
40. பொன்வண்ணத் தந்தாதியுரை
41. திருக்கைலாய ஞானவுலாவுரை
42. திருவாரூர் மும்மணிக்கோவையுரை

---

## சூ. ந. ச. பொன்னம்பலம்பிள்ளை

### தோற்றம்

யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஆங்கிலம் 1836-ஆம் ஆண்டுக்குச் சரியான தமிழ் ஏவிளம்பியாண்டு சித்திரைத் திங்கள் இருபத்துநான்காம் நாள் ந. ச. பொன்னம்பல பிள்ளை பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சரவணமுத்துச் செட்டியார். குலம் கார்காத்த வேளாளர் குலம். பொன்னம்பலம்பிள்ளை சிறுவராக இருக்கும் போதே அவருடைய தந்தையார் காலமானார். அக்காலத்திலே அரசாங்க அலுவலும் அதிகாரச் சீர்த்தியும் பெருந்தகைமையும் வாய்ந்தவர்களாக இருந்த இவருடைய மாமன்மார்களால் இவர் செவ்விய முறையில் நன்றாக

வளர்க்கப்பட்டார். செந்தமிழ் நாட்டிலே சீருஞ்சிறப்பும் வாய்ந்த ஆறுமுக நாவலர் இவருடைய மாமன்மார்களுள் ஒருவராவர்.

கல்விப் பயிற்சி

இவர் தம்முடைய ஐந்தாம் ஆண்டிலே கல்விப் பயிற்சிக்குப் பள்ளிக்கு அனுப்பப்பெற்றார். இளம் பருவத்திலேயே இவர் ஊக்கமாகக் கல்வியைக் கற்கத் தொடங்கினார். நுண்ணுணர்வும் திண்மையாக அமையப் பெற்றிருந்தார். பள்ளிப்படிப்பு முடிவுபெற்றபின் நல்லூரிற் கல்வியறிவிற் சிறந்து விளங்கிய கார்த்திகேய உபாத்தியாயர் என்பவரிடம் நல்வழி, நன்னெறி, வாக்குண்டாம் முதலிய அறநெறி நூல்களையும் நிகண்டு இலக்கணம் முதலியவைகளையும் படித்தார். தம் மாமனாராகிய ஆறுமுக நாவலரிடம், நன்னூற் காண்டிகையுரை, விருத்தியுரை, திருக்குறள் பரிமேலழகர் உரை, திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், பாரதம், இராமாயணம், தொல்காப்பிய நச்சினார்க்கினியர் உரை, சேனாவரையர் உரை, இளம்பூரணர் உரை, இலக்கணக்கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி முதலிய இலக்கிய இலக்கணங்களையும் மற்றும் பல சங்க நூல்களையும் ஐயமும் மாறுபாடும் இன்றி ஒழுங்குபெறக் கற்றார்.

சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணத்துத் திருக்கோயில்களில் புராணச் சொற்பொழிவுகள் பல இவரால் நன்முறையில் இயற்றப்பெற்றன. இச்சொற்பொழிவுகளைக் கேட்டவர்கள் பொருந்திய சிவப்பற்றும் திருந்திய ஒழுக்கமும் உடையவர்களாக மாறினர். புராணச் சொற்பொழிவுகளைத் திறமையாக நடத்துவதில் இவர் சீரும் சிறப்பும் உடையவராக விளங்கி

ணர். இவருடைய சொற்பொழிவை இவருடைய ஆசிரியரும் மாமனாரும் ஆகிய ஆறுமுக நாவலரே பாராட்டியும் பேசினார்.

மாணவர்கள்

இவருடைய கல்விச் சிறப்பை உணர்ந்து பலர் இவரிடம் கல்விகற்கத் தொடங்கினர். அவ்வாறு கற்றவர்களுள் பலர் பிற்காலத்தில் பெரும் புலவர்களாகவும், நூலாசிரியர்களாகவும், உரையாசிரியர்களாகவும் போதகாசிரியர்களாகவும் விளங்கிச் சிறப்படைந்தனர். அம்மாணவர்களுள் ம. க. வேற்பிள்ளை என்பவர் சிறந்த உரையாசிரியராகத் திகழ்ந்தார். அவரால் புலியூரந்தாதி, திருவாதவூரடிகள் புராணம், அபிராமியந்தாதி என்னும் நூல்கள் உரையெழுதப்பெற்றன. மற்றும் இவர் சிதம்பரத்தில் உள்ள ஆறுமுக நாவலர் கல்லூரியில் இருபத்துமூன்று ஆண்டுகள் ஆசிரியராக அமர்ந்து தமிழ்த்தொண்டு புரிந்தார். இன்னும் மாரிமுத்து உபாத்தியாயர், சிவசங்கர ஐயர், பொன்னுத்துரை ஐயர், ச. பொன்னம்பல பிள்ளை, த. கைலாசபிள்ளை, சோமாஃச் கந்தபிள்ளை, சி. சுவாமிநாத பண்டிதர், சி. சிவகுருநாத பிள்ளை, சு. சபாரத்தின முதலியார், சி. கணேசபண்டிதர், புலோலி, வ. குமாரசாமிப் புலவர், ம. தியாகராசர், கோ. வைத்தியலிங்கபிள்ளை, திருவாவடுதுறை ஆதீனம் பொன்னு ஓதுவார், சுப்பிரமணிய ஓதுவார், காரைக்குடி சொக்கலிங்கச் செட்டியார், பழநி, குமாரசாமித் தம்பிரான் முதலிய பலர் கல்வி கற்றுச் சிறப்படைந்தனர். நற்றிணைக்கு உரையெழுதிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், பொன்னம்பலபிள்ளையவர்கள் திருமறைக்காட்டில் தங்கியிருந்தபோது சிலப்பதிகாரம் முதலிய சில நூல்களைப் படித்துணர்ந்தனர்.

உரை

இப்புலவர் பிரான் நூல்கள் இயற்றியதாகத் தெரியவில்லை குன்றுதோறாடலில் ஒன்றாகிய குன்றக்குடியின் பெருமையைக் கூறுவதாகிய மயூரகிரிப் புராணமும், வில்லிபுத்தூரார் பாரதத்தில் ஆதிபருவமும் இவரால் உரையெழுதப்பெற்றன.

இறுதி

வில்லிபாரதம் முழுவதற்கும் உரையெழுதவேண்டும் என்னும் நோக்கத்துடனே ஆதிபருவ உரையை எழுதி முடித்த இவர் பிற்பகுதிகட்கு எழுதி முடிக்காமலே ஏவிளம்பியாண்டு மார்கழித்திங்கள் ஐந்தாம் நாள் (18-12-1897) தமது அறுபத்தொன்றாவது அகவையில் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

## ௧0. சபாபதி நாவலர்

தோற்றம்

யாழ்ப்பாணம் வடகோவையிலே சைவ வேளாளர் மரபிலே சாலிவாகனசகம் 1766-ல் சபாபதிநாவலர் பிறந்தார். தந்தையார் பெயர் சுயம்புநாதபிள்ளை. தாயார் பெயர் தெய்வயானை.

கல்வி

சபாபதியார் தக்க காலத்திலே கல்விப் பயிற்சிக்குப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். தொடக்கத்தில் அந்தண ஆசிரியர் ஒருவர் இவருக்குக் கல்வி கற்பித்தார். பிறகு தென்மொழி வடமொழி இரண்டினுஞ் சிறந்து விளங்கிய நீர்வேலி சிவசங்கரபண்டிதர் என்பவரிடம் அவ்விரு மொழிகளையும் கற்றார். ஆங்கிலத்தையுங் கற்றுணர்ந்தார்.

### அருளுரை பெறல்

சபாபதிநாவலர் கல்வியில் சிறந்த நிலைமையை எய்தியதும் ஆறுமுக நாவலர் விருப்பப்படி சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சிறிதுநாள் தலைமைத் தமிழ் ஆசிரியராக அமர்ந்திருந்தார். பிறகு திருவாவடுதுறையை அடைந்து அவ்வாதீனத்தில் பதினைாறாவது ஆசிரியராக எழுந்தருளியிருந்த சுப்பிரமணிய தேசிக அடிகளாரிடம் அருளுரை பெற்று அவர்கள் முன்னிலையில் பன்னிரண்டு யாண்டுகள் அறிவு நூல்களையெல்லாம் முறைமையாகக் கற்றுணர்ந்தார். இலக்கிய இலக்கணங்களினும் வேதாந்த சித்தாந்த நூல்களினும் சிறந்த புலமையுடையவராகத் திகழ்ந்தார்.

### நாவலர்

சபாபதியார் அவையோர் உளங்கொளத் தக்கவாறு நன்முறையிற் சொல்லும் ஆற்றல்மிக்காராக விளங்குந் திறனறிந்து, சுப்பிரமணிய தேசிகஅடிகளார் சபாபதியார்க்கு நாவலர் என்னும் சிறப்புப் பெயரை வழங்கியருளினர்.

### சிவஞானபோதம்

சிவஞானபோதமாபாடியம் என்னும் சைவசித்தாந்த மெய்ஞ்ஞான நூல், சைவசமயத்திற்கோர் முடிமணியாய்த் திகழ்வது. அம்மாபாடிய நூலினை அவ்வாதீனத்தார்கள் தகுந்த பக்குவிகளைக் கண்டுணர்ந்தே படிக்கக் கொடுப்பது வழக்கம். தேசிகரவர்கள் சபாபதி நாவலரிடம் கொண்டிருந்த நன்மதிப்பால் அந்நூலை நாவலர்க்கு நல்கிக் கற்றுணரச் செய்தார்கள்.

### சொற்பொழிவுகள்

நாவலருடைய பேரறிவுஞ் சொல்லாற்றலும் தமிழ் நாடெங்கணும் பரவியது. அங்கங்கு உள்ளவர்கள் நாவ

லரையழைத்துச் சொற்பொழிவுகள் செய்யுமாறு செய்த னர். நாவலர் சைவசமய வளர்ச்சியின் பொருட்டுப் பல சொற்பொழிவுகள் செய்து சைவசமயப் பெருமையை எல்லோரும் நன்குணர்ந்து கொள்ளுமாறு செய்தார். இராமநாதபுரம் சேதுபதி மன்னர், மதுரையாதீனத் தலைவர், திருவாவடுதுறைச் சுப்பிரமணியதேசிக சுவாமி கள், அம்பலவாண தேசிக சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் முத்துக்குமார தேசிக சுவாமிகள் முதலியோர் நாவலருடைய சமயத்தொண்டை மிகவும் வியந்து பாராட்டிப் போற்றினார்கள்.

## நூல்கள் இயற்றல்

நாவலர் சமயத்தொண்டு புரிந்ததோடு அமையாமல் நூல்களெழுதிக் கலைத்தொண்டு புரிவதிலும் ஈடுபட்டார். கஉ அ-செய்யுட்கள் கொண்ட ஏசுமத நிராகரணம் என்னும் நூலை எழுதிக் கிறித்துமதக் கொள்கைகளுக்குத் தடை யாக முட்டுக்கட்டை போட்டார்.

அகூரு - செய்யுட்கள்கொண்ட சிதம்பர சபாநாத புராணம் என்னும் புராணத்தைப்பாடி 1885-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இந்நூல் 'ஏமசபாநாத மான்மியம்' என்னும் வடநூலின் மொழிபெயர்ப்பாகும்.

அப்பயதீட்சிதர் என்பார் இயற்றிய சிவகர்ணாமிர்தம் என்னும் வடமொழி நூலினைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். மேலும் மேற்படி தீட்சிதரால் இயற்றப் பெற்ற பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம் என்னும் வடமொழி நூல்களையுந் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

## இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்

1. ஏசுமத நிராகரணம்
2. சிவகர்ணாமிர்தம்

3. பாரத தாற்பரிய சங்கிரகம்
4. இராமாயண தாற்பரிய சங்கிரகம்
5. சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்
6. சிதம்பர சபாநாத புராணம்
7. திருச்சிற்றம்பல யமகவந்தாதி
8. திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி
9. மாவையந்தாதி
10. இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு
11. வைதீக காவிய தூடண மறுப்பு
12. நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம்
13. திராவிடப் பிரகாசிகை

என்பன. இந்நூல்களுள் 'திராவிடப் பிரகாசிகை' என்னும் நூல் எல்லோராலும் போற்றப்பெற்றுச் சிறந்து விளங்குகின்றது.

நாவலரும் காவலரும்

நாவலரிடத்திலே சேதுகாவலர் மிகுந்த மதிப்புப் பாராட்டினர். நாவலர் சிதம்பரஞ் சென்றார். அங்கு சென்ற பாஸ்கர சேதுபதிமன்னர் சபாபதிநாவலரைக் கண்டு உரையாடினர். அவரைத் தம்முடன் இராமநாத புரத்திற்கு அழைத்துச்சென்று அரண்மனையில் தங்கச் செய்தார்: சேதுநாட்டில் சிலகாலந் தங்கியிருந்து சமயத் தொண்டு செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். நாவலர் அதற்கு இணங்கிச் சிலகாலம் அங்கே தங்கியிருந்தார். பிறகு காவலரோடு திருஉத்தரகோச மங்கைக்குச் சென்றார். இருவரும் இறைவழிபாடு இயற்றினர்கள். பிறகு காவலர் தலைமையில் நாவலர் "வேதநெறி தழைத்தோங்க" என்னும் பெரியபுராணச் செய்யுளின் பகுதியை அடிப்படையாகக்கொண்டு மிகச்சிறந்த ஒரு பெரிய சொற்பொழிவு செய்தார். அதன்பிறகு சேதுவேந்தரோடு பல சிவப்பதிகட்கு இறைவழிபாட்டின் பொருட்டுச் சென்றார்.

திருச்செந்தூருக்குச் செல்லும் வழியில் தூத்துக்குடியில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதன்பிறகு திருச்செந்தூர், திருக்குற்றாலம் ஆகிய இடங்கட்குஞ் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். பிறகு அரசரும் புலவரும் இராமநாதபுரம் அடைந்தனர். சேதுவேந்தர் நாவலர்க்கு மூவாயிரம் வெண்பொற்காசுகள் நன்கொடை வழங்கியதுடன் வேண்டியபோது உதவிசெய்வதாகவும் உரைத்தார். நாவலர் சேதுவேந்தரிடம் உடன்பாடு பெற்றுச் சென்னையை அடைந்தார்.

ஞானாமிர்தம்

சென்னையை அடைந்த சபாபதி நாவலர் அச்சகம் ஒன்றை ஏற்படுத்தினார். அவ்வச்சுக்கூடத்தில் இருந்து ஞானாமிர்தம் என்னும் சிறந்த பத்திரிகையை வெளிப்படுத்தினார். அப்பத்திரிகை எல்லோரானும் புகழ்ந்தோதும்படியாக விளங்கிற்று.

சென்னையிற் சொற்பொழிவு

நாவலர் சென்னையில் தங்கியிருந்தபோது திருமயிலை, திருவொற்றியூர், கந்தசாமிகோயில் முதலிய இடங்களில் சைவசமயச் சொற்பொழிவுகள் பலசெய்து சைவசமயத்தின் தனிச்சிறப்பை எல்லோரும் உணருமாறு செய்தார்.

நாவலரின் மாணவர்கள்

நாவலரிடத்தில் பல மாணவர்கள் கல்விகற்றுச் சிறப்படைந்தனர். அவர்களுள் சிதம்பரம் அ. சோமசுந்தர முதலியார், விழுப்புரம். இராமசாமிப்பிள்ளை, மாகறல் - கார்த்திகேய முதலியார், மயிலை - சு. சிங்காரவேலு முதலியார், மாவை - விசுவநாதபிள்ளை, சிதம்பரம் - சிவராமச் செட்டியார், திருமயிலை - பாலசுந்தர முதலியார், சுழிபுரம்-

சிவப்பிரகாச பண்டிதர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

மறைவு

1903-ஆம் ஆண்டில் நாவலர் சிதம்பரத்தில் தங்கியிருந்தார். அப்போதுஞ் சைவசமயச் சொற்பொழிவுகள் பல செய்தார். பிறகு திருத்தில்லையில் தானே 1903-ஆம் ஆண்டில் தமது ஐம்பத்தெட்டாவது அகவையில் கூத்தப்பிரானுடைய இணையடித்தாமரைமலர்களை எய்தினர்.

---

## கக. சோமசுந்தர நாயகர்

தோற்றம்

1846-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ஆறும்நாள் ஞாயிற்றுக்கிழமையிலே, சென்னை சூளையிலே வைணவக் குடும்பம் ஒன்றிலே சோமசுந்தர நாயகர் பிறந்தார். நாயகருக்கு இடப்பெற்ற பிள்ளைப்பெயர் அரங்கசாமி என்பர்.

கல்விப் பயிற்சி

அரங்கசாமியின் உறவினர் ஒருவர் சைவசமயப் பற்றுடன் வேதாந்தப் பற்றுடையவராகவும் அச்சுதாநந்தர் என்னும் பெயருடையவராகவும் இருந்தார். அவர் அரங்கசாமி என்னும் பெயரைச் சோமசுந்தரம் என மாற்றி அமைத்தார். கல்விப்பயிற்சி முதலியவைகளைத் தொடங்கி வைத்துத் தென்மொழி வடமொழிகளைக் கற்பித்தார். பிறகு பள்ளியில் சேர்ந்து ஆங்கிலமுந் தெலுங்கும் பயின்றார். இராசதானிக் கல்லூரியில் புகுமுக வகுப்பு வரையிற் பயின்றார். நான்கு மொழிகளை நன்கு கற்

றுணர்ந்த நாயகர்க்கு நல்ல அலுவல் ஒன்று அகப்பட்டது. அதனை மேற்கொண்டு வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தார்.

சமய ஆராய்ச்சி

அச்சுதாநந்தர் வேதாந்தத்தில் பற்றுடையவராக இருந்தார். ஆகவே தம் மாணவராகிய சோமசுந்தர நாயகர்க்கும் வேதாந்தத்தையே கற்பிக்கத்தொடங்கினர். நாயகரோ ஆசிரியர்க்கு மிஞ்சிய மாணவராக இருந்தார். வேதாந்த சித்தாந்த முடிவுகளின் உயர்வு தாழ்வுகளைச் சீர்தூக்கிப்பார்த்தார். வேதாந்தத்தைவிடச் சித்தாந்தமே நாயகருடைய மனதிற்குப் பிடித்திருந்தது. ஆகவே அவர் தம் ஆசிரியராகிய அச்சுதாநந்தரிடம் கேள்விகள் பலவற்றைக் கேட்கத்தொடங்கினர். அச்சுதாநந்தர் அவைகட்கெல்லாம் தக்கவாறு மறுமொழி கூருமற்போகவே அவருக்குச் சித்தாந்தத்தைப்பற்றிக் கூறத்தொடங்கினர். அப்போது நாயகர்க்கு அகவை இருபது. நண்பர் ஒருவரால் கொடுக்கப்பெற்ற மெய்கண்டசாத்திரம் முழுவதையும் தாமே படித்துணர்ந்தார். தம் ஆசிரியருக்குச் சித்தாந்தத்தில் பற்றுண்டாகுமாறு பல செய்திகளை எடுத்துச் சொன்னர்.

வேதாந்தி சித்தாந்தியாதல்

சோமசுந்தர நாயகராகிய தம் மாணவரின் உரைகளைக் கேட்ட அச்சுதாநந்தருக்கு உள்ளம் மாறியது. சைவசித்தாந்தத்தைப் பின்பற்றவேண்டும் என்னும் எண்ணம் உண்டாகியது. அவர் காஞ்சியை அடைந்தார். ஆதிசைவரிடம் ஆசாரிய அபிடேகம் பெற்று ஏகாம்பர சிவயோகியார் என்று தீட்சைப்பெயர் பெற்ருர்.

நாயகர் சமயத்தொண்டு

சோமசுந்தர நாயகருடைய உள்ளம் சமயத்தொண்டில் அழுத்தமாகப் பற்றியது. தாம் பார்த்துக்கொண்டிருந்த அலுவலை ஒரு பொருளாக மதியாமல் அதனை 1881-ஆம் ஆண்டில் விட்டுவிட்டுச் சைவத்திற்கும் தமிழுக்கும் உழைக்கத்தொடங்கினார்.

சைவ நூல்களைத் தக்கார் வாயிலாகப் பாடங்கேட்டு அவைகளிற் சிறந்த புலமையிலே கைவரப்பெற்றார். சமய வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் நூல்கள் எழுதுவதையும் நாயகர் தமது கடமையாகக்கொண்டார். முப்பத்து மூன்று ஆண்டுகள் வரை நாயகர் நூலாசிரியராக இருந்து நூறு நூல்கட்குமேல் எழுதி வெளிப்படுத்தினார். சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தமிழில் உரை நடையாக முதன் முதலில் எழுதி வெளிப்படுத்தியவர் நாயகர்தாம். இவர் தமக்கென ஒருவகையான உரைநடையை ஏற்படுத்திக் கொண்டு அந்நடையில் எழுதிவந்தார். மக்களும் நாயகருடைய உரைநடையைப் போற்றிப் படித்தனர்.

சொற்பொழிவுகள்

நாயகர் நூலாசிரியராக இருந்ததோடல்லாமல் சிறந்த சொற்பொழிவாளராகவும் இலங்கினார். தமிழ் நாட்டு மக்களைத் தமது சொற்பொழிவு முழக்கத்தால் தட்டி எழுப்பினார். நாயகருடைய சொற்பொழிவைக் கேட்டவர்கள் உள்ளங்களித்துப் போற்றினர். தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு பெரிய நகரிலும் நாயகருடைய சொற்பொழிவு நிகழ்ந்தது. சைவ சித்தாந்தத்தின் பெருமையும் சிறப்பும் நாயகருடைய சொற்பொழிவால் மிகுதிப்பட்டு விளங்கின. நாயகர் சொற்பொழிவு செய்யுமிடத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் ஒருங்கு திரண்டு ஒருமை மனதுடன் சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

### மாணவர்கள்

நாயகர் தம்மையடுத்துப் பாடங்கேட்க விரும்பிய மாணவர்கட்குச் சமய நூல்களையும் இலக்கண இலக்கிய நூல்களையும் நன்கு போதித்து அவர்கள் தம் அவாவையும் நிறைவேற்றினர். அவ்வாறு கற்றுத் தேர்ந்து சிறந்தவர்கள் பலர். தமிழ்மலையாக விளங்கியிருந்த மறைமலையடிகளாரும் நாயகரிடம் கல்வி பயின்றவராவர்.

### நன்மதிப்பு

நாளடைவில் நாயகரின் சைவத்தொண்டின் சிறப்புத் தமிழ் நாட்டு அறிஞர்கள் எல்லோருடைய உள்ளத்திலும் உவகையூட்டியது. ஆதீனத் தலைவர்கள், அரசர்கள், பெருநிலக்கிழார்கள், செல்வர்கள் முதலாயினோர் நாயகருக்கு வேண்டிய நல்லுதவிகள் பலவற்றையும் புரிந்தனர். சேதுபதி மன்னர் 'வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்'' என்னும் பட்டப்பெயர் வழங்கிச் சிறப்புச் செய்தார். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர், 'பரசமய கோளரி' என்னுஞ் சிறப்புப் பெயர் தந்து வாழ்த்துரை கூறினர்.

### இறுதி

சைவமுந் தமிழுந் தழைத் தினிதோங்கத் தொண்டு செய்து நின்ற நாயகரின் உடல்நலம் 1898 - ஆம் ஆண்டு முதல் குன்றத் தொடங்கியது. ஆயினும் நாயகர் தமது உடல் நலக்குறைவைப் பொருட்படுத்தாமல் இறுதிவரை சமயத்தொண்டு செய்துகொண்டேயிருந்தார். முடிவுகாலம் நெருங்கியபோது தம் மகனைத் தேவார திருவாசகங்களை ஓதச்செய்து கேட்டுக்கொண்டிருந்தார். 1901 ஆம் ஆண்டு பிப்ரவரி இருபத்திரண்டாம் நாள் வெள்ளிக்கிழமை மாலை நான்கு மணிக்குச் சிவராச யோகத்தில் அமர்ந்து அன்று மாலை ஆறு மணிக்கு இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

1. வேதபாகிய சமாச கண்டனம்
2. சிவாதிக்கிய ரத்நாவளி
3. சைவ சூளாமணி
4. பரதத்துவப்பிரகாசிகை
5. பிரமதத்துவ நிரூபணம்
6. அர்ச்சா தீபம்
7. ஆதி சைவப் பிரபாவம்
8. சித்தாந்த ரத்நாகரம்
9. சித்தாந்த ஞானபோதம்
10. மெய்கண்ட சிவதூடண நிக்கிரகம்
11. ஆசார்ய பிரபாவம்

என்பன நாயகர் எழுதிய நூல்களில் சிலவாம்.

---

## ௧௨. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்

தோற்றம்

இலட்சுமி நாராயண அவதானிகள் என்னும் இயற்பெயருடைய நாராயணசாமி ஐயர் தஞ்சைமாவட்டம் திருத்துறைப்பூண்டிச் சிறு கூற்றத்தில் உள்ள பின்னத்தூரில், அந்தணர் குலத்தில் கௌண்டின்னிய கோத்திரத்தில் ஆங்கிலம் 1862-ஆம் ஆண்டுக்குச் சரியான தமிழ்த் துந்துபி யாண்டு ஆவணித் திங்கள் இருபத்தொன்பதாம் நாள் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் வேங்கடகிருட்டிண அவதானிகள் எனவும் அப்பாசாமி ஐயர் எனவும் வழங்கியது. தாயார் பெயர் சீதாலட்சுமி அம்மாள். நாராயணசாமி ஐயருடைய தந்தையார் மருத்துவ நூலிற் சிறந்த பயிற்சியுடையவர். அறத்திற்கு மருத்துவஞ் செய்பவர். பொறுமைக்குணம் உள்ளவர். நல்லவர்களைப் போற்றுவதில் கருத்துள்ளவர். அப்பாசாமி ஐயர் தமது குடும்பப் பொருள்களைப் பாதுகாத்துப் பெருக்குவதில் தமது கருத்

தைச் செலுத்தி ஊக்கங்காட்டவில்லை. இளமைக் காலத்திலேயே விதவைகளாகி வந்திருந்த அப்பாசாமி ஐயருடைய உடன்பிறந்தார்கள் இருவர் குடும்பப் பொறுப்பை மேற்கொண்டு கண்ணுங் கருத்துமாகச் செயலாற்றினர். அவ்வம்மையார்களுள் ஒருவர் பெயர் உருக்குமணியம்மாள். மற்றொருவர் பெயர் சேஷியம்மாள்.

உடன் பிறந்தவர்கள்

நாராயணசாமி ஐயருக்கு உடன்பிறந்தவர்கள் ஏழு பேர். அவர்களில் ஆண்கள் நான்குபேர். பெண்கள் மூன்றுபேர். ஆண்களுள் நாராயணசாமி ஐயரே மூத்தவர். பிள்ளைகளெல்லோரையும் அன்புடன் வளர்க்கும் பொறுப்பை அத்தை சேஷியம்மாளே மேற்கொண்டனர்.

கல்வி

நாராயணசாமி ஐயர் பள்ளிக் கல்வியை உரிய காலத்தில் ஒழுங்காகக் கற்றார். பிறகு வடமொழியைச் சிறிது கற்றுக்கொண்டு மறையோதுதலையும் மேற்கொண்டார். பின்னத்தூரில் பள்ளிக்கூடம் வைத்திருந்த கிருட்டிணபுரம் முத்துராம பாரதியார் என்பவரிடம் தமிழ் படித்தார். அக்காலத்தில் ஒருநாள் ஐயர் மன்னார்குடிக்குச் சென்றார். அப்பொழுது ஆங்கிருந்த நாராயணசாமிப்பிள்ளை என்னும் தமிழ்ப்புலவர் இராமாயணச் செய்யுட்கள் சிலவற்றிற்குப் பொருள் விரித்துரைத்தார். நாராயணசாமிப் பிள்ளையின் விரிவுரையைக் கேட்ட நாராயணசாமி ஐயருக்குத் தமிழிடத்திலே பற்று மிகுதிப்பட்டது. தாம் இராமாயணம் முழுவதையுங் கற்றுணரவேண்டும் என்று பேரவாக் கொண்டார். இந்நிகழ்ச்சிதான் இவருடைய தமிழ்ப் பயிற்சிக்குக் காரணமாக இருந்தது. கம்பராமாயணத்தில் சுந்தரகாண்டத்தை முதலில் வாங்கிப்படித்தார். பாடல்

களை மனப்பாடஞ்செய்யும் ஆற்றல் இவருக்கு மிகுதியாக இருந்தது. எதைப் படித்தபோதினும் அதனை நெட்டுருச் செய்துவிடுவது ஐயருக்கு வழக்கம்.

படிக்காதே

ஐயர் தமிழ்மொழியைக் கற்கவேண்டும் என்னும் பேரவாவினால் எப்பொழுதும் நூலுங் கையுமாகவே இருந்தார். ஐயர் கையில் எப்பொழுதும் நூல்களை வைத்துப் படித்துக்கொண்டிருந்தது அத்தை சேஷியம்மாளுக்குப் பிடிக்கவில்லை. பையன் வீணாக ஏட்டைக் கட்டிக்கொண்டு அழுகிறானே. சோம்பேறியாகக் கெட்டுப்போனாலும் போவான் என அத்தையார் எண்ணினார். அவ்வத்தை கல்வியறிவு சிறிதும் இல்லாதவர். வேறு என்ன எண்ணந் தோன்றும்? அத்தை மருகனைப் பார்த்துத், "தம்பி எப்பொழுது பார்த்தாலும் ஏடுங் கையுமாக இருக்கிறாயே! இதனால் யாது பயன்? குடும்பத் தொழில்களைப் பார்க்க வேண்டாமா? ஆகையால் வீணாகப் படித்துக் காலத்தைப் போக்காதே" என்று அறிவுரைகள் வழங்கினார். அன்பு மிக்க அத்தையின் கட்டளை என்றாலே பிள்ளைகளுக்கெல்லாம் அச்சம். அவர்கள் அத்தைக்குக் கீழ்ப்படிந்து போவார்கள். அதனால் நாராயணசாமி ஐயர் அத்தைக்குத் தெரியாமல் வயல் வரப்புகளுக்குச் சென்று கருவேல மரங்களுக்குக் கீழ் அமர்ந்து படிக்கும் வழக்கத்தை மேற்கொண்டார்.

பொன்னம்பலபிள்ளை

ஐயர், இவ்வாறு கல்வி கற்றுக் கவிபாடும் ஆற்றலிற் சிறந்து விளங்கினார். பல நூல்களைத் தாமே கற்றபடியினால் அவைகளிற் பல ஐயங்கள் உண்டாயின. ஐயத்தை அகற்றிக்கொள்வதற்குத் தக்க காலத்தை எதிர்நோக்கி

யிருந்தார். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரின் மருகரும் "வித்வ சிரோமணி" என்னுஞ் சிறப்புப் பெயர் பெற்றவரு மாகிய பொன்னம்பல பிள்ளை என்பவர் அந்நாளில் சிறந்த தமிழ் அறிஞராக விளங்கினர். அவர் சிறிது காலந் திரு மறைக்காட்டில் வந்து தங்கியிருந்தார். நாராயணசாமி ஐயர் அவரிடஞ் சென்றார். தம்மை அறிமுகஞ் செய்து கொண்டார். அவரால் தம்முடைய ஐயங்களைப் போக்கிக் கொண்டார். மேலும் அவரிடம் ஐம்பெருங் காப்பியங் களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தையும் பாடங் கேட்டார்.

நூல்கள் இயற்றல்

ஐயர், நீலகண்டேசுரக் கோவை என்னும் பெயருடன் கோவை ஒன்று பாடி, மன்னார்குடியில் பொன்னம்பல பிள் ளையின் முன்னிலையில் அரங்கேற்றினர். மேலும் அவர் விரும்பியவாறு வடமொழியில் காளிதாசர் இயற்றிய பிர கசன நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார். ஐயர், தமிழ்நாட்டின் பழைய வரலாறுகளை ஆராய்வதில் மிகுந்த விருப்பம் உள்ளவர். கோயில்களிலும் பிறவிடங்களிலும் வெட்டியுள்ள பழைய கல்வெட்டுக்களைப் படித்தறியும் ஆற் றல் அமைந்தவர். தமிழ்ப்புலவர்களின் வரலாறுகளை நன்கு அறிந்தவர். அவர்கள் அவ்வச்சமயங்களிற் பாடிய செய்யுட்களை மனத்தமைத்து வேண்டியபோது எடுத் துரைக்க வல்லவர். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இவருக்குச் சிறந்த பயிற்சியுண்டு. அதிற் காட்டிய மேற் கோள்களுக்கெல்லாம் அகரவரிசை ஒன்றை இவர் எழுதி வைத்திருந்தார்.

இவரால் இயற்றப்பட்ட நூல்கள்:

1. நீலகண்டேசுரக் கோவை.
2. பிரகசன நாடகம்.

3. இடும்பாவன புராணம்.
4. இறையனாராற்றுப்படை.
5. சிவபுராணம்.
6. களப்பாள் புராணம்.
7. அரதைக் கோவை.
8. வீரகாவியம்.
9. சிவகீதை.
10. நரிவிருத்தம்.
11. மாணுக்கராற்றுப்படை.
12. இயன்மொழி வாழ்த்து.
13. தென் தில்லை உலா.
14. தென் தில்லைக் கலம்பகம்.
15. பழையது விடுதூது.
16. மருதப்பாட்டு.
17. செருப்பு விடுதூது.
18. தமிழ்நாயகமாலை.
19. இராமாயண அகவல்.
20. நற்றிணையுரை.

முதலியன.

நற்றிணையுரை

சங்க நூல்களை உரையோடு வெளியிடுவதற்கு உ. வே. சாமிநாதையரைப் போல் நாராயணசாமி ஐயரும் பெரு முயற்சி செய்தார். குறுந்தொகையை நன்றாக ஆராய்ச்சி செய்தார். நற்றிணைக்கு உரையெழுதி முடித்து அச்சிட்டார். அகநானூற்றுக்கு உரையெழுதிக்கொண்டிருந்தார்.

இறுதி

நற்றிணை உரை அச்சாகிக்கொண்டிருந்தபோது ஐயருக்கிருந்த நீரிழிவு நோய் மிகுதிப்பட்டது. இறப்பதற்குள் நற்றிணை உரைப்புத்தகத்தைக் கண்ணுற் பார்த்து விட்டுச் சாகவேண்டுமென்பது ஐயருடைய கடைசி விருப்பமாக இருந்தது. ஆயினும் அவ்விருப்பம் நிறை

வேறில்லை. 1899-ஆம் ஆண்டுமுதல் ஐயர் இறக்கும் வரை கும்பகோணம் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக இருந்தார். நீரிழிவு நோய் மிகுதிப்பட்டு வருத்தியதால் 1914-ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் 30-ஆம் நாளுக்குச் சரியான தமிழ் ஆனந்த ஆண்டு ஆடித்திங்கள் பதினைந்தாம் நாள் வியாழக்கிழமை தமது பிறப்பிடமாகிய பின்னத்தூரிலே காலமானார். இவருக்கு இரண்டு பெண்மக்கள் மட்டும் பிறந்தனர்.

---

## கரு. வெண்பாப்புலி வேலுச்சாமிப் பிள்ளை

### தோற்றம்

பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம், உ. வே. சாமிநாத ஐயரோடு ஒருங்கு கற்றவராகிய வேலுச்சாமிப் பிள்ளை என்பவர், 1854-ஆம் ஆண்டிலே சிதம்பரத்திற்கு வடகிழக்கில் ஐந்துகல் தொலைவில் உள்ள தில்லைவிடங்கன் என்னும் ஊரிலே, சைவவேளாண் மரபிலே பிறந்தார். புலியூர் வெண்பா முதலிய நூல்கள் இயற்றியவராகிய தில்லைவிடங்கன் மாரிமுத்துப் பிள்ளை என்பவருடைய வழிமுறையிலே தோன்றிய சுப்பிரமணிய பிள்ளை என்பவர் வேலுச்சாமிப் பிள்ளையின் தந்தையாராவர், தாயார் பெயர் சுந்தரம்மாள் என்பது.

### கல்வி

வேலுச்சாமிப் பிள்ளை தமது இளம்பருவத்தில் பள்ளியிற் சிறிது கல்விகற்றார். பிறகு தம் நிலங்களில் பயிர்த்தொழில் வேலைகளைப் பார்க்கத் தொடங்கினார். பிறகு இவருடைய தகப்பனார் இவரைச் சென்னை மாநகருக்கு அனுப்பி ஆங்கிலம் படிக்கச்செய்தார். மில்லர் கல்

லூரியில் ஆங்கிலமும், அங்கு தமிழ்ப்பேராசிரியராக இருந்த இவருடைய உறவினராகிய சின்னச்சாமிப் பிள்ளை என்பவரிடம் தமிழுங் கற்றார். மேலும் அப்பொழுது அங்கிருந்த அட்டாவதானம் சபாபதி முதலியார் என்பவரிடமுந் தமிழ் நூல்களைப் பாடங்கேட்டார். இரண்டு மூன்று ஆண்டுகட்குப் பிறகு சென்னையிலிருந்து தமது ஊருக்கு வந்தார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் கற்றல்

வேலுச்சாமியின் உள்ளம் மேன்மேலுங் கற்றலை விழைந்தது. நன்றாகக் கல்விகற்றுத் தாமும் தம்முடைய முன்னோர்களைப்போல் விளங்கவேண்டும் என்று எண்ணினார். தகுந்த ஆசிரியர் அகப்படாமல் திண்டாடினார். தமது திண்டாட்டத்தை அட்டாவதானம் சபாபதி முதலியாருக்குத் தெரியப்படுத்தினார். அவர் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கட்கு உதவிக் கடிதம் ஒன்று எழுதியனுப்பிப் "பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் சென்றால் நன்றாகக் கல்விகற்கலாம்" என்று தெரியப்படுத்தினார். வேலுச்சாமிப் பிள்ளை எவருக்குந் தெரியாமல் புறப்பட்டுத் திருவாவடுதுறையை அடைந்து அட்டாவதானம் சபாபதி முதலியாருடைய உதவிக் கடிதத்தைக் கொடுத்தார். பெரும்புலவர் வேலுச்சாமியைத் தம்முடைய மாணவராக ஏற்று நாலைந்தாண்டுகள் கல்வி கற்பித்தார். வேலுச்சாமிப் பிள்ளை கருத்துடன் கற்ற படியினால் கல்விவளம்பெருகியது.

வெண்பாப்புலி

வேலுச்சாமி நாளடைவில் செய்யுள் செய்யும் ஆற்றலையும் அடைந்தார். வெண்பாப் பாடுவது சிறிது தொல்லையான வேலை. மாமுன்நிரை காய்முன் விளமுன்நேர்

என்னும் இலக்கணத்தைக் கருத்துடன் கடைப்பிடித்து வெண்பாவைப் பாடுதல்வேண்டும். இன்றேல் வெண்பாவின் தளை தட்டிப்போகும். இதனைக் கருதியே, "எல்லோர்க்கும் வெண்பாப்புலி" என்ற பாட்டும் ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய வெண்பா வேலுச்சாமிக்கு விரைவாகவும் எளிதாகவும் பாடுமாறு அமைந்தது. வேலுச்சாமி விரைவாக எளிதாக வெண்பாப்பாடுதலைப் பெரும் புலவர் மீனுட்சிசுந்தரம் பிள்ளை கண்டு வியந்து மகிழ்ந்தார். வேலுச்சாமிக்கு "வெண்பாப்புலி" என்று சிறப்புப் பெயர் வழங்கினர். அச்சொல் அவருடைய பெயருக்குமுன்னல் அமைந்து வழங்குவதாயிற்று.

### தேசிகர்பால் தீக்கை

பெரும்புலவர் மீனுட்சிசுந்தரம் பிள்ளை காலமான பிறகு வெண்பாப்புலி வருந்தினர். திருமிகு சுப்பிரமணிய தேசிகர்பால் சிலநூல்களைப் பயின்றார். பிறகு அப்பெரியாரிடமே தீக்கைபெற்றுக் கொண்டு தமது ஊருக்குத் திரும்பினர்.

### தமிழாசிரியர்

வெண்பாப்புலி தமது ஊரைவிட்டுச் சென்னைக்குச் சென்றார். அங்குப் பல பெரிய இடங்களில் பாடஞ்சொல்லுதலை மேற்கொண்டிருந்தார். பிறகு காஞ்சிபுரத்தை அடைந்து பச்சையப்பன் உயர்தரப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக அமர்ந்தார். அங்குப் பள்ளிவேலையோடு நூல் இயற்றுதல் முதலிய பிறவேலையையும் மேற்கொண்டிருந்தார்.

### புராணம் பாடுதல்

திருக்கச்சூர் ஆலக்கோயில் என்பது தொண்டை நாட்டில் தேவாரம் பெற்ற முப்பத்திரண்டு சிவப்பதிகளில்

ஒன்று. அச்சிவப்பதிப் பூசகர் ஒருநாள் வெண்பாப்புலியைக் கண்டு அப்பதிக்குப் புராணம் இல்லாக்குறையைப் போக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். வெண்பாப் புலியார் பெரும்புலவரிடம் இருந்த காலையில் அப்புலவர்பிரான் பாடிய பல புராணங்களைத் தமது கையால் எழுதும் பேறுபெற்றவர். இப்போது தாமே புராணம் பாட நேர்ந்தமைக்கு மகிழ்ந்து அச்சிவப்பதியின் வரலாறுகளை நன்கு ஆராய்ந்து, 'திருக்கச்சூர் ஆலக்கோயில் புராணம்' என்னும் பெயருடன் புராணம் ஒன்றுபாடி முடித்தார். அப்புராணத்தின் அரங்கேற்றம் உருத்திரோற்காரி யாண்டு சித்திரைத் திங்கள் பதினேழாம் நாள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

### இறுதி

வேலுச்சாமி மேலும் பல நூல்கள் செய்தார். இறுதியில் அட்சய ஆண்டு சித்திரைத் திங்கள் இருபத்தொன்பதாம்நாள் இறைவன் திருவடி நீழலை எய்தினார்.

### இவர் இயற்றிய நூல்கள்

1. கந்த புராண வெண்பா [5665-வெண்பா].
2. திருவேட்டக்குடிப் புராணம்.
3. தில்லைவிடங்கன் புராணம்
4. திருக்கச்சூர் ஆலக்கோயில் புராணம்
5. தேவார சிவதல வெண்பா.
6. தேவார வைப்புத்தலக் கட்டளைக் கலித்துறை.
7. திருத்தில்லை நிரோட்டக யமக வந்தாதி முதலியன.

## கசு. சுவாமிநாத பண்டிதர்

### தோற்றம்

தம்பையா பிள்ளை என்று பிள்ளைப் பெயர்பெற்ற சுவாமிநாத பண்டிதர் யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணையிலே சின்னத்தம்பிப் பிள்ளை என்பவரின் திருமகனாகத் தோன்றினார்.

### கல்வி நலம்

இளமையிற் பள்ளிக் கல்வியை ஒழுங்காகக் கற்றார். பிறகு தமிழ்நூல்களைப் படித்துப் புலவராக எண்ணினார். ஆறுமுக நாவலருடைய மருகரும் மாணவரும் பெரும்புலவரும் ஆகிய பொன்னம்பலம் பிள்ளையிடம் இலக்கிய இலக்கணங்களை யெல்லாம் வரன்முறையாகக் கற்று, அவைகளில் நல்ல தேர்ச்சியடைந்து அறிஞரானார்.

### சமயத்தொண்டும் தமிழ்த்தொண்டும்

சைவ சமயத்தைப் பாதுகாப்பதினும் தமிழ் மொழியை வளர்ப்பதினும் தமது கருத்தைச் செலுத்திக் காலம் முழுவதையும் அவைகட்கே செலவிட்டார். சைவத் தொண்டிற்கும் தமிழ்த்தொண்டிற்கும் தக்க இடம் இந்தியா என்பதை உணர்ந்த அறிஞர் இந்தியாவிற்கு வந்து தமது திருத்தொண்டைத் தொடங்கினார்.

### நூல்கள் வெளியிடுதல்

1905-ஆம் ஆண்டில் சென்னையில் சைவவித்தியாது பாலன அச்சுக்கூடம் என்னும் பெயருடன் அச்சுக்கூடம் ஒன்றை ஏற்படுத்தினார். அவ்வச்சுக்கூடத்தில் சிவஞான போதமாபாடியம், திருக்கோவையார் உண்மை, தேவார அடங்கன்முறை, திருவிளையாடற் புராணம், குமரகுருபரர் பிரபந்தம், சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தம் முதலிய

சைவ நூல்களை அழகிய முறையில் திருத்தமான பதிப்புக் களாகப் பெரும்பொருள் செலவிட்டு அச்சிற்பதிப்பித்துக் குறைந்த விலைக்குக் கொடுத்து நற்புகழும் நல்வினையும் ஈட்டினார். மற்றும் பல நூல்களை அச்சிட்டு வெளி யிட்டார்.

செந்திநாதையர் தேடிவைத்திருந்த நூல்களையெல் லாம் இவர் பெரும்பொருள் கொடுத்து வாங்கித் தொகுத்து வைத்திருந்தார். ஒவ்வொன்றாக அரிய சைவ நூல்களை வெளிப்படுத்த எண்ணியிருந்தார். சிவஞான சித்தியாருக்கு வெள்ளியம்பலத் தம்பிரான் எழுதிய ஞான வரணப்பேருரையை அச்சிடுவதற்கு ஆராய்ச்சி செய்து வைத்திருந்தார். சிவஞானபோத மாபாடியம் இரண்டாம் பதிப்புக்குப் பல அரிய குறிப்புகள் எழுதிவைத்திருந்தார். பொருட்குறைவால் இவைகளையெல்லாம் அவர் உடனுக் குடன் நிறைவேற்றவில்லை. இவர் முதன்முதலாக அச் சிட்டு வெளியிட்டது திருவாதவூரடிகள் புராணம் என்ப.

சைவத்தொண்டு

சைவசமய வளர்ச்சிக்குத் தம்மால் இயன்றவழிகளி லெல்லாம் உழைத்தலை இவர் கடமையாகக் கொண்டிருந் தார். சைவசித்தாந்த சமாசக்கூட்டங்கட்குத் தலைமை தாங்கி அரிய சொற்பொழிவுகள் செய்து சைவசமயப் பெருமையை எல்லோரும் இனிதுணருமாறு செய்தார். கும்பகோணம் மகாமக காலங்களில் சைவப் பெருங்கூட் டங்கள் கூட்டி நடத்தினார். பெருங்கூட்டஞ்சேரும் அத்த கைய சமயங்களில் சைவக்கூட்டங்களைக் கூட்டி நடத்தினால் எல்லோரும் எளிதில் பயன்பெறுவர். சமய வளர்ச்சிக்குந் தக்க வாய்ப்பாகும் என்று இவர் அறிந்திருந்தபடியினால் தான் சிறப்பான விழாக்காலங்களில் சமயத்தொண்டாற்

றுதல் சிறந்தது என்று அதனை மேற்கொண்டார். சைவ நூல்கள் பலவற்றையும் இலக்கண இலக்கியங்களையும் தம்மை யடுத்த மாணவர்கட்குப் போதித்தார். திருச்செந்தூரிலே சுப்பிரமணிய வித்தியாசாலை என்னும் பெயருடன் வித்தியா சாலை ஒன்று ஏற்படுத்திப் பொருள் உதவி செய்தார்.

குண நலன் முதலியன

இவர் தந்நலம் குறித்துச் சிறிதும் உழைத்தவரல்லர். ஆறுமுகநாவலரைப்போல் தாமும் கலையறம் சைவபரிபாலனம் முதலியவைகளை நடத்துதல்வேண்டும் என்னும் எண்ணத்தோடு நாவலரைப்போல் குடும்பத்தொடர்பில்லாமல் செயல்களில் ஈடுபட்டிருந்தார். நாவலரைப்போல் இவரும் சைவசமய இழிப்புரை முதலியவைகளைப் பொறுக்க மாட்டார். சைவாசார ஒழுக்கத்தில் சிறிதும் தளரமாட்டார். பிற்காலத்தில் சிதம்பரத்தைத் தமது இருப்பிடமாகக்கொண்டு அவ்விடமே உறைந்திருந்தார். திருவண்ணாமலைத் திருக்கார்த்திகை விளக்கு வழிபாடு, தில்லைக்கூத்தப்பிரான் திருக்கூத்து முதலியவைகளை வழக்கமாகக் கண்டு போற்றும் முறையை உறுதியாக மேற்கொண்டிருந்தார். தருமபுர ஆதீனத்தாரால் வெளியிடப்பெற்ற நூல்கள் பல இவருடைய பார்வையின்கீழ் வெளிப்படுத்தப்பட்டன. தருமபுர ஆதீனத்தலைவரவர்கள் இவருக்கு 'வித்வத்சிரோமணி' என்னும் பட்டம் அளித்துச் சிறப்புச் செய்தார்கள். இவர் சைவமுந் தமிழுந் தழைத்தினிதோங்கத் தொண்டு செய்திருந்து இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

## கரு. மாணிக்க நாயக்கர்

### தோற்றம்

சேலம் பாகற்பட்டியில், 1871-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 25-ஆம் நாள் வெள்ளிக்கிழமை, மாணிக்க நாயக்கர் தோன்றினார். தந்தையாருடைய பெயர் வேங்கடசாமி நாயக்கர்.

### கல்வி

மாணிக்க நாயக்கர் தமது இளமைக்காலந்தொட்டே நுண்ணறிவு மிக்கவராகவும் நினைவாற்றல் மிகுதியாக அமையப்பெற்றவராகவும் விளங்கினார். தாம் மூன்று வயதுக் குழந்தையாக இருந்த பொழுது நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைப் பிற் காலத்தில் கூறினார். நாயக்கர் ஏழாவது ஆண்டிலே பள்ளியிற் சேர்க்கப் பெற்றுக் கல்விகற்கத் தொடங்கினார். பன்னிரண்டாம் ஆண்டில் சேலத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். பதினான்காவது அகவையிலேயே நாயக்கர் செய்யுள் பாடத் தொடங்கினார். நாயக்கருடைய பிறந்தநாட் குறிப்பைக் கணித்தவர்கள், அக்குறிப்புப் பெரிய குறைபாடு உடையதெனக் கூறினார்கள். அக் கூற்றில் ஐயங்கொண்ட நாயக்கர் தாமே சோதிடங்கற்றுச் சோதிட நூலில் வல்லவரானார். தமது பிறந்தநாட் குறிப்பைத் தாமே கணித்து ஆராய்ந்து பார்த்துச் சோதிடர்கள் கூற்றுப் பொய்யெனக் கண்டதுடன், தமது பிறந்தநாட் பலனைத் தமது ஐம்பத்தொன்பதாவது அகவை முடியும் காலம்வரை எழுதிவைத்தார். அவர் எழுதிவைத்தவாறே நிகழ்ச்சிகள் நிகழ்ந்தமை வியக்கத் தக்கதாக இருந்தது.

### கல்லூரி நிகழ்ச்சி

சேலம் கல்லூரியில் நாயக்கர் எப். ஏ. என்னும் பட்டம் பெற்றார். அக் கல்லூரியில் கல்வி பயிலுங் காலத்

தில் உடற்கூறு நூலை (Physiology) மிகவும் விரும்பிக் கற்றார். ஒரு நாள் உடற்கூறு நூலாசிரியர் நரம்புகளைப் பற்றி வகுப்பில் உரையாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது நாயக்கர் ஆசிரியரை இடைமறித்து, "ஐயனே, தாங்கள் கூறுவது நன்றாக விளங்கவில்லை, அருள்செய்து பொருளைக் கண்ணிற்கு நேரே கருவிகள் மூலமாகச் செய்து காட்டி விளக்குதல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். ஆசிரியர் தாமே நன்கு விளங்கப் பெறாத நிலையில் உரைத்துக்கொண்டிருந்தாராதலின் அவருடைய பாடு திண்டாட்டமாகி விட்டது. ஆகவே அவர் நாயக்கரைக் கடிந்துரைத்தார். நாயக்கர் ஆசிரியர் கூறிய செய்திகளை நன்கு உணர்ந்துகொள்ள எண்ணினார். ஹக்ஸ்லியின் உடற் கூறு நூல் என்னும் நூலில் கண்டபடி மரத்துண்டுகளின் உதவிகொண்டு நாயக்கர் தாம் குறித்துக்கேட்ட நரம்புப் பொருளைக் கண்கூடாகச் செய்து பார்த்துத் தெரிந்துகொண்டார். ஆசிரியருக்கும் விளக்கிக் காட்ட வேண்டும் என்று எண்ணினார். மறுநாட்காலை ஆசிரியருக்குஞ் செய்து காட்டினார். ஆசிரியர் பார்த்து மிகுந்த வியப்படைந்தார். தலைமையாசிரியரிடம் போய் நாயக்கர் ஆராய்ச்சிச் செயலைப் புகழ்ந்து கூறினார். தலைமையாசிரியர் நேராகவந்து பார்த்து மனமகிழ்ந்தார். பொறியியற் கல்லூரியிற் சேர்ந்து கல்விகற்றற்குரிய அறிவு நலம் அவரிடம் செறிந்திருக்கிறதென்று மகிழ்ந்து, அக் கல்லூரியிற் சேர்ந்து கல்விபயிலுமாறு கூறியதோடமையாமல் அந்தக் கல்லூரித் தலைவர்க்கும் தாமே இதைக் குறித்து எழுதி ஆகவேண்டியவைகளைச் செய்தார். ஆகவே நாயக்கர் மருத்துவ நூற்பயிற்சி பெறத் தாம் கொண்டிருந்த எண்ணத்தை யொழித்துப் பொறியியற் கல்லூரியிற் சேர்ந்தார்.

### பதின்மூன்று பரிசுகளும் பதக்கமும்

அவ்வாண்டு பொறியியற் கல்லூரியில் சேர்ந்த எப். ஏ. பட்டம்பெற்ற மாணவர்கள் இருவரில் நாயக்கர் ஒருவர். மற்றவர்கள் எல்லோரும். எம். ஏ. பட்டம் பெற்றவர்களாகவும் பி. ஏ. பட்டம் பெற்றவர்களாகவும் இருந்தனர். ஆயினும் அவ்வாண்டு நடந்த போட்டித் தேர்வில் நாயக்கர் முதன்மையாளராகத் தேறிப் பதின்மூன்று பரிசுகளும் ஒரு பொற்பதக்கமும் பெற்றார். இத்தேர்வினால் 1896-ஆம் ஆண்டில் அரசாங்கத்தில் உதவிப் பொறியாளர் அலுவலைப் பெற்றார்.

### கல்லூரியில் குறும்பு

சிறுவயதில் இருந்த குறும்புத்தனங்கள் சில நாயக்கரைப் பிற் காலத்திலும் தொடரத் தொடங்கின. நினைத்த போது இருமலை வரவழைத்துக்கொண்டு ஓயாமல் இருமும் ஒருவகை ஆற்றலை நாயக்கர் பெற்றிருந்தார். வகுப்பில் அவ்வாறு இருமி அடிக்கடி அவர் விடுமுறை பெற்றுக் கொண்டிருந்தார். இந்தத் தீய பழக்கத்தைத் தம் கல்லூரி நண்பர்கள் பலருக்கும் கற்றுக்கொடுத்து விட்டார். ஆகவே மாணவர் தாம் விடுமுறை பெறவேண்டும் என்று எண்ணிய பொழுதெல்லாம் இருமி இருமி விடுமுறை பெறத்தொடங்கினர். ஆசிரியர்கள் இவ்விருமல் தொத்து நோயாக இருத்தல்கூடும் என்று அஞ்சினர். பிறகு உண்மை வெளிப்பட்டது. கல்லூரித் தலைவர் நாயக்கர்மீது மிகுந்த சினங்கொண்டார். குறிப்பிட்ட சில நாட்களில் கல்லூரிக்கு வரக்கூடாதென்று கட்டளையிட்டு ஒறுக்கத் தொடங்கினார். கல்லூரி மாணவர்கள் எல்லோரும் கல்லூரித் தலைவரின் இச் செய்கையைக் கண்டித்துக் கல்லூரிக்குச் செல்லாமல் நின்று விட்டனர். ஆகவே கல்லூரித்

தலைவர் தாம் ஏற்படுத்திய தண்டனையை நிறுத்தி நாயக்கரையும் மற்றவர்களையும் பிழைபொறுத்து மன்னித்து விட்டார்.

#### காட்சியில் சூழ்ச்சி

மருத்துவக் கல்லூரியில் கண்காட்சி ஒன்று அந்நாளில் நடைபெற்றது. அக் காட்சிக்கு மருத்துவர்களும் மருத்துவக் கல்லூரி மாணவர்களுமே செல்லலாம் என்று கட்டுப்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் நாயக்கர் சூழ்ச்சியொன்று செய்து தாமும் தம் நண்பர்கள் பலரும் அக் காட்சிக்குச் செல்ல இடம் பெற்றார்.

#### சில ஆற்றல்கள்

பகலில் கதிரவன் நிலையைக் கொண்டும், இரவில் விண்மீன்களின் நிலையைக் கொண்டும் ஒருவிநாடி கூடத் தவறில்லாதபடி நாழிகையைக் கணக்குச் செய்து சரியாகக் கூறுவதில் நாயக்கர் தேர்ச்சி பெற்றிருந்தார். அல்லாமலும் உற்றுநோக்கும் உயரிய ஆற்றலும் நாயக்கரிடம் நன்கு அமைந்திருந்தது. ஆடு, மாடு, குதிரை முதலியவைகளின் நரம்பு அசைவுகளைக்கொண்டே அவைகள் கத்தப்போவது ஓடப்போவது நீர்விடப்போவது முதலியவைகளைக் கூறி விடுவார்.

#### அலுவல்

தாம் ஏற்றுக்கொண்ட அரசாங்க அலுவலை நாயக்கர் நல்ல திறமையுடனும் ஊக்கத்துடனும் கண்டிப்புடனும் செய்துவந்தார். பொறியியல் துறையில் நாயக்கர் மிகக் கெட்டிக்காரர் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட உண்மை. அவர் அத்துறையில் புதிதாகக் கண்டு பிடித்த செய்திகள் அறுபதுக்கு மேற்பட்டன. அவை களிற் சில, வேறெங்காட்டுப் பொறியியற் புலமையாளர்

களுங் கண்டு பிடித்தவைகளைவிட மிகச் சிறந்தவை என்று பலராலும் கொண்டாடப்பட்டன.

நாயக்கருடைய "கால்க்யூலோகிராப்" என்னும் சுருக்கு வழிக்கணக்குமுறை டாக்டர். டப்ள்யூசி, அன்வின், ஜே. எம். காம்பியன், எம் கார்னட் முதலிய பல மேனாட்டறிஞர்களாலும் மிகுதியாகப் புகழ்ந்து பாராட்டத்தக்க சிறப்புடையதாயிற்று. கணக்கில் ஏற்படும் சிக்கலான வழிகளை அதன்மூலம் மிகவும் விரைவில் தீர்த்துவிட முடிந்தது.

மேட்டூர்த் தேக்கத் திட்டத்தைப் பற்றிய கருத்தை முதன்முதலாகச் சென்னை அரசாங்கத்தார் மனதில் பதியச் செயதவர் நாயக்கர்தாம். அரசாங்கத்தின் தலைமைப் பொறியாளர் அலுவலைப் பெறத் தகுதியுடையவராக இருந்த நாயக்கர் அந்நாள் ஆட்சியாளரின் குறுகிய நோக்கத்தால் அவ்வேலைக்குக் கீழான வேலையில் இருந்தே ஓய்வு பெற நேரிட்டுவிட்டது.

1896-ஆம் ஆண்டில் நீலகிரி உதவிப்பொறியாளராக இருந்தார். 1906-1907-ல் எக்ஸிக்யூடிவ் எஞ்சினீயரானார். 1912-இல் இங்கிலாந்து சென்று "கால்க்யுலோகிராப்" என்னும் புதுமுறையைக் கண்டு பிடித்தார். 1915-இல் சென்னை எஞ்சினியரிங் கல்லூரியில் சிவில் எஞ்சினியரிங் பேராசிரியராக ஏற்படுத்தப் பெற்றார். 1919-இல் மறுபடியும் பொதுமராமத்து இலாகாவில் சேர்ந்து சூப்பரின்டெண்டிங் எஞ்சினியரானார். அவ்வளவோடு அவர் அலுவலும் அலுவல் உயர்வும் முடிந்தன.

### இளமையில் வறுமை

நாயக்கர் உயர்ந்த பெருங்குடியிற் பிறந்தாரேனும் இளமைக் காலத்தில் அக்குடி வறுமையுடையதாக இருந்

௧௧. பாகற்பட்டிப் பெருநிலக் கிழார் நாயக்கரின் வறுமையையும் திறமையையும் பார்த்தார். நாயக்கருக்கு அவருடைய பதினோராம் அகவையில் ஆங்கில அகரவரிசை நூல் ஒன்று வாங்கிப் பரிசளித்தார். முனிசாமி நாயுடு என்பவர் துறவுபூண்டு தமது அலுவலையும் துறந்திருந்தார். அவர் நாயக்கரை மேலும் படிக்கவைப்பதற்காகவே மீண்டும் வேலையேற்று அவர்க்கு உதவி புரிந்தார். அவ்விருவருடைய உதவியையும் நாயக்கர் இறுதிவரை பெரிதும் போற்றினர். கல்லூரி மாணவர்களிற் பலர் அக்காலத்தில் தம்மாலான உதவிகளைப் புரிந்தனர். கல்லூரிப் படிப்பிற்கான நூல்களைக்கூட நாயக்கரால் வாங்க முடியவில்லை. மற்றைய மாணவர்களின் நூல்களை வாங்கித் தம் கையால் எழுதிப் படித்தார்.

ஆராய்ச்சி

தமிழ்க்கல்வியிலும் ஆராய்ச்சியிலும் நாயக்கர் நுண்ணுணர்வு மிக்காராக விளங்கியிருந்தார். தமிழ் அரிச்சுவடியின் ஒப்பில்லா அமைப்பும், அஃது உலகமொழிகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாய் இருக்கக்கூடிய ஆற்றல் பெற்றதென்பதும் நாயக்கருடைய சிறந்த ஆராய்ச்சியினால்தான் முதன்முதல் வெளியாயின. தமிழ்மொழி நூல் இலக்கணத்தை ஆராய்ச்சி வல்லுநர் எல்லோரும் ஒப்புக்கொள்ளுமாறு முதன்முதல் வகுத்துக்கூறி மொழிப் பெருமையைக் காட்டியவர் நாயக்கர்தாம். நாயக்கர் தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் எழுத்தெண்ணிக் கற்றிருந்தார்.

ஒடுக்கம்

நாயக்கர் வேலையில் இருந்து ஒய்வுபெற்ற பிறகு உடல் நலத்தை முன்னிட்டு நீலகிரிக்குன்னூரிலே தங்கியிருந்தார்.

அடிக்கடி குருதிக்கொதிப்பினால் தொல்லைப்பட்டார். 1931-ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்கள் 30-ஆம் நாள் வெள்ளிக்கிழமை தமது அறுபதாவது அகவையில் நான்கு பெண்மக்களும் ஓர் ஆண்மகனும் பிற உறவினர்களும் வருந்த இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

---

## கசு. பூரணலிங்கம் பிள்ளை

### தோற்றம்

திக்கெலாம் புகழூந் திருநெல்வேலிக்கு அண்மையில் உள்ள முந்நீர்ப்பள்ளம் என்னும் ஊரிலே, 1866-ஆம் ஆண்டு மேத் திங்கள் 24-ஆம் நாள் பூரணலிங்கம் பிள்ளை தோன்றினார். இவருடைய தந்தையார் பெயர் சிவசுப்பிரமணிய பிள்ளை. தாயார் பெயர் வள்ளியம்மையார். இவர் தோன்றிய குலம் சைவ வேளாளர் குலம்.

### கல்வி

பூரணலிங்கனார் ஐயாண்டளவிலே மையேடு கைப்பிடிக்கத் தொடங்கினார். திண்ணைப்பள்ளிக் கூடத்தில் பூரணலிங்கனார்க்குப் போதிக்கத் தொடங்கிய ஆசிரியர் பெயர் செல்வப்பெருமாள் என்பது. அந்தச் செல்வப் பெருமாள் தாம் பூரணலிங்கனாரின் தந்தையாராகிய சிவசுப்பிரமணிய பிள்ளைக்கும் கல்வி போதித்தவர். அறுபதாண்டு அகவையை அவர் அப்பொழுது எட்டிப்பிடித்திருந்தார். அகவைக்குத்தக்க அறிவு முதிர்ச்சியும் நல்லொழுக்கமும் அவரிடத்தில் குடிகொண்டிருந்தன. அவரிடம் பூரணலிங்கனார் அரிச்சுவடி தொடங்கி வீடணன் பத்தி என்னும் நூல் வரை கற்றுத்தேறினார்.

பூரணலிங்கனார்க்கு அகவை பத்து நிரம்பியபோது மேலைப்பாளையம் என்னுமிடத்தில் இருந்த பள்ளிக்கூடத்

திற்கு அனுப்பப் பெற்ருர். அப்பொழுது அங்கிருந்த ஆசிரியர் சுந்தரம்பிள்ளை என்பவர் இவருக்கு இலக்கணம் கற்பித்தார். முத்துச்சாமிப் பிள்ளை என்பவர் திருக்குறளை நன்ருகப் போதித்தார். ஓராண்டு அங்கே கற்ற பூரணலிங் கனர் மறு ஆண்டு தருவை என்னும் இடத்தில் இருந்த பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஆங்கிலம் கற்கத்தொடங்கினர். அங்கே இவருக்கு ஆசிரியராக அமைந்தவர் பெயர் செல்லம் பிள்ளை. பிறகு பூரணலிங்கனர் சிந்துபூந்துறையை அடைந்து ஆங்கிலமுந் தமிழுங் கற்கத் தொடங்கினர். பூரணலிங்கனர் எவ்வகைப் பாடங்களையும் ஊக்கத்தோடு கற்று முதன் மாணுக்கராக விளங்கினர். பூரணலிங்கனர் விரைவாகவும் அழகாகவும் எழுதுவதிற் சிறந்து விளங் கினர். அதனல் இவர் மூன்ருவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது கையெழுத்துப் போட்டியில் இவ ருக்கு முதற்பரிசு கிடைத்தது. சில ஆண்டுகள் கல்வி கற்று மெட்ரிகுலேஷன் தேர்விலும் வெற்றிபெற்ருர். சில காரணங்களால் பூரணலிங்கனர் மேலே படிக்க வியலா மல் தடையேற்பட்டது. பரமக்குடிக்குச் சென்று நீதி மன்றம் ஒன்றிலே எழுத்தாளராகப் பணிபுரியத் தொடங் கினர். அப்பொழுது இவருக்கு அகவை பதினறுதான். அவ்வேலையை மூன்று திங்கள் பார்த்தார். அந்நாளில் திருநெல்வேலியில் இந்துக்கல்லூரியின் தலைவராக இருந்த "விங்கிளேர்" என்ற பேராசிரியர் இவரிடம்கொண்டிருந்த அன்பினல் கல்லூரியிற் சேர்ந்து படிக்குமாறு வற்புறுத்தி யழைத்தார். ஆகவே பூரண லிங்கனர் அலுவலைவிட்டுக் கல்லூரியிற் சேர்ந்தார். கல்லூரியின் நூல்நிலையத்தில் இருந்த ஆங்கிலச் சுவடிகள் பலவற்றை ஆழ்ந்து கற்ருர். அப்போது அங்குத் தமிழாசிரியராக இருந்த சபாபதிப்

பிள்ளை என்பவரிடம் தமிழ் நூல்களையுங் கற்றுத் தமிழ் அறிவினையும் வளர்த்தார்.

பி. ஏ. பட்டம்

நெல்லையில் எப். ஏ. தேர்வில் வெற்றிபெற்ற பூரண லிங்கனர் சென்னையை அடைந்து கிறித்தவக் கல்லூரியிலே கல்வி கற்கத் தொடங்கினர். சென்னையில் பூரண லிங்கனரோடு திருநெல்வேலியைச் சேர்ந்தவர்களான காந்திமதி நாத பிள்ளை, (கா. சுப்பிரமணிய பிள்ளையின் தந்தையார்) இராச வல்லிபுரம் சுப்பிரமணிய பிள்ளை, பெருங்குளம் உத்தண்டராம பிள்ளை முதலியோர் கல்வி கற்றனர். பூரண லிங்கனர் பி. ஏ. தேர்வில் இரண்டாம் வகுப்பில் வெற்றி பெற்றார்.

ஆசிரியத் தொழில்

பூரணலிங்கனர் முதற்கண் மாவட்ட உதவித் தலைவரின் அலுவலகத்தில் எழுத்தாளராக அமர்ந்து சில திங்கள் வேலை பார்த்தார். பிறகு பாளையங்கோட்டை இந்து உயர் நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக அமர்ந்து அப் பள்ளியை முன்னுக்குக் கொண்டு வந்தார்.

திருமணம்

பூரணலிங்கனரின் பெற்றோர்கள் தம் மகனுக்குத் திருமணஞ் செய்துவைக்க எண்ணினர்கள். ஒத்த அறிவும் ஒத்த குணநலனும் உள்ள ஒண்டொடியைத் தேடினர்கள். கல்வியறிவின்மையின் சில காரிகையரும், அழகின்மையின் பல அரிவையர்களும், செந்நிறமற்றிருந்தமையின் சில சேயிழையாரும், அணிகலன்கள் அற்றிருந்தமையின் சில அழகிகளும் ஒதுக்கப்பட்டார்கள். தாயம்மாள் என்னும் பெயருடைய தையல், வாழ்க்கைத் துணைவியராக அமைந்தார்.

ஈரோட்டில் வேலை

பூரணலிங்கனார் ஈரோடு சென்று உயர்நிலைப் பள்ளி ஒன்றில் தலைமையாசிரியராக அமர்ந்தார். இடைவிடாது உழைத்து அப்பள்ளியை முன்னுக்குக் கொண்டு வந்தார்.

எட்டையபுரத்தில் வேலை

அந் நாளில் எட்டையபுரத்தில் குறுநில மன்னராக அமர்ந்திருந்தவர் மறுவுலகஞ் சென்றார். அவருடைய மகன் இளைஞனாக இருந்தபடியால் ஆட்சியை ஆங்கில அரசினர் தமது மேற்பார்வையில் எடுத்துக் கொண்டனர். அரசிளங்குமரனுக்கு நல்ல ஆசிரியர் ஒருவர் தேவைப் பட்டார். பூரணலிங்கனார் அரசிளங்குமரனுக்குத் தக்க ஆசிரியர் என்று நெல்லை மாவட்டத் தலைவர் நினைத்தார். ஆசிரியராக எட்டையபுரத்திற்கு ஏகுமாறு கட்டளை யனுப்பினார். பூரணலிங்கனார் எட்டையபுரத்தையடைந்து அரசிளங்குமரனுக்கு ஆசிரியராக அமர்ந்தார். பூரணலிங்கனார் கட்டுப்பாடும் கண்டிப்பும் உடையவர். சிறுவன் செல்வ நிலையினன் ஆயிற்றே என்று சிறிதும் பாராமல் ஒழுங்கு முறையுடன் நடந்து கொண்டார். எழுதும்படி கூறிய ஒன்றை எழுதாமல் இளவரசன் ஒருநாள் தவறு செய்தான். இவர் அவனைப் பிரம்பினால் அடித்துக் கண்டித்தார். இதனைக் கண்ட வேலைக்காரர்கள் இதனை ஒரு தவறாக எண்ணி அரசியாரிடஞ் சென்று, "ஆசிரியர் நம் சின்ன இராசாவை அடிக்கிறார்" என்று கோளுரை கூறினார்கள். அவ் வரசியார் அப் பணியாளர்களைக் கண்டித்து அவர்கட்கு அறிவுரைகள் கூறினார். சென்னையிற் குறுநில மன்னர்களின் சிறுவர்கட்குப் பள்ளி ஒன்று தொடங்கப்பெற்றது. குறுநில மன்னர்களின் சிறுவர்கள் அனைவரும் அங்குச் சென்று கல்வி பயில வேண்டும் என்று அரசினர் கட்டளையிட்டனர்.

சென்னையிற்பணி

1894-ஆம் ஆண்டில் பூரணலிங்கனார் சென்னைக்குக் குடியேறினார். டாக்டர் மில்லர் என்பவர் இவரைத் தம் கல்லூரியில் ஆசிரியராக அமர்த்தினார். அக்காலையிற் சென்னையில் தாம்சன் கம்பெனி உரிமையாளராக இருந்த கந்தசாமி முதலியார் என்பவருக்கும் இவருக்கும் நெருங்கிய நட்பு உண்டாயிற்று. இருவரும் ஒருவருக்கொருவர் பேருதவி புரிந்து கொண்டனர். மில்லருடைய கல்லூரியிலே பூரணலிங்கனார் நான்கு யாண்டுகள் பணியாற்றினார். சட்ட நூல்களையும் பூரணலிங்கனார் நன்கு கற்றுத் தேறினார். ஆனால் தேர்வுக்குச் செல்லவில்லை.

பரிதிமாற் கலைஞர் கூட்டுறவு

பூரணலிங்கனார் கிறித்தவக் கல்லூரியில் வேலை பார்க்கும்போது அங்குப் பரிதிமாற் கலைஞர் என்னும் சூரியநாராயண சாத்திரியார் தமிழ்ப் பேராசிரியராக இருந்தார். இருவரும் ஆருயிர் நண்பர்களாயினர். பரிதிமாற் கலைஞர் தனித் தமிழிடத்தே தணியாக் காதல் கொண்டவர். அதனால் தம் பெயரையும் தமிழ்ப்படுத்திக் கொண்டவர். இவர்கள் இருவரும் கடற்கரையில் அமர்ந்து தமிழ் மொழியைப்பற்றி நாடோறுஞ் சொற்போர் வழியாக ஆராய்ச்சி செய்தனர். இதன் பயனாகப் பரிதிமாற் கலைஞர் 'தமிழ்மொழி வரலாறு' என்னும் தமிழ்நூலினை எழுதினார். பூரணலிங்கனாரோ 'தமிழ்இலக்கிய வரலாறு' என்னும் ஆங்கில நூலை எழுதினார். பாடப் புத்தகங்களும் பல பூரணலிங்கனாரால் எழுதப் பெற்றன. பாடப் புத்தகங்களால் பூரணலிங்கனாருக்குத் தக்கவாறு பொருள் வருவாய் ஏற்பட்டது.

கோவையில் தொண்டு

1900 முதல் 1904 வரை பூரணலிங்கனார் கோயம்புத்தூரில் செயின்ட் மைக்கேல் கல்லூரியில் ஆங்கிலப் பேரா

சிரியராக அமர்ந்து பணியாற்றினர். இவருடைய சலியா உழைப்பினுல் அக் கல்லூரி சிறந்து விளங்கியது. அங்குச் சில ஆண்டுகள் சென்றபின் தம் ஊராகிய மூன்றீர்ப் பள்ளத்தை அடைந்து தங்கினர்.

பலவிடங்களில் தொண்டு

இவர் ஊரில் தங்கியிருந்தபோது நெல்லை இந்துக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக அமர்த்தப்பெற்ருர். பின் நெல்லையில் இவர் தாமே ஒரு சிறிய கல்லூரியைத் தொடங்கி நடத்தினர். மூன்று பிள்ளைகளோடு தொடங்கப்பட்ட அக் கல்லூரியில் நாளடைவில் ஐந்நூறு பிள்ளைகள் வரை சேர்ந்து கல்வி கற்கலாயினர். அக் கல்லூரியின் பெயர் "கெமிசுக் கல்லூரி" என்று கூறப்பட்டது. பிறகு பூரணலிங்கனர் சென்னையை அடைந்து அங்கும் சில காலந் தங்கினர். பிறகு அமெரிக்கன் கல்லூரி, திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரி ஆகியவைகளில் தொழில் புரிந்தார்.

இறுதி

அகவை முதிர்ந்தமையின் இவர் ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றுப் பல பொதுநலச் செயல்களில் ஈடுபட்டுத் தொண்டாற்றினர். இப்படிப் பலவாறு தொண்டியற்றிக்கொண்டிருந்த பூரணலிங்கனர் தமது எண்பத்தோராவது அகவையில் 1947-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16-ஆம் நாள் மண்ணுலக வாழ்வை நீதது விண்ணுலக வாழ்வைப் பெற்ருர்.

எழுதிய நூல்கள்

1. ஔவைக் குறள்
2. செய்யுட் கோவை
3. விவேக விளக்கம்
4. இராயர் அப்பாசி கதைகள்

5. வாசகத் திரட்டு
6. இரு சிறு கதைகள்
7. கதையும் கற்பனையும்
8. வீர மணி மாலை
9. தமிழ்க் கட்டுரைகள்
10. பன்னிரு பெண்மணிகள்
11. மருத்துவன் மகள்
12. தப்பிலி
13. ஐரோப்பியப் போர்.

முதலியன பூரணலிங்கனாரால் எழுதப்பெற்ற தமிழ் நூல்கள். இவைகளையன்றி ஆங்கில நூல்களும் பல இவரால் எழுதப்பெற்று விளங்குகின்றன.

---

## கள. பண்டிதமணி கதிரேசச் செட்டியார்

**தோற்றம்**

மகாமகோபாத்தியாய முதுபெரும் புலவர் பண்டிதமணி கதிரேசச் செட்டியார், தனவணிக நாட்டிலே மகிபாலன் பட்டி என்னுஞ் சிற்றூரிலே, 1881-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பதினாறும் நாள் வெள்ளிக்கிழமை இவ்வுலகில் தோன்றினார். பண்டித மணியின் தந்தையார் பெயர் முத்துக்கருப்பன் செட்டியார். தாயார் பெயர் சிகப்பி ஆச்சி. முத்துக்கருப்பன் செட்டியார் ஈழநாட்டிலே எழுந்தருளிய கதிர்காமக் கடவுண்மீது முதிர்பெருங் காதல் கொண்டவர். அதனால் தம் மைந்தனுக்குக் கதிரேசன் என்று பெயர் வழங்கினார்.

**கல்வி**

அவ்வூரிலே இருந்த சிறு பள்ளிக்கூடம் ஒன்றிலே கதிரேசனார் கல்வி கற்கத்தொடங்கினார். எண்ணையும்

எழுத்தையும் இனிது கற்றூர். பெருக்கல் வாய்பாடு எண்சுவடி முதலிய கணித நூல்களையும் உலகநீதி, ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, நல்வழி, நன்னெறி முதலிய நீதிநூல்களையும் சிற்றிலக்கியங்கள் பலவற்றையும் இரண்டு மூன்று ஆண்டுகளில் இனிது கற்றுத் தேறினர். பிறகு பள்ளியைவிட்டு இல்லத்திருந்தவாறே பல நூல்களையும் தாமே கற்கத்தொடங்கினர். இவ்வுலகிலே மக்களாய்ப் பிறந்தவர்கட்கு இறைவன் ஏதேனும் ஒரு சிறு குறையை அளிப்பின் அஃது அவர்களுடைய நன்மைக்கென்றே நாம் திண்ணமாக உணர்தல்வேண்டும். கதிரேசனர்க்குக் கால் ஒன்று சிறிது ஊனமாக அமைந்திருந்தது. அதனல் அவர் தடி ஒன்றின் உதவியால் சிறிது தொல்லைப்பட்டே நடக்க இயலும். அதனல் கதிரேசனர் மற்றைய தனவணிக இளைஞர்களைப்போல் ஊர் சுற்றல் வீண்களியாட்டங்களில் பொழுதுபோக்கல் முதலிய செயல்களில் ஈடுபடாதவரானர். பிற்காலத்தில் பண்டிதமணி, "இக்கால் ஊனமே என்னைக் கலைமகளின் பேரருளுக்கு உரியவனக்கியது. இன்றேல் யானும் பிற தனவைசியர்களைப்போல அழிதன்மாலையவாகிய பொருளீட்டுதலிலே புகுந்து வீண்பொழுது போக்கியிருப்பேன். ஆகவே யான் இக்கால் ஊனத்திற்கு நன்றி செலுத்துகிறேன்" என்று கூறினர். கதிரேசனர் படித்த பல நூல்களினும் ஏற்பட்ட ஐயங்களையெல்லாம் தக்க அறிஞர்கள்பால் கேட்டுத் தெரிந்து போக்கிக்கொண்டார்.

அக் காலத்திலே சோழவந்தான் என்னும் ஊரிற் பெரும் புலவராகச் சிறந்து விளங்கிய அரசஞ்சண்முகனருடைய நட்புக் கதிரேசனர்க்கு ஏற்பட்டது. அரசஞ்சண்முகனர் இலக்கியப் புலமையிலும் இலக்கணப் புலமையிலும் தங்கிகரில்லாத் தனிப்பெருஞ் சிறப்புடன் விளங்

கினர். கதிரேசனர் அரசஞ் சண்முகனரிடம் தொல்காப் பியச் சொல்லதிகாரச் சேனவரையம் முதலிய இலக்கண நூல்களைக் கற்றுத் தக்கவாறு இலக்கணப் புலமையையும் எய்தினர்.

இருமொழிப் புலவர்

வடமொழியினையுங் கற்று அம்மொழிச் சிறப்பினையும் அறியவேண்டுமென்று கதிரேசனர் எண்ணினர். தருவை நாராயண சாத்திரியார் என்பவர் வடமொழிப் புலமை மிக்காராய் அந்நாளில் இலங்கினர். கதிரேசனர் சாத்திரி யாருடைய துணையைக்கொண்டு வடமொழியையுங் கற்கத் தொடங்கினர். ஐந்தாறு ஆண்டுகளில் வடமொழியில் உள்ள காவியங்கள், நாடகங்கள், இலக்கியங்கள், இலக் கணங்கள் முதலியவைகளையும் நன்கு பயின்று தேறினர். இவ்வாறு இருமொழிகளையும் அவர் நன்கு கற்றுத் தேறிய படியால் கதிரேசனருக்கு 'இருமொழிப் புலவர்' என்னும் பெயர் உண்டாயிற்று.

சமய நூற்பயிற்சி

தென்மொழியையும் வடமொழியையுந் திடமாகக் கற்றுத்தேறிய கதிரேசனர், சைவசமயப் பெருநூல்க ளாகிய சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய நூல்களையுங் கற்றுணர விரும்பினர். அக் காலத்திலே காரைக்குடியிலே சொக்கலிங்கச் செட்டியார் என்பவர் சமய நூலறிவிலே சிறந்து விளங்கினர். அவரையடுத்து இரண்டு ஆண்டுகள் சமயநூல்கள் பலவற்றையும் ஓதி யுணர்ந்தார். இவ்வாறு பல ஆண்டுகள் கதிரேசனர் விடா முயற்சியுடன் கல்விபயின்றமையால், தென்மொழி, வட மொழி, சமயநூல் ஆகியவைகளிலே தேர்ச்சிபெற்று நல்ல புலவரானர்.

பொது நலப்பணி

கதிரேசனாரின் புகழ், சிறிது சிறிதாகத் தனவணிக நாட்டில் பரவத்தொடங்கியது. தனவைசியச் செல்வர்கள் கதிரேசனாரின் பெருமையை அறியலானார்கள். கதிரேசனார் பொதுநலத் தொண்டில் செல்வர்களின் உள்ளத்தைத் திருப்ப எண்ணினார். மேலைச்சிவபுரி என்னும் ஊரில் கழகம் ஒன்றினை அமைத்து அதன் ஆதரவில் கலைக் கூடம் ஒன்றினையும் நிறுவினால் பெரியவர்கள் உள்ளம் பண்படுவதற்கும் இளைஞர்கள் கல்விகற்றற்கும் தகுதியாக இருக்கும் என்று எண்ணினார். தமது எண்ணத்தைத் தம்பால் அன்புடையவரும் பெருஞ் செல்வரும் ஆகிய, வ. பழ. சா. பழனியப்ப செட்டியார் என்பவரிடத்திலே தெரியப்படுத்தினார். அச்செட்டியார் கதிரேசனாரின் எண்ணத்தைப் பெரிதும் போற்றினார். 1909-ஆம் ஆண்டில் "சன்மார்க்க சபை" என்னும் பெயருடன் கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதன் சார்பாகப் புலவர் கல்விக்குக் கலைக்கழகம் ஒன்றும் அமைக்கப்பட்டது. மேலைச் சிவபுரியில் தோன்றிய அச்சபை நாளிதுவரையிற் சிறந்தோங்கி வருவதுடன் நாட்டிற்குப் புலவர்கள் பலரையும் நல்கிவருகின்றது. அக் கலைக் கழகம் "கணேசர் செந்தமிழ்க்கலாசாலை" என்று அழைக்கப்பெறுகிறது. கலாசாலையின் புத்தகசாலை "தொல்காப்பியனார் புத்தகசாலை" என்று அழைக்கப் பெறுகிறது.

நூல்கள் இயற்றல்

கதிரேசனார் தமது இளமைக் காலத்திலே, "சுந்தர விநாயகர் பதிகம்" "வீரவிநாயகர் மாலை" "பதிற்றுப்பத்தந்தாதி" முதலிய நூல்களைப் பாடினார். கதிரேசனாருடைய பாடல்கள் பொருள் நுட்பமுந்திட்பமும் அமைந்து விளங்

கின. தம் வடமொழிப் புலமையை வீணாக்காமல் "மிருச்ச கடிகம்" என்னும் வடமொழி நாடகத்தைத் தமிழிலே, "மண்ணியல் சிறுதேர்" என்னும் பெயருடன் மொழி பெயர்த்தார். மேலும் "சுக்கிரநீதி" "சுலோசனை" "உதயணசரிதம்" "பிரதாபருத்திரீயம்" "மாலதீமாதவம்" என்னும் நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்தார். கதிரேசனாருடைய மொழிபெயர்ப்பு, முதல்நூல் கருத்துக்குச் சிறிதும் மாறுபடாது தக்கமுறையில் அமைந்து பிற இருமொழிப் புலவர்களின் பாராட்டுரைகளையும் பெற்றுச் சிறந்து விளங்குகின்றது.

**பண்டிதமணி**

கதிரேசனாருடைய அறிவும் புகழுந் தமிழ்நாடெங்கும் பரவியது. கதிரேசனாரால் நிறுவப்பட்ட சன்மார்க்க சபையும் வளர்ந்தோங்கிச் சிறப்புற்றுவந்தது. அச் சபையின் ஆண்டு விழாக்கள் தமிழ்நாட்டில் தலைசிறந்து விளங்கிய புலவர் பெருமக்களின் தலைமையின்கீழ் நடைபெற்றன. அவ்விழாக்களின் சொற்பொழிவுகளைக் கேட்டற்குப் பலவிடங்களினும் இருந்து மக்கள்வந்து குழுமிப் பெரும் பயன் அடைந்தனர். ஓர் ஆண்டு விழாவில் உ. வே. சாமிநாதையர் தலைமைதாங்கினார். கதிரேசனாரின் அறிவுந் தமிழ்த்தொண்டும் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தன. ஐயரவர்கள் கதிரேசனாரைப் பலப்படப் புகழ்ந்து "பண்டிதமணி" என்னுஞ் சிறப்புப் பெயரை அவருக்கு வழங்கினார். அந்நிகழ்ச்சி தனவணிகச் செல்வர் அனைவர்க்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அதுமுதல் கதிரேசனார் என்னும் பெயர், பெரும்பாலும் மறைந்து "பண்டிதமணி" என்னும் பெயரே யாண்டும் வழங்கத் தொடங்கியது.

திருமணமும் மக்கட்பேறும்

பண்டிதமணி அவர்கள் கல்விப் பேறடைதலையே நீண்டநாள் அவாவி நின்றமையின் அகவை முப்பது ஆகும்வரையில் திருமணஞ்செய்து கொள்ளவில்லை. அதன் பின்னரே 1912-ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. வாழ்க்கைத் துணைவியாக அமைந்த ஆச்சியின் பெயர் மீனாட்சி. பண்டிதமணி மீனாட்சியாச்சியோடு இல்லறவாழ்க்கையைத் தக்காங்கு நடத்தி மிக்கோங்கு புகழினராய் விளங்கினார். மீனாட்சி ஆச்சியார் விருந்தினர்ப் பேணும் பெருந்திருவினராக அமைந்து நின்றார். புலவர் பெருமக்கட்கும் பிறருக்கும் பண்டித மணியாரின் இல்லம் தாயகமாகத் தலைசிறந்து நின்றது. நாளடைவில் பண்டிதமணியவர்கட்கு, சுப்பிரமணியன், கனகசபாபதி, மாணிக்கவாசகன், தியாகராசன், என்னும் ஆண்மக்கள் நால்வரும், மங்கையர்க்கரசி, மீனாட்சி, சகுந்தலை என்னும் பெண் மக்கள் மூவரும் மக்கட்செல்வமாகத் தோன்றினர்.

சொற்பொழிவுகள்

பண்டிதமணி சொல்லாற்றலில் வல்லவராக விளங்கினார். இவருடைய சொற்பொழிவுகள் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாகவும் பெருஞ் செவிச் செல்வமாகவும் விளங்கின. தமிழ் நாடெங்கணும் உள்ள பொதுநலக் கழகக் குழுவினர் பண்டிதமணியை அழைத்து இவருடைய தலைமையிலே ஆண்டுவிழா முதலியவைகளை நடத்தினர். பண்டிதமணி தம்மால் தோற்றுவிக்கப் பெற்ற மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையைக் கண்ணுங் கருத்துமாகப் போற்றி வளர்த்தார். தஞ்சைக் கரந்தையில் தோன்றிய, "கரந்தைத் தமிழ்ச் சங்க"த்தினும் பெரும்பங்குகொண்டு அதனையும் நன்கு வளர்த்துக் காப்பாற்றினார்.

ஆசிரியத்தொழில்

பண்டித மணியின் பெரும்புலமை நலத்தை நன்குணர்ந்த செட்டி நாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் பண்டித மணியினிடம் பேரன்பு கொண்டிருந்தார். தமது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அமர்ந்து தமிழ்த் தொண்டு புரியுமாறு வேண்டிக்கொண்டார். தாங் கற்ற கல்வியை எவ்வெவ்வழியில் போற்றலாம் என்று நாட்டங் கொண்டிருந்த பண்டிதமணி அண்ணாமலையரசர் வேண்டு கோளுக்கு இணங்கி 1934-ஆம் ஆண்டு முதல் 1937-ஆம் ஆண்டுவரையிலும் விரிவுரையாளராக அமர்ந்து பணியாற்றினார். பின்னர்ப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகவும் அமர்ந்து தொண்டு புரிந்தார். ஆங்கிலமொழி வல்லுநர்க்கு மட்டும் அளிக்கப்பட்ட அப்பதவி ஆங்கில மொழிப் பயிற்சியற்ற பண்டிதமணிக்கும் அளிக்கப் பட்டது பலருக்கும் மகிழ்ச்சியை அளித்தது. பண்டித மணி தமது கடமையைச் செவ்வனே ஆற்றி அறிஞர் பலருடைய பாராட்டுதலையும் பெற்றார்.

பலவகைப் பதவிகள்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பாடக் குழுவிலும் தேர்வுக்குழுவிலும் உறுப்பினராகவும் தலைவராகவும் அமர்ந்திருந்தார். இராமேச்சுரம் வடமொழிக் கல்லூரியிலே மந்திரக்குழு உறுப்பினராக இருந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே ஓர் உறுப்பினராக விளங்கினார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பாடக்குழுவிலும் தேர்வுக்குழுவிலும் தலைவராக இருந்தார். திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தின் பாடக் குழுவின் உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள கீழ்நாட்டுக் கல்வி நிலையம் என்னும் கல்லூரியில் தேர்வாளராக இருந்தார். எண்ணற்ற கழகங்களிலும் பேரவைகளிலும் தலைவராக

இருந்து தொண்டாற்றினர். குறுந்தொகை மாநாடு இவருடைய தலைமையிலே நடைபெற்றது.

மகாமகோபாத்தியாயர்

பண்டிதமணியின் தொண்டுகளை அரசியலார் அறிந்தனர். பட்டம் அளித்துச் சிறப்பிக்கவேண்டும் என்று முடிவு செய்தனர். 1941-ஆம் ஆண்டு, மன்னர் பிறந்த நாட்கொண்டாட்டம் நிகழ்ந்தபோது "**மகாமகோபாத்தியாயர்**" (பெரும்பேராசான்) என்னுஞ் சிறப்புப் பெயரை வழங்கிப் போற்றினர்.

திருவாசக உரை

திருவாசகம் என்னும் பெருநூலுக்கு உரையியற்றும் ஆற்றல், வடமொழி தென்மொழிப் புலமைமிக்காராகவும் சமயநூற் பயிற்சியில் வல்லாராகவும் உள்ளாருக்கே இயையக்கூடிய ஒன்றாகும். பண்டிதமணியின் பேராற்றலை உணர்ந்த பலர் திருவாசகத்திற்கு விரிவுரை இயற்ற வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். பண்டிதமணி அவர்கள் ஆசிரியத்தொழிலில் இருந்து ஓய்வுபெற்று நூலாராய்ச்சித் துறையில் இறங்கியபின், திருவாசகத்திற்கு உரையியற்றும் பணியை மேற்கொண்டார். மறைமலையடிகளால் முன்னரே உரையியற்றப்பட்ட முதல் நான்கு திருப்பாடல்களைவிட்டுத் திருச்சதகம் என்னும் பகுதிப்பாடல் நூற்றிற்கும் ஓர் விரிவுரையைத் தக்க முறையில் எழுதிக் "கதிர்மணி விளக்கம்" என்னும் பெயர் கொடுத்து வெளிப்படுத்தினர். அவ்வுரையைக் கண்ணுற்ற அறிஞர்கள் பண்டிதமணியின் பேரறிவைப் பெரிதும் வியந்து கொண்டாடினர். பிறகு "நீத்தல் விண்ணப்பம்" "திருவெம்பாவை" என்னும் இரண்டு பகுதிகட்கும் உரையெழுதி வெளிப்படுத்தினர். நான்காவதாகத்

திருவம்மானைப் பகுதியில் மூன்றுபாடல்கள் உரையெழுதப் பெற்றன. பிறகு தளர்ச்சி மிகுதியானபடியாலும் பல நூல்களை ஆராய்தற்கு இயலாமையாலும் அவ்வளவில் நிறுத்திவிட்டனர்.

ஒடுக்கம்

இறுதிவரையிலும் உடல்நலத்துடனேயே விளங்கி யிருந்த பண்டிதமணியவர்கள் தமது எழுபத்து மூன் றாவது ஆண்டிலே 1953-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இருபத்து நான்காம்நாள் சிவபெருமான் திருவடி நீழலைச் சேர்ந்தார்.

எழுதிய நூல்கள்

1. சுந்தர விநாயகர் பதிகம்
2. வீர விநாயகர் மாலை
3. பதிற்றுப்பத் தந்தாதி
4. மண்ணியற் சிறுதேர்
5. சுக்கிரநீதி
6. சுலோசனை
7, உதயண சரிதம்
8. பிரதாபருத்திரீயம்
9. மாலதீ மாதவம்
10. உரைநடைக் கோவை
11. திருவாசகம்: திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை உரை

முதலியன பண்டிதமணி யவர்களால் எழுதப்பெற்ற நூல்களாம். உரைநடைக் கோவை என்பது பத்திரிகை களில் எழுதிய கட்டுரைத் தொகுதியாகும்.

# கரு. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

## தோற்றம்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் நாஞ்சில் நாட்டிலே தேரூரிலே 1876-ஆம் ஆண்டு ஆடித்திங்கள் பதினன்காம் நாள் பிறந்தார். பிள்ளையவர்களின் தந்தையார் பெயர் சிவதாணுப் பிள்ளை. தாயார் பெயர் ஆதிலட்சுமியம்மையார். குலம் வேளாண் குலம். கவிமணியின் தந்தையார் தமிழ்ப்புலமை நிரம்பப்பெற்றவர். கடவுண்மாட் டன்பும் நல்லொழுக்கமும் பொருந்தப் பெற்றவர்.

## கல்வி

கவிமணி உள்ளூர்ப் பள்ளியில் தொடக்கக் கல்வியைக் கற்ருர். கவிமணியின் பாட்டனரும் புலவராக விளங்கினர். அவர் காரியந்தாதி என்னும் அந்தாதி பாடியவர். தம் பேரனின் கல்வியில் அவருக்கு மிகுந்த கருத்துண்டாயிற்று. இராப்பகல் தம்முடன் வைத்துக்கொண்டு ஏதாவது போதித்துக்கொண்டேயிருப்பார். தாம் புதிதாக இயற்றும் பாட்டையும் பேரனிடம் படித்துக் காட்டுவது அவருக்கு வழக்கம். இதனல் செய்யுளைப் புதிதாக இயற்றவேண்டும் என்னும் அவா, கவிமணி இளைஞராக இருக்கும்போதே உண்டாகிவிட்டது. கவிமணி பள்ளிப் படிப்பை முறைமையாகக் கற்றுவந்தார். எப். ஏ. வரையில் கற்றபின் பள்ளிப் படிப்பு முடிந்தது.

அந்நாளில் சாந்தலிங்கத் தம்பிரான் என்னும் துறவியொருவர் தேரூரில் உள்ள திருவாவடுதுறை ஆதீன மடத்தில் இருந்தார். அவர் கல்வியறிவு மிக்கவர். அவரிடம் கவிமணி தமிழ்நூல்களைக் கற்கத்தொடங்கினர். இலக்கண

இலக்கியங்களை நன்கு கற்றுணர்ந்தார். மதுரையில் அந் நாளில் இருந்த சா. போற்றிக்கண்ணு என்பவன் சாந்த லிங்கத் தம்பிரானுக்கு ஒரு தவறு செய்துவிட்டான். அதனுற் சினங்கொண்ட தம்பிரான் அந்தப் போற்றிக் கண்ணுமீது வசையொன்று பாடக் கட்டளையிட்டார். ஆசிரியர் கட்டளைப்படியே கவிமணி பாடினுர். சில நாட் களில் போற்றிக்கண்ணு கூற்றுவன் உலகம் போனுன். சாந்தலிங்கத் தம்பிரான் கவிமணியின் வாக்குப் பலித்த தைக் கண்டு மனமகிழ்ந்தார்.

திருமணம்

பள்ளிப் படிப்பு முடிந்தவுடன், கவிமணி ஒரு பெண் மணியைத் திருமணம் புரிந்தார். அம் மாதரசியின் பெயர் உமையம்மை. அவ்வம்மையார் கற்பிற் சிறந்த காரிகை யாய், விருந்தெதிர்கொள்ளும் விளங்கிழையாய்க் கொண் டான் குறிப்பறியும் ஒண்டொடியாய் மனைவாழ்க்கைக் கேற்ற மாண்புடன் அமைந்து நின்றார்.

ஆசிரியத் தொண்டு

முதன்முதலில் கவிமணி கோட்டாறு என்னும் ஊரில் ஆசிரியத் தொழில் பார்க்கத் தொடங்கினுர். பிறகு நாகர்கோயிலில் சிலகாலம் இருந்தார். மாணவர்களின் உள்ளத்தைக் கவரும் ஆற்றலும், சொல்லாற்றலும் கவிமணி யிடம் இயற்கையாக அமைந்திருந்தன. நாளடைவில் கவிமணி ஒரு நல்ல ஆசிரியர் என்னுஞ் செய்தி நாடெங் கும் பரவியது. இவருடைய பேராற்றலைக் கண்டும் கேட்டும் அறிந்த திருவிதாங்கூர் அரசினர் இவரை, "மகாராசா பெண்கள் கலாசாலையில்" தமிழ்ப் பேராசிரியராக அமர்த் தினுர்கள். கவிமணி அப்பணியை 1895-ஆம் ஆண்டில் ஏற்று 1931-ஆம் ஆண்டுவரை முப்பத்தாறுண்டுகள் திறம் பெற ஆற்றினுர்.

அஞ்சாமையும் ஆராய்ச்சியும்

மூடப் பழக்கவழக்கங்களில் கவிமணிக்கு மிகுந்த வெறுப்புண்டு. பாரதியார், "வஞ்சனைப் பேய்களென்பார் அந்த மரத்திலென்பார் இந்தக் குளத்திலென்பார்; இவர், அஞ்சி யஞ்சிச்சாவார் இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே" என்று பாடியது எப்பொழுதும் நினைவில் இருக்கும். நாகர் கோவிலில் ஓரிடத்தில் ஒரு நடுகல் இருந்தது. அந்த இடம் எப்பொழுதும் கெட்ட நாற்றம் உடையதாக இருக்கும். அந்த இடத்தைப்பற்றிக் கதைகள் பலவற்றை மக்கள் கூறிக்கொண்டனர். அந்த நடுகல்லை இசக்கியம்மன் என்று எண்ணி அஞ்சி வழிபட்டனர். அக்கல்லுக்குத் தெய்வ வழிபாடும் நடைபெற்றது. மக்கள் பகல் நேரத்தில்கூட அந்த இடத்தில் அச்சத்துடன் தான் செல்வார்கள். அக்கல்லைப்பற்றிக் கவிமணி கேள்விப்பட்டார். உடனே அந்த இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். கெட்ட நாற்றத்தையும் ஒரு பொருட்படுத்தாமல் அக்கல்லை ஆராய்ந்து பார்க்கத்தொடங்கினார். அக்கல்மீது மக்கள் ஊற்றிய எண்ணெய்க் கசடு முதலிய அழுக்குகளையெல்லாம் அகற்றத்தொடங்கினார். அவ்வழியே சென்றவர்கள், "அக்கல்லில் இசக்கியம்மன் எழுந்தருளியுள்ளாள்" என்றும் "ஏதேனுந் தீமை செய்வாள்" என்றும் அச்சுறுத்தினர். ஆனால் கவிமணி, அவர்கள் கூற்றைப் பொருட்படுத்தாமல் கல்லை நன்கு சுத்தப்படுத்திப் பார்த்தார். அஃதோர் கல் வெட்டென்று தெரியவந்தது. அதற்குப் படியெடுத்து எங்கும் வெளிப்படுத்தினார். மேலும் கவிமணி பல கல் வெட்டுக்களை ஆராய்ச்சி செய்து ஆங்கிலத்தில் பல கட்டுரைகள் எழுதினார். பிறகு அக்கட்டுரைகளைத் திரட்டிக் காந்தளூர்ச்சாலை என்னும் பெயருடன் நூலாக வெளிப்படுத்தினார்.

### செய்யுள் செய்தல்

பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும்போதே கவிமணி செய்யுள் பாடத் தொடங்கிவிட்டார். இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்ற பின்பு செய்யுள்கள் சீர்பெற்று விட்டன. அடிக்கடி தனிநிலை இசைச்செய்யுட்கள் பலவற்றை இயற்றிப் பத்திரிகைகளின் மூலமாக வெளிப்படுத்தினார். இவருடைய பாட்டை வெளிப்படுத்தாத பத்திரிகைகளே இல்லை எனலாம். பிறகு 1938-இல் இவருடைய பாடல்கள் பல ஒன்றாகத் திரட்டப்பட்டு, **மலரும் மாலையும்** என்னும் பெயருடன் வெளியாகியது.

பாரதியாருடைய பாட்டிலே வீராவேசம் நிறைந்திருக்கும். கவிமணியின் பாட்டிலோ அமைதியும் இனிமையும் அமைந்திருக்கும். கவிமணி பாரதியையும் மனமார,

> "பாட்டுக் கொருபுலவன் பாரதியடா—அவன்
> பாட்டைப் பண்ணோடொருவன் பாடினனடா
> கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா—அந்தக்
> கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா.

என்னும் பாட்டால் பாராட்டியுள்ளார்.

### பட்டமும் பரிசும்

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் 1940-ஆம் ஆண்டில் சென்னையில் நிகழ்த்திய ஆண்டுவிழாவின்போது "**கவிமணி**" என்னுஞ் சிறப்புப்பெயர் அளித்தனர். 1950-ஆம் ஆண்டில் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் தலைமையில் பல அன்பர்கள் கவிமணியின் இல்லத்திற்குச் சென்று சிறப்புக்கள் பல செய்து பொன்னாடை போர்த்திப் பாராட்டினர். 1943-ஆம் ஆண்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் இராசா சர் அண்ணாமலை செட்டியார் தலைமையில் ஆத்தன்குடியில் பேரவை ஒன்று கூட்டிப் பாராட்டிச் சிறப்புக்கள்

செய்தனர். அப்போது அண்ணாமலை அரசர் வெண் பொற்கலங்கள் பல பரிசளித்தார். 1950-ஆம் ஆண்டில் திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் அம்பலவாண தேசிகத் தம்பிரான் சுவாமிகள் பொன்னாடை போர்த்திப் பாராட்டி னர். 1952-ஆம் ஆண்டில் தேரூரில் தேரூர்ப் பெருமக்கள் 'கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை நினைவு நிலையம்' என் னும் மண்டபம் கட்டித் தம் செய்ந்நன்றியைக் கவிமணி உடலுடன் இருக்கும்போதே தெரியப்படுத்திக் கொண் டார்கள்.

### பொதுப்பணி

முதுமைக்காலத்தில்கூட கவிமணியவர்கள் ஓய்வாக இருக்கவில்லை. வீட்டில் இருந்துகொண்டே சுற்றுப்புறம் உள்ள ஊர்களில் வாழும் மக்கட்குத் தம்மாலான தொண்டு களைச் செய்து அவர்களுடைய முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபட்டார்.

கவிமணியவர்கட்கு இருந்த இருமல் நோய் பன்னாள் அவரை வருத்தி நின்றது. பின்னர்க் கவிமணி,

"பண்டிதரும் கைவிட்டார் பத்தியமுந் தீர்ந்ததுயான்
உண்டமருந் தால்குணமோ ஒன்றுமில்லை—அண்டர்
அமரா வதிகாத்த அண்ணலே செந்தில்
குமரா எனையாண்டு கொள்"

என்னுஞ் செய்யுளை முருகப்பெருமான்மீது பாடி அந் நோயைத் தீர்த்துக்கொண்டார்.

### இறுதி

காலமெல்லாம் பலவகைத் தொண்டுகளில் ஈடுபட்ட கவிமணி தமது எழுபத்தெட்டாம் அகவையில் (26-9-1954) புரட்டாசித் திங்கள் 14-ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

நூல்கள்

1. ஆசிய சோதி
2. மலரும் மாலையும்
3. நாஞ்சில் நாட்டு மருமக்கள் மான்மியம்
4. உமர்கய்யாம் பாடல்
5. தேவியின் கீர்த்தனங்கள்

முதலியன கவிமணியின் நூல்களாம். கவிமணியின் பாடலைக் குறித்து நாமக்கல் கவிஞர்,

"தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பதுஎன் செவிப்பெருமை
ஆசிய சோதியெனும் புத்தர்போதம்
அழகுதமிழில் சொன்னான் அதுபோதும்"

எனப் பாராட்டிப் பாடியுள்ளார்.

---

## கக. சாத்தூர் கந்தசாமி முதலியார்

தோற்றம்

இராமநாதபுரம் மாவட்டத்திலே சாத்தூருக்கு அண்மையில் உள்ள தூங்காரெட்டிப்பட்டி என்னுஞ் சிற்றூரிலே கந்தசாமி முதலியார் தோன்றினார். முதலியார் தோன்றிய காலம் ஆங்கிலம் 1892-இல் ஏப்ரல் திங்கள் பதினான்காம் நாள் ஆகும். முதலியாரின் தந்தையார் பெயர் சுப்பிரமணிய முதலியார். தாயார் பெயர் சுப்பம்மையார். குலம் சைவவேளாண் குலம். முதலியாருடைய முன்னோர்கள் முந்நூறு யாண்டுகட்கு முன்னர்த் தென்னார்க்காடு மாவட்டத்தில் இருந்து வந்து குடியேறியவர்கள் என்பர்.

கல்வி

முதலியார் முதன்முதலில் தம்மூரில் திண்ணைப்பள்ளியில் கல்விகற்கத் தொடங்கினார். பிறகு திருமங்கலம் போர்டு பாடசாலையில் சிறிதுநாள் பயின்றார். அதன்பின்

சாத்தூர் ஏ. வி. பாடசாலையில் சில ஆண்டுகள் கற்றூர். அப்பால் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி, பசுமலை அமெரிக்கன் கலாசாலை, திருச்சிராப்பள்ளி எஸ். பி. ஜி. கல்லூரி ஆகியவைகளில் கல்வி கற்று 1917-இல் பி. ஏ., பட்டம் பெற்றூர். முதலியார் கல்வி கற்ற காலத்தில் நல்ல குற்றூலலிங்கம் பிள்ளை, சோமசுந்தர பாரதியார், வேங்கட சாமி நாட்டார் முதலியோர் தமிழாசிரியர்களாக இருந்தனர். முதலியாருக்குத் தமிழ்மொழியினிடத்திலே பற்று மிகுதியாக இருந்தது. தமிழாசிரியர்களோடு நெருங்கிய உறவு கொண்டார். தாம் விரும்பிய சில நூல்களைத் தனியாகப் பாடங்கேட்டார். இதனுல் தமிழறிவு வளரத் தொடங்கியது. நாட்டார் சொற்பொழிவு செய்யச் செல்லுமிடங்கட்கெல்லாம் உடன்செல்வார். அதனுல் சொற்பொழிவு செய்யும் ஆற்றலும் உண்டாகியது. கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும்போதே செய்யுட்கள் இயற்றிப் பரிசுபெற்றூர். முதலியாரின் தமிழ் ஆற்றல் நாட்டாருக்கு நன்மதிப்பைத் தந்தது. நாட்டார் தாம் வகுப்புகட்குச் செல்ல முடியாத நாட்களில் பாடம் நடத்துமாறு முதலியாரிடம் பொறுப்பளித்துச் செல்வார். அவ்வமயங்களில் முதலியார் தமிழ் வகுப்பைத் திறமையாக நடத்திப் புகழ்பெற்றூர். 1917-18-ஆம் ஆண்டுகளில் சிவகாசி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் பணிபுரிந்தார்.

### வழக்கறிஞர்

முதலியார் உள்ளம் வழக்கறிஞர் தொழிலை நாடியது. 1919-ஆம் ஆண்டில் சட்டப்படிப்பில் தேறிச் சாத்தூரில் வழக்கறிஞர் தொழிலை நடத்தத் தொடங்கினுர். முதலியாரின் உள்ளம் நேர்மையையே நாடிநின்றது. எவ்வளவு பெருந்தொகை கிடைப்பதாக இருப்பினும் பொய்வழக்கை

ஏற்றுக்கொள்ளமாட்டார். மெய்வழக்கென்று நன்குணர்ந்த பின்னரே வாதிக்க ஒருப்படுவார். வழக்குரைப்பதில் இணையற்றவர். வழக்கின் விவரங்களையெல்லாம் நன்கு உணர்ந்துகொண்ட பிறகுதான் வழக்கை நடத்தத் தொடங்குவார். பதற்றமாக உரையாடமாட்டார். ஒவ்வொரு மொழியையும் நன்கு எண்ணியே பேசுவார். அளவாகப் பேசுவாரே தவிர, மிகுதியாகவோ குறைவாகவோ பேசமாட்டார். செய்தியை விளக்குவதற்குப் போதிய மொழிகளை ஆராய்ந்து கொள்வார். இதனால் நீதிமன்றத் தலைவர்களும் வழக்காளர்களும் பிற வழக்கறிஞர்களும் இவரிடத்தில் பெருமதிப்புடன் நடந்துகொண்டனர். 'முதலியார் ஒரு நல்ல வழக்கறிஞர்' என்னும் பெயர் உண்டாகியது.

சித்தாந்தமுந் திருக்குறளும்

சைவசித்தாந்த நூல்களை முதலியார் தக்கார்களிடம் நன்கு கற்றுணர்ந்து அதிலே நல்ல புலமையுந் தெளிவும் பெற்றார். திருக்குறளிடத்திலே முதலியாருக்குப் பேரன்புண்டு. திருக்குறளுக்குப் பலபேர் எழுதிய உரைகளையும் நன்கு ஆராய்ந்தார். பல குறள்களுக்கு அரிய புத்துரையுங் கூறினார். முதலியாருடைய திருக்குறளாராய்ச்சித் திறன் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ள திருக்குறள் பரிமேலழகர் உரைப்பதிப்பின் முன்னுரையால் நன்கு விளங்கும். முதலியாருடைய சொற்பொழிவுகளும் உரையாடல்களும் கட்டுரைகளும், சைவசித்தாந்தக் கருத்துக்களையும் திருக்குறட் கருத்துக்களையுந் தம்மகத்தே கொண்டனவாக விளங்கும். முதலியாருடைய பெருஞ்சீர்த்திக்கு இந்நூற் கருத்துக்களே காரணமாக அமைந்தன.

காசியில் கலைத்தொண்டு

திருப்பனந்தாள் திருமடத்தினர் காசிமாநகரில் சைவசித்தாந்தக் கட்டளை ஒன்று ஏற்படுத்தியுள்ளனர். அக்கட்டளையாவது :—காசியில் பல்கலைக் கழகம் ஒன்று உள்ளது. அக்கழகத்திற்கு ஆண்டாண்டுதோறுஞ் சைவ சித்தாந்தப் பேரறிஞர் ஒருவரை அனுப்பி அந்நாட்டு மாணவர்கட்குச் சைவசித்தாந்த முடிபுகளை விளக்க வேண்டும் என்பதேயாம். அப்பணிக்குச் செல்லத் தக்கார் ஆங்கிலத்தில் கலைமுதுவர் (எம்.ஏ) என்னும் பட்டம் பெற்றிருத்தல்வேண்டும். சைவசித்தாந்தத்திலும் தமிழிலும் பெரும் புலமையாளராக இருத்தல் வேண்டும் என்பதே யாகும். அவ்வாறே ஆண்டுதோறுந் தக்கார் ஒருவர் சென்று சொற்பொழிவு செய்து வருகின்றனர். முதலியாரும் ஓராண்டு சென்று ஆங்கிலத்தில் சைவசித்தாந்த விரிவுரைகள் ஆற்றித் தம் புலமையையும் பெருமையையும் புலப்படுத்தி வந்தார்.

பொதுநலப்பணி

முதலியார், மக்களின் பொதுநலத்திற்காகவும் அரும் பெருஞ் செயல்களைச் செய்துவந்தார். சிலகாலம் நீதிக் கட்சியில் உறுப்பினராயிருந்தார். பிறகு எக்கட்சியிலும் ஒட்டாமல் எல்லாக்கட்சிகளையும் பற்றிநின்று அருந் தொண்டு புரிந்தார். அறிஞர்களாக விளங்குவோர் ஒரு கட்சிக்குரியராயின் பிற கட்சியினர் ஏமாற்றத்தையடைய நேரிடும். அறிவுடைமை எல்லோருக்கும் பொதுவுடைமை. ஆகவே முதலியார் தக்கநிலையில் நின்று பணிபுரிந்தார். நாட்டின் விடுதலையிலும் ஈடுபட்டார். சாதி ஒழிப்பிலும் ஈடுபட்டார். சமயவளர்ப்பிலும் ஈடுபட்டார். ஒன்றுக் கொன்று மாறுபாடுகொண்டு மோதாத வகையில் பணி யாற்றினர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழாராய்ச்சிக் குழுவின் பார்வையாளராகப் பலமுறை தொண்டுசெய்தார். இராசாசர் அண்ணாமலைச் செட்டியார், முதலியாரிடத்திலே பெருமதிப்புக் கொண்டிருந்தார். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் இயக்குநர் கூட்டத்திலும் உறுப்பினராக இருந்து பணிசெய்துள்ளார். சாத்தூரில் தமிழ்ச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதன் செயலாளராகவும் உறுப்பினராகவும் இருந்து பல்லாண்டுகள் பணிபுரிந்தார். சென்னைச் சைவசித்தாந்த மகாசமாசத்தின் தலைவராக இருந்தும் பணிபுரிந்தார். தூத்துக்குடி சைவசித்தாந்த சபைக்குப் பன்முறை தலைமை பூண்டுள்ளார்.

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கச்சார்பில் 27-4-52 முதல் 20-5-52-வரை திருநெல்வேலி சிந்துபூந்துறை மடத்தில் சிவஞானபோதச் சிற்றுரைச் சித்தாந்த வகுப்புச் சிறப்புற நடந்தபோது அதன் பேராசிரியராய் அமர்ந்து அறுபதின்மர்க்குச் சைவசித்தாந்த ஞான போதஞ் செய்தார்.

ஒடுக்கம்

முதலியார் தமது ஆராய்ச்சிப்பேருரைகளை நூல் வடிவில் வெளியிட எண்ணியிருந்தார். சிலகாலமாக நோய்வாய்ப்பட்ட அவர் 1954-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இருபத்தேழாம் நாள் இறைவன் திருவடிநீழலை அடைந்தார். முதலியாரின் அரிய ஆராய்ச்சி நூல்கள் இனி வெளிவந்து மக்கட்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

## உ0. இரசிகமணி சிதம்பரநாத முதலியார்

### தோற்றமுங் கல்வியும்

தென்காசிக்கு அண்மையில் உள்ள களங்காடு என்னும் ஊரிலே, தீர்த்தாரப்ப முதலியார் என்பவருடைய திருமகனாக, டி. கே. சிதம்பரநாத முதலியார் 1882-ஆம் ஆண்டில் பிறந்தார். முறையாகத் தமிழ்க் கல்வியையும் ஆங்கிலக்கல்வியையும் கற்றார். ஆங்கிலத்தில் பி. ஏ. பி. எல். என்னும் பட்டமும் பெற்றார். இந்துமததாபனப் போர்டில் ஆணையாளராக இருந்து அருந்தொண்டுகள் பல புரிந்தார்.

சிதம்பரநாதர் ஆங்கிலக் கல்வியறிவைப் பெற்றிருந்தும் அம்மொழியில் மோகங்கொண்டு தாய்மொழியாந் தமிழ்மொழியை மறந்துவிடவில்லை. தமிழ்நூல்களைக் கற்பதிலே பேரூக்கம் காட்டினார். கம்பருடைய இராம காதை சிதம்பரநாதர்க்குப் பெருமகிழ்ச்சியை அளித்தது. அந்தக் காதைக்கடலிலே திளைத்துக் களித்தார். “நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்னும் குறிக் கோளினராய் அரிய இராமாயணப் பாடல்களுக்கு விளக்க வுரை அரும்பதவுரை முதலியவைகளைக் கல்வியறிவு மிகுதி யாகப் பெறாதோரும் கற்றுக்களிக்குமாறு, கல்கி என்னுங் கிழமைத்தாளில், “கம்பர் தருங்காட்சி” எனப் பெயரிட்டு நெடுங்காலம் எழுதினார். அக்கிழமைத்தாளைப் படிப்ப வரின் தொகை பல ஆயிரமாதலின் இராமாயணநூலின் அருமை பெருமைகளைப் பல்லாயிரம் மக்கள் கற்று மகிழ் தற்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. கலைவிருந்தேயன்றி உணவு விருந்தளிப்பதிலும் டி. கே. சி. புகழ்பெற்றவராக விளங்கினார்.

குற்றாலத் தமிழ்

டி. கே. சி. பின்னாளில் திருக்குற்றாலத்தில் தங்கியிருந்தார். அறிஞர்களும் செல்வரும் பொதுவான அறிவு படைத்தவர்களும் டி. கே. சியின் இருப்பிடத்தை நாடிச் சென்றனர். அனைவரும் டி. கே. சியின் உரையாடலை விரும்பியே சென்றனர். தம் இனிய சுவைமிக்க மொழியால் டி. கே. சி. இராமாயணப்பாக்களை உரைத்து உரைத்து மகிழ்வளித்தனர். கேட்டவர்கள், "இது குற்றாலத்தமிழ் மிக நன்றாக இருக்கின்றது" என்று போற்றிப் புகழ்ந்தனர். இதனை உளங்கொண்டே திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள், "தமிழ்க்குலத்தின் பண்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டு வேண்டுமானால், டி. கே. சி. என்று ஒருதலையாகக் கூறலாம். விருந்தளித்தல் என்பது அவர்களிடம் ஒருகலையாக விளங்கிற்று. குற்றாலத்தில் அவர்களைக்காண நற்றமிழ் அறிஞர்கள் வருவார்கள்; பெருஞ்செல்வர்கள் வருவார்கள்; மந்திரிகள்—அதிகாரிகள் வருவார்கள்; பிற நாட்டு நல்லறிஞர்களும் வருவார்கள்; இவர்கள் எல்லோரையும் நல்விருந்தாலும் சொல்விருந்தாலும் மகிழ்விக்குஞ் சிறப்பு, டி. கே. சி. அவர்களிடம் நிகரற்ற முறையில் அமைந்திருந்தது. நண்பர்களுக்குக் குற்றாலம் ஆவியகன்ற கூடுபோலவே தோன்றும்; மலையிருந்தென்ன! மந்தமாருதம் இருந்தென்ன! அருவிதான் இருந்தென்ன! அறிவுக்களஞ்சியத்தை இழந்து விட்டோம்" என்று வானொலியில் கூறினார். மக்களுக்கு விளங்கும்படியான வகையில் தெளிவாகப் பேசுவதிலும் எழுதுவதிலும் டி. கே. சி. மிக வல்லவர். இவைதான் இவருக்கு என்றும் அழியாப் புகழைத் தந்தன.

### புதுமை மோகம்

டி. கே. சிக்குப் புதுமையில் மோகம் உண்டு. இம் மோகம் அவருக்குப் பல பகைவர்களை உண்டாக்கிற்று. ஆயினும் அதைக் குறித்து டி. கே. சி. சிறிதும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. இலக்கணம் இருந்தாலுஞ்சரி இறந்தாலுஞ்சரி மக்கள் எளியமுறையில் செய்திகளை உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதே அவர் கொள்கை. இக்கொள்கையைக் கடைப்பிடித்தே கல்+குடம் - கல்க் குடம், பால்+கடல் - பால்க்கடல், நாள்+சிறந்தது - நாள்ச் சிறந்தது என்பனபோல் பல இலக்கணங்களை மாற்றியெழு தினர். ஆனால், இதற்கு ஆதரவு கிடைக்கவில்லை.

### தமிழ்த்தொண்டு

1924-ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் இலக்கியச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினர். அதன்வாயிலாக அரிய செய்யுட்கள் பலவற்றைப் பொருள்நயங்களோடு அன்பர் கட்குக் கற்பித்தார். கம்பரிடத்திலே டி. கே. சிக்கு அந்த நாளிலேயே காதல் உண்டு. அதன்பயனாகத் தோன் றியதுதான் **கம்பர் யார்?** என்னும் நூல். மற்றும் டி. கே. சி, இதயஒலி முத்தொள்ளாயிரஉரை என்னும் நூல்களையும் எழுதிவெளியிட்டார்.

### இறுதி

திருக்குற்றால வாழ்வையும் கம்பராமாயணச் சுவை யையும் இனிது நுகர்ந்து கொண்டிருந்த டி. கே. சி. இவை களைவிட்டு விண்ணுலகத்திற்குச் செல்லக்கூட விருப்ப மற்றவராக இருந்தார். தம்மைச் சிறுமைப் படுத்துவா ரையும் பெருமைப்படுத்துவாரையும் ஒரே நோக்குடன் நோக்கும் இப்பெரியாரை, விருந்தோம்புவதில் அளவு

கடந்த ஆர்வமுடைய இச் சீரியரை; விண்ணவர்கள் தமக்கு நல்விருந்தாக்க எண்ணினர். 1954-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினாறும்நாள் விண்ணகஞ் சென்றார். மண்ணவர் பலவாறு வருந்தித் துன்புற்றனர். அவர் தந்த கம்பர் தரும் காட்சியே அவர்கள் உள்ளத்திற்குத் தெளிவை யுண்டாக்கியது.

## உக. சேலே சகதேவ முதலியார்

தோற்றம்

சேலே என்பது சென்னை திருவள்ளூருக்கு அண்மையில் உள்ள ஒரு சிற்றூர். அவ்வூரிலே சகதேவர் ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து நான்காம் ஆண்டிலே பிறந்தார். சகதேவரின் தந்தையார் பெயர் சிங்கார முதலியார். சகதேவருக்கு உடன்பிறந்தார் இருவர் முன்னும் பின்னுமாகத் தோன்றினர்.

கல்வி

சகதேவர் திருவள்ளூர் வெஸ்லி மிஷன் உயர் நிலைப் பள்ளியில் கல்விகற்று மெட்ரிக்குலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார். சகதேவருக்குத் தமிழார்வம் மிகுதியாக இருந்தது. ஆகவே தக்கார்பால் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேறியதுடன் தாமேயும் பல நூல்களை இடைவிடாது ஓதியுணர்ந்தனர். இதனால் இவருக்குத் தமிழ்ப் பயிற்சி மிகுதியாயிற்று.

ஆசிரியத் தொண்டு

இவர் கல்விபயின்ற வெஸ்லிமிஷன் உயர்நிலைப் பள்ளி அதிகாரிகள் சகதேவரின் தமிழ்ப் புலமையை உணர்ந்து அப் பள்ளியில்தானே தமிழாசிரியராக ஏற்படுத்தினர்.

பள்ளி அதிகாரிகளும் மாணவர்களும் மன நிறைவுகொள்ளும் வகையில் தம் பணியினைப் புரிந்தனர். சகதேவரின் தமிழ்ப் புலமையை உணர்ந்து அந்நாளில் ஈக்காடு என்னும் ஊரில் இருந்த கிறித்தவ போதகாசிரியர்களும் இவரிடம் ஒய்வு நேரங்களில் தமிழ் கற்றனர்.

### மணமும் மக்கட்பேறும்

சகதேவருக்கு இருமுறை திருமணம் நிகழ்ந்தது. பெண்மக்கள் மூவரும் ஆண்மக்கள் ஐவருந்தோன்றினர்.

### தமிழ்த்தொண்டு

சகதேவர் மாணவர்கட்குப் பன்னெடுநாள் போதித்த பண்புடையாராகலின் பாடப் புத்தகங்கள் எவ்வாறிருப்பின் மாணவர்கள் கற்றற்கு எளிதாக இருக்கும் என்னும் இயல்பை நன்குணர்ந்தவர். ஆகவே, மணி. திருநாவுக்கரசு முதலியார் தாம் பாடப் புத்தகம் எழுதியபோது சகதேவரின் துணையையும் நாடிப் பெற்றார். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளான கழகத் தமிழ்ப்பாட வரிசையில் ஆறு புத்தகங்கள் அமைத்துக்கொடுத்தார். கழகத் தமிழ்ப்பாடத்திரட்டு, ஒன்று, இரண்டு புத்தகங்களைத் தொகுத்துக் கொடுத்தார். மற்றும் நல்லொழுக்கப் பாடம், வாஸ்கோடகாமா, பேசாதார் பேச்சு முதலிய நூல்களையும் எழுதிக் கொடுத்தார்.

### இறுதி

சகதேவர் இறுதிக்காலம் வரையில் தமிழ்த்தொண்டைத் தளராது செய்துகொண்டிருந்தார். இவர் சிறந்த ஒழுக்கம் உடையவர். நற்பண்புகள் பலவும் நண்ணப் பெற்றவர். பொறுமையும் அமைதியும் பொருந்தப் பெற்றவர். வேறுபல நூல்கள் இயற்றவேண்டும் என்னும்

விழைவு மிக்கவராக இருந்தார். ஆயினும் முதுமை அதற்கு இடங்கொடுக்கவில்லை. சின்னாள் உடல்நலங் குன்றியிருந்து 1953-ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் இருபத்தெட்டாம் நாள் தமது எழுபத்தொன்பதாம் அகவையிலே இறைவன் திருவடி நீழலையெய்தினார்.

---

## உஉ. துடிசைகிழார் சிதம்பரனார்

தோற்றம்

துடிசைகிழார் அ. சிதம்பரனார், கோயமுத்தூரில் சிறந்து வாழ்ந்துவரும் வேளாண் குடியில், அர்த்தநாரீசுவர முதலியார் என்பவருடைய அருமைத் திருமகனாகத் தோன்றினார். நீண்டுவளர்ந்த தோற்றம் உடையவர். செந்தமிழையும் ஆங்கிலத்தையும் நன்குகற்றுக் கல்வியறிவிலே சிறந்து விளங்கினார்.

வேலை

துடிசைகிழார், போலீசு இலாகா என்னும் ஊர்காவல் துறையில் அலுவல் பார்க்கத்தொடங்கினார். நாட்டிற்கும் மக்கட்கும் நன்மை பயக்கத்தக்கவகையில் தந்நலங் கருதாது திறமையுடன் செயலாற்றினார். இவர் திறமையுடன் தொழிலாற்றியபடியால் தம் அலுவலில் உயர்ந்து கொண்டேபோய் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னும் உயரிய பதவியையும் அடைந்தார்.

பணி

மனிதயாக்கையைப் பெற்றுள்ளவன் மனது வைத்தால், எங்கிருந்தாலும் என்னவேலை செய்தாலும் ஒய்வு நேரங்களில் தான் வேறொரு வேலையைச் செய்து சிறப்படையலாம். உ. வே. சாமிநாதையர் குடந்தையிலும்

சென்னையிலும் தமிழாசிரியராகத் தொழிலாற்றிக்கொண்டிருந்தார். அவர் பள்ளியைவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் ஒய்வை மேற்கொண்டு வீணுகப் பொழுதைப் போக்குவதில்லை. நூலாராய்ச்சியில் ஈடுபட்டார். கரையானுக்கு இரையாகிவந்த அரும்பெரும் நூல்கள்பலவற்றை ஆராய்ந்து அச்சிட்டு வெளிப்படுத்திச் செந்தமிழ் உலகிற்குச் சிறந்த தொண்டு புரிந்தார். சி. வை. தாமோதரம் பிள்ளையும் இவ்வாறே தமிழ்ப்பணியில் ஈடுபட்டு வேலைசெய்தார். வேறு பலரும் இவ்வாறு செய்தனர். துடிசைகிழார் தாமும் தமிழ்ப் பணியில் ஈடுபட்டார். இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத்தேறினுர். நூலாராய்ச்சியில் பெரிதும் ஈடுபட்டுப் பல புதுச்செய்திகளைக் கண்டுபிடித்தார். தமது உரிமை ஊராகிய துடியலூரைப் பற்றிய செய்திகளை ஆராய்ந்தறிந்து துடிசைப் புராணம் என்னும் செய்யுள் நூலை இயற்றினுர். சிவபூசையிலும் இறைவழிபாட்டிலும் பேரூக்கங்காட்டினுர். 'சிவபூசை விளக்கம்' என்னும் நூலைச்செய்தார். தமிழ் மொழியின் சிறப்புக்களை நன்கு ஆராய்ந்து எழுதி, "கழகத் தமிழ் வினுவிடை" என்னும் பெயருடன் நூலாக வெளிப்படுத்தினுர்.

ஆராய்ச்சி

தமது ஆராய்ச்சித் திறமையைக்கொண்டு சேர மன்னர்களுடைய காலம் வரலாறு முதலியவைகளை ஆராய்ந்து "சேரர்வரலாறு" என்னும் பேருடைய நூலாக வெளிப்படுத்தினுர். இவ்வாறே முதல் இடை கடை என்னும் முச்சங்கங்களைப் பற்றியும் ஆராய்ச்சிசெய்து "தமிழ்ச் சங்கங்களின் வரலாறு" என்னும் பெயருடன் நூலாக வெளிப்படுத்தினுர்.

இறுதி

அலுவல் துறையில் உதவி ஊதியம் பெற்று ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டுத் தமிழ்த் தொண்டை மேற்கொண்டிருந்த இப்பெரியார் எதிர்பாராத நிலையில் திடீரென்று 1954-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் முப்பதாம் நாள் கோயமுத்தூரில் தமது இல்லத்தில் இறைவன் திருவடி நீழலை எய்தினார்.

இவர் இயற்றிய நூல்கள்

1. துடிசைப் புராணம்
2. உருத்திராக்க விளக்கம்.
3. விபூதி விளக்கம்
4. ஆனைந்து
5. திருமந்திரம் குறிப்புரை
6. கழகத் தமிழ் வினா விடை 1
7. ஷை 2
8. கழகச் சைவ வினாவிடை 1
9. ஷை 2
10. அகத்தியர் வரலாறு
11. சேரர் வரலாறு
12. தமிழ்ச் சங்கங்களின் வரலாறு
13. சிவபூசை விளக்கம்

என்பனவாம்.

## உரு. கல்கி, கிருட்டிணமூர்த்தி

### தோற்றம்

கல்கி என்று மறுபெயர் பூண்ட ரா. கிருட்டின மூர்த்தி 1899-ஆம் ஆண்டில், மாயூரத்திற்கு அண்மையில் உள்ள புத்தமங்கலத்தில் பிறந்தார்.

### கல்வி

தொடக்கப் பள்ளியில் சிலகாலம் கல்விகற்ருர். பிறகு மாயூரம் நகராண்மைப் பள்ளியில் படித்தார். அதன்பிறகு திரிசிரபுரத்தில் கல்லூரிப் படிப்பைத் தொடங்கினுர். இடைநிலைவகுப்பு வரையில் (இண்டர்மீடியட்) கற்ருர். 1921-ஆம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து கல்லூரிப் படிப்பைக் கைவிட்டார்.

### கலைத்தொண்டு

இராசகோபாலாச்சாரியார் இராமசாமி நாயக்கர் ஆகியவர்களின் தலைமையில் காங்கிரசுக் காரியாலயத்தில் தொண்டுசெய்தார். கிருட்டின மூர்த்தியின் உள்ளம் கலைப்பணியிலே சென்றது. திரு. வி. க. நடத்திய நவசக்தியில் உதவியாசிரியராக அமர்ந்து பணிபுரிந்தார். இராசகோபாலாச்சாரியாரால் திருச்செங்கோட்டில் தொடங்கப்பெற்ற ஆசிரமத்தில் பணிபுரிந்தார். கட்குடியைத் தொலைத்தற் பொருட்டுத் தொடங்கப்பெற்ற "விமோசனம்" என்னும் பெயருடைய வெளியீட்டிற்கு ஓராண்டுவரை ஆசிரியராக அமர்ந்து அவ்வெளியீட்டைச் சீருஞ்சிறப்புந் திகழ வெளியிட்டார்.

### ஆனந்த விகடன்

இன்று தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் தமிழ் படிக்கத் தெரிந்த எல்லா இடங்களினும் ஆனந்தவிகடன் என்

னும் கிழமைவெளியீட்டை நாம் பார்க்கலாம். அந்த வெளியீட்டின் மூலம் கல்கி செய்துள்ள நற்றமிழ்த் தொண்டு அளவற்றது. ஓர் இருபது ஆண்டுகளுக்கு முன் வரைகூடத் தமிழ்மக்கள் நகைச் சுவையின் பெருமையை நன்குணர்ந்து கொள்ளவில்லை. நகைச் சுவையை நன்கு நுகரமுடியாத அல்லது நுகர அறியாத சிற்றறிவாளர்கள் நகைச் சுவையைக், 'குறும்பு' என்றுகூறி நகைச்சுவை ததும்பச் சொல்லாடுபவர்களைக் குறும்பர்கள் என்றும் குறைகூறி இழித்துரைத்து வந்தனர். இத்தகைய மனப் பான்மை முக்காற்பாகம்வரை தமிழ் நாட்டைவிட்டு நீங்கு தற்கு நல்லவேலை செய்தவர் கல்கி. நகைச்சுவை மூலமாக எச்செயலையும் எளிதில் செய்துமுடிக்கலாம் என்னும் சூழ்ச்சித்திறனைத் தமிழ் நாட்டிற்கு விளக்கமாகக் காட் டியவர் கல்கி. நாட்டு விடுதலைக்கான நாட்டுப்பற்றை ஆனந்த விகடன் வழியாகக் கல்கி நன்கு வளர்த்தார். இந்த நகைச்சுவை வழியே தமிழ்த்தொண்டும் நன்குவளர்ந்து சிறப்படைந்தது. இவ்வழியில் கல்கி செய்துள்ள தமிழ்த் தொண்டை அவரிடம் வெறுப்புக்கொண்ட பகைவர்கள் கூடப்போற்றுவார்கள் என்பதற்குச் சிறிதும் ஐயமின்று. இந்தப் பணியினால் ஆனந்தவிகடன் தாளைத் தொடங்கியவர் களும் நல்ல ஊதியம் பெற்றுச் சிறப்படைந்தனர்.

கல்கி

ஆனந்தவிகடன் தாளின் உரிமையாளராகிய வாசன் என்பவரோடு இடையே நேர்ந்த சிறுமாறுபாட்டுணர்ச் யால் கல்கி ஆனந்தவிகடன் பத்திரிகையில் இருந்து விலகி னார். "கல்கி" என்னும் தமது புனைபெயரோடு கிழமை இதழ் ஒன்றைத் தொடங்கினார். கல்கியாருடைய கைவளம் அவ்விதழும் விரைவாக வளர்ந்து தமிழ்நாடெங்கும் பரவியது. கல்கியார் தமக்கே உரிமையான தனிப்போக்கில்

அப்பத்திரிகையையும் நடத்தி நாளொருமேனியும் பொழு தொருவண்ணமுமாகச் சிறப்படைந்து வந்தார்.

**பாரதியிடம் பற்று**

நாட்டு விடுதலைக்காகப் படாதபாடெல்லாம் பட்டுப் பாட்டினுல் நாட்டுக்கு விடுதலை தேடியவர் சுப்பிர மணிய பாரதியார். பாரதியாரைப்பற்றி அறியாத தமிழ் மக்கள் இன்றைய உலகில் எவரும் இரார். நாட்டுவிடுதலைக் காக உயிரைத் துரும்பென மதித்து வேலைசெய்தவர் அவர். அந்தப் பாரதியாரிடம் கல்கி மிகுந்த பற்றுக்கொண்டார். அவர் பிறந்த இடமாகிய எட்டையபுரத்திலே மண்டபம் ஒன்றை அமைத்தார். பாரதியாருடைய குடும்பத்தா ருக்கும் பல உதவிகள் செய்தார்.

**பலவகைத் தொண்டு**

எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக அமர்ந்து எழுத் தாளர்கள் சிறப்புறுதற்கு வழிதேடினுர். கம்பர் கழகத் தின் தலைவராய் அமர்ந்து அரும்பணி புரிந்தார். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைசென்றுர். திரு. வி. க. அவர்கட்கு நினைவுமண்டபம் ஒன்று அமைப்பதற்கும் வேலைசெய்தார். நாட்டில் தலைசிறந்து விளங்கும் பெரிய மனிதர்கள் பலர் உதவியை நாடித் தம்மையடையும் போதெல்லாம் அவர்கட்கு உதவி புரிந் தார் கல்கி. தமிழறிந்த மக்கள் கல்கியிடத்திலே தனி மதிப்புவைத்திருந்தபடியால் பெருந்தலைவர்களும் கல்கியின் உதவியை நாடும்படியான நிலைமை ஏற்பட்டிருந்தது.

**இறுதி**

கல்கி இராப்பகல் எழுத்து வேலையில் ஈடுபட்டிருந்தார். அதனுல் அவருடைய உடல்நலம் கேடடைந்திருந்தது. சின்னுள் சென்னைப் பெரிய மருத்துவசாலையில் நோய்

நீக்கத்தின் பொருட்டு மருந்துண்டு சிறிது உடல்நலம் பெற்று இல்லந் திரும்பினர். எவரும் எதிர்பாராதவகையில் 5-12-1954-ல், தமது ஐம்பத்தைந்தாவது அகவையில் திடீரென்று வானகஞ்சென்ருர். "நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும், பெருமை உடைத்திவ்வுலகு" என்பது பொய்யாமொழி அன்ருே?

**எழுதிய நூல்கள்**

கல்கி இலக்கண இலக்கியத்தொடர்பான நூல்களைக் கற்று அவ்வரிசையில் நூல்களை எழுதவில்லை யெனினும் அவர் எழுதிய,

1. சாரதையின் தந்திரம்
2. கள்வனின் காதலி
3. மோகினித் தீவு
4. பார்த்திபன் கனவு
5. சோலைமலை இளவரசி
6. சிவகாமியின் சபதம்
7. மகுடபதி
8. அலையோசை

முதலிய பெருங் கதைநூல்கள் தமிழறிந்த எல்லா மக்களாலும் பெரிதும் பாராட்டிப் படிக்கப்பெறுகின்றன.

## உச, மனோன்மணி அம்மையார்

### தோற்றம்

சென்னைக் குன்றத்தூருக்கு அண்மையில் உள்ள மண்ணிவாக்கம் என்னும் சிற்றூரிலே மனோன்மணி அம்மையார் 1863-ஆம் ஆண்டு பிறந்தார். அம்மையாரின் தந்தையார் பெயர் முருகேச முதலியார். தாயார் பெயர் அலர்மேல் அம்மையார். அம்மையாரோடு பிறந்த ஆண் மக்கள் மூவர்.

### கல்வி

மனோன்மணி அம்மையாரின் தந்தையாரான முருகேச முதலியார் தமிழ்நூல்கள் பலவற்றைப் படித்து எடுத்த தமிழ்நூல்களைப் படிக்கத்தக்க அறிவாளியாக விளங்கினார். மற்றும் அவர் மருத்துவ நூல்களையுங் கற்று மருத்துவத்தொழிலும் அறிந்திருந்தார். முருகேச முதலியார் தம் மக்களுக்குத்தாமே கல்விகற்பித்தார். ஆண் மக்களைவிட மனோன்மணி அம்மையார் தம் தந்தையாரிடம் கருத்தாகக் கல்விகற்றார். தொடக்கப் பள்ளியிலும் அம்மையார் சிறிதுகாலம் கல்விகற்றபின் மீண்டுந் தம் தந்தையாரிடமே அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ் முதலிய சிறுநூல்களைப் பாடங்கேட்டார். அகவை பதினைந்து நிரம்பியபின் பெரிய புராணம் திருவிளையாடற் புராணம் முதலிய புராணங்களையும் பாடங்கேட்டார். சமயநூல் பலவற்றைத் தாமாகப் படித்தறிந்தார். அம்மையார் எப்பொழுதும் ஏடுங்கையுமாகவே இருந்து கல்வி கற்றார்.

### திருமணம்

நாளடைவில் மனோன்மணி அம்மையார் அறிவிற் சிறந்து விளங்கினார். அகவை ஈரொன்பது நிறையப்

பெற்ற அம்மையார், நல்ல ஒழுக்கமும் ஓரளவு கல்வியறிவும் நல்ல உடல்வன்மையும் போதிய வருமானமும் உடைய ஓர் இளைஞனைத் தாமே தேர்ந்தெடுத்துத் திருமணம் புரிந்து கொண்டார். இல்லறவாழ்க்கை இனிது நடை பெற்றது. அம்மையாரின் கணவனும் அம்மையார் போக்கைப் பற்றித் தமிழ் நூல்களைப் படித்தறிந்தான். ஒத்த மனமுடைய மணமக்கள் உலகத்தில் நீடித்து வாழ்தல் அருமை. எலியும் பூனையும்போல் போரிட்டுக்கொண்டு இல்லறம் நடத்துபவர்கள் நீடித்து நிலைத்து நிற்பார்கள். மனோன்மணியம்மையாரின் கணவன் ஏழாண்டுகட்குப் பிறகு விண்ணகஞ்சென்றான். அம்மையார் இருபத்தைந் தாவது ஆண்டிலேயே கைம்மையாகும்படியாக நேரிட்டு விட்டது.

மருத்துவப் பயிற்சி

மணாளனை இழந்த மனோன்மணி அம்மையார் மருத்துவம் பயின்று மக்கட்குத் தொண்டுசெய்து காலங்கழிக்க எண்ணினார். தம் தந்தையிடம் முன்னரே சிறிது மருத்துவம் பயின்றிருந்தபடியினாலேயே அம்மையாருடைய உள்ளம் இவ்வாறு செம்மையான வழியிற்சென்றது. தம் எண்ணத்தைத் தந்தையார்க்குணர்த்தினார். அவரும் மகளின் எண்ணத்திற்கு இணங்கினார். அந் நாளிலே சென்னைமாநகரிலே தஞ்சாவூர் சுப்பிரமணிய பண்டிதர் என்பவர் சிறந்த மருத்துவராக விளங்கினார். அவருடைய பெயர் பலவிடங்களிலும் பரவிச் சீர்த்திபெற்றிருந்தது. முருகேச முதலியார் தம் குடும்பத்தோடு சென்னைக்குக் குடி பெயர்ந்தார். சுப்பிரமணிய பண்டிதரைக் கண்டு தம் மகளுடைய எண்ணத்தைக் கூறினார். மனோன்மணி அம்மையாருடைய தமிழறிவையும் அறிவாற்றலையும் நன்குணர்ந்த சுப்பிரமணிய பண்டிதர் அம்மையாருக்கு மருத்

துவத் தொழில் கற்பிக்க இணங்கினர். அன்றுமுதல் அம்மையார் பண்டிதருடைய மாணவியாகி ஏறக்குறைய நான்கு யாண்டுகள் மருத்துவப் பயிற்சி பெற்றார். பெண்கள் மருத்துவத்திலும் குழந்தைகள் மருத்துவத்திலும் அம்மையார் நன்கு தேர்ச்சிபெற்றுத் திகழ்ந்தார்.

இல்லத்தில் மருத்துவசாலை

அம்மையார் தமது இல்லத்திலேயே மருத்துவத் தொழிலைத் தொடங்கினர். அம்மையார் இல்லம் சென்னையில் கொண்டித்தோப்புப் பகுதியில் அமைந்திருந்தது. அப்பகுதியில் இருந்த பெண்களும் குழந்தைகளும் அம்மையாரிடம் மருத்துவஞ்செய்துகொள்ளலாயினர். மருத்துவஞ்செய்துகொள்ள வருபவர்களிடம் அம்மையார் வற்புறுத்திக் காசு வாங்குவதில்லை. அவர்களே விரும்பிப் பலகையின்மீது வைத்துச் செல்லுந்தொகையை எடுத்துக் கொள்வார். நோய்நீக்குந் திறமையில் சிறந்திருந்தமையாலும் பொருளில் கண்டிப்பு இன்மையாலும் நோயாளர்களிடம் அன்போடும் அருளோடும் நடந்துகொண்டமையாலும் சென்னைமாநகரின் எம்மருங்கும் அம்மையார் பெயர் பரவியது.

பூவை கலியாணசுந்தரர் நட்பு

அந் நாளில் சென்னையில் பூவை கலியாணசுந்தர முதலியாரும் வாழ்ந்திருந்தார். அம்மையாரும் சுந்தரரும் ஒருவரைப்பற்றி ஒருவர் உணர்ந்திருந்தார்கள். ஒரு சமயத்தில் கலியாண சுந்தரரின் மனைவியார் நோயுற்றார். கலியாணசுந்தரர் தம்மனைவியை மனோன்மணி அம்மையாரிடம் முதன்முறையாக அழைத்துக்கொண்டு வந்தார். அந்நாள்முதல் இருவருக்கும் பழக்கம் மிகுதியாகிவந்தது. அம்மையார் சுந்தரரை ஆசிரியராகக்கொண்டு மேலும்

இலக்கண இலக்கியங்களைக் கற்று நன்றாகச் செய்யுள் இயற்றும் ஆற்றலைப் பெற்றார். அரும்பொருள் எவரிடம் அமைந்திருப்பினும் அவரிடம் இருந்து அதனைப் பணிவுடன் பெறுவது இழுக்காகமாட்டாது. அறிந்தவர் உயர்ந்தவர்; அறியாதவர் தாழ்ந்தவர். இந்நிலை எல்லோருக்கும் பொருந்துவதேயாகும். அம்மையாருடைய மருத்துவ நூற்பயிற்சி கலியாண சுந்தரருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. தம் இல்லத்தில் உள்ளவர்கள் அளவுக்கேனும் மருத்துவஞ்செய்துகொள்ளலாம் என்னும் எண்ணத்துடன் அம்மையாரிடம் சுந்தரர் மருத்துவநூல்கள் சிலவற்றைக் கற்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். அம்மையாரும் அதற்கு இணங்கி மருத்துவநூல்கள் சிலவற்றைக் கற்பித்தார்.

நூல்கள் இயற்றல்

அம்மையார் மருத்துவத்தொண்டோடு மன நிறைவு பெற்றுவிடவில்லை. மாதர்களின் நன்மையின் பொருட்டும் முன்னேற்றத்தை முன்னிட்டும் மாதர் கல்விச் சங்கம் முதலியவைகளை ஏற்படுத்தி அதன்வாயிலாகவும் அருந்தொண்டாற்றினார். ஓய்வுநேரங்களிலெல்லாம் இறைவன்மேல் புகழ்நூல்கள் இயற்றல், மருத்துவநூல்கள் செய்தல் முதலியவைகளில் ஈடுபட்டார். நண்பர்கள் அறிஞர்கள் முதலானவர்கட்கு அம்மையார் செய்யுளாகவே கடிதம் எழுதலும் உண்டு. அம்மையார் மருத்துவத்துறையில் மட்டுமன்றித் தமிழ்த்துறையிலும் வல்லவரென்னும் செய்தி அம்மையார் பாடிய நூல்களால் 1891-ஆம் ஆண்டில் யாண்டும் பரவத்தொடங்கியது.

அறிஞர்கள் பாராட்டு

அம்மையாருடைய நூல்களைப் பாராட்டி அக்காலத்தில் இருந்த புலவர் பெருமக்கள் சாற்றுக்கவிகள்

பாடிச் சிறப்புச் செய்தனர். அவ்வாறு செய்தவர்களில் சிறந்தவர்கள்; வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள், திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிரமணியத் தம்பிரான், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை எம்.ஏ. (மனோன்மணீய ஆசிரியர்), யாழ்ப்பாணம் சரவணமுத்துப் பிள்ளை, வெண்பாப் புலி வேலுச்சாமிப்பிள்ளை, திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை, தசாவதானம் பேறை செகநாதப் பிள்ளை, கந்தசாமிப் புலவர், சோடசாவதானம் சுப்பராய செட்டியார், பூவை கலியாணசுந்தர முதலியார் முதலியோராவர்.

அம்மையார் தம்முடைய பெயரால் மருத்துவநூல் ஒன்றைச் செய்தார். மருத்துவக் கலைஞர்களும் பிறரும் அந்நூலைப் பாராட்டிப் போற்றியதுடன் அம்மையார்க்கு 'ஆயுர்வேதரத்நாகரம்' என்னும் பட்டத்தையும் வழங்கிப் பெருமைப்படுத்தினர்.

## இறுதி

அம்மையார் தமது நாற்பத்தைந்தாம் அகவையில் 1908-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடிநீழலை அடைந்தார்.

## அம்மையார் ஆக்கிய நூல்கள்

1. மனோன்மணீயம்
2. சென்னைக் கந்தசாமி பதிகம்
3. பூவைச் சிங்கார சதகம்
4. பொன்னியம்மன் பதிகம்
5. பழநிப் பாமாலை
6. பழநி இரங்கல் விருத்தப்பதிகம்
7. திருவாமாத்தூர்ப் பஞ்சரத்நம்
8. ஆனைக்கா அகிலாண்ட நாயகி அந்தாதி
9. திருமயிலைக் கற்பகவல்லியந்தாதி

10. பழநிச் சந்நிதிமுறை
11. பழநிவெண்பாப்பதிகம்
12. திருக்கழுக்குன்றம் திரிபுரசுந்தரிமாலை
13. கொடியிடை நாயகி அந்தாதி
14. பழநிச்சிங்கார மாலை.

முதலியன.

---

## உரு. நாகை நீலாம்பிகை அம்மையார்

தோற்றம்

தனித்தமிழ் இயக்கங்கண்ட தமிழ்ப் பெருமாட்டியாகிய நீலாம்பிகை அம்மையார், மறைமலை அடிகளாரின் அருந்தவச் செல்வியாக 1903-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஆறும் நாள் நாகபட்டினத்திலே பிறந்தார். நீலாம்பிகையம்மையாரின் தாயார் பெயர் சவுந்தரவல்லியம்மையார். மறைமலையடிகளார் பிறகு சென்னையை இருப்பிடமாகக்கொண்டு அங்குச்சென்று தங்கியமையின் அம்மையாருடைய கல்விப் பயிற்சி முதலியன சென்னையில் நிகழ்ந்தது. அம்மையாருடன் பிறந்தவர்கள் ஆண்மக்கள் நால்வர் பெண்மக்கள் இருவர்.

கல்விப் பயிற்சி

மறைமலை அடிகளார் 1911-ஆம் ஆண்டிலே சென்னையை அடுத்துள்ள பல்லாவரத்திற்குக் குடியேறினர். அம்மையார் சென்னையிலும் பல்லாவரத்திலும் தொடக்கப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்புவரையில் கல்விபயின்றூர். பிறகு அடிகளாரே தம் அருமைத் திருமகட்கு நன்னூல் நளவெண்பா, ஆறுமுக நாவலரின் பெரியபுராண உரை நடை, தண்டியலங்காரம், யாப்பருங்கலக்காரிகை, நைடதம்,

வில்லிபாரதம், புறநானூறு முதலிய நூல்களைக் கற்பித்தார். கட்டுரைகளை எழுதிக்கொடுத்து அவைகளை மனப்பாடஞ் செய்து அவைகளிற் சொற்பொழிவாகச் செய்தற்கும் பழக்கினர்.

தனித்தமிழ் வேட்டல்

அம்மையார் கல்வியறிவிலும் குணநலத்தினுஞ் சிறந்து தந்தையாருடன் இனிதுறைந் திருந்தார். ஒரு நாள் தந்தையும் மகளும் வீட்டுத்தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார்கள். அப்போது இராமலிங்க அடிகளாரின்,

"பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சங் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்என்
நமச்சி வாயத்தை நான்மற வேனே."

என்னும் அருட்பாப்பாடலை அடிகளார் இனிமையாகப் பாடினர். பிறகு தம் அருமைத் திருமகளைப் பார்த்து, "நீலா இப்பாட்டில் உள்ள 'தேகம்' என்னும் வடசொல்லுக்குப் பதிலாக 'யாக்கை' என்னும் தமிழ்ச்சொல் ஆளப்பட்டிருந்தால் இப்பாடலின் சொல்லோசை இன்னும் மிகுந்த இனிமையாக இருக்குமன்றோ? வடசொற்களும் ஏனைய அயன்மொழிச் சொற்களும் தமிழிற் கலப்பதால், தமிழ்மொழியின் இனிமை குறைவுபடுவதுடன் தமிழ்ச் சொற்கள் பலவும் நாளடைவில் மறைய அயல்மொழிச் சொற்கள் மிகுதியாக வந்து தமிழில் நிலைபெற்று விடுகின்றன. இதனல் காலஞ்செல்லச் செல்லத் தமிழ்ச் சொற்கள் மறைந்து குறைந்து இறந்து ஒழிகின்றன. இவ்வாறே

நிகழ்ந்துகொண்டிருந்தால் நாளடைவில் தமிழ்மொழியும் இறந்துபோன மொழிகளில் ஒன்றாகிவிடுமன்றோ" என்று இயம்பினர்.

அடிகளாரின் அறிவுரையைக் கேட்ட அம்மையார், "அவ்வாறாயின் இனிமேல் நாம் தனித்தமிழில் பேசவும் எழுதவும் உறுதிகொள்ளுதல் வேண்டும்" என்று உணர்ச்சி ததும்ப உரைத்தார். அன்றுமுதல் அம்மையார் பேசும் போதும் எழுதும்போதும் தனித்தமிழையே கையாளத் தொடங்கினர். தனித்தமிழ்ச் சொல் ஆராய்ச்சியில் ஈடு பட்டார். தம் தந்தையாரையும் தனித்தமிழ் வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அருமை மகளாரின் வேண்டுகோட் கிணங்கித்தான் அடிகளார் தம் பெயர் முதலியவைகளைத் தமிழிலே மாற்றியமைத்துத் தாமும் தனித்தமிழில் பேச வும் எழுதவுந் தொடங்கினர்.

மேலுங் கல்விப் பயிற்சி

அம்மையார் தமிழிற் கலந்துள்ள வடசொற்களைத் தெரிந்துகொள்வதற்கு வடமொழிப் பயிற்சி இன்றியமை யாதது என்று அறிந்தார். அதன்பொருட்டுத் தந்தையா ரிடமே வடமொழி கற்கத்தொடங்கி அதனை ஓரளவு கற்ற றிந்து கொண்டார். மேலும் ஆங்கிலங்கற்க விரும்பி 1918-க்குப்பின் சென்னை லேடி வில்லிங்டன் கல்லூரியிற் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் ஆங்கிலம் பயின்றார். அதில் சிறப்பாகத் தேறினர்.

திருவரங்கர் வருகை

திருநெல்வேலியை அடுத்த பாளையங்கோட்டையில் சைவ வேளாளர் மரபில் 1890-ஆம் ஆண்டில் தோன்றிய திருவரங்கனர் 1914, 15, 16, 17-ஆண்டுகளில் கொழும்பு நகரில் அலுவல் பார்த்துக்கொண்டிருந்தார். மறைமலை

யடிகளாரின் புகழ், இலங்கையிலும் பரவியிருந்தது. அரங்கனார் அடிகளாரைக் கொழும்புக் கழைத்துப் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தச் செய்தார். அதன்பொருட்டுப் பெரும்பொருளும் திரட்டித் தந்தார். இவ்வாற்றினால் மறைமலையடிகளார்க்கும் திருவரங்கனார்க்கும் பழக்கம் ஏற்பட்டிருந்தது. அரங்கனாரின் பேருதவியையுஞ் சீரிய குணநலத்தையும் நன்கு மதித்த அடிகளார் அரங்கனார்க்குத் தக்கவாறு கைம்மாறு செய்யவேண்டும் என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்.

1918-ஆம் ஆண்டில் திருவரங்கனார் அடிகளார் விருப்பப்படி பல்லாவரத்திற்குச் சென்றார். திருவரங்கனார்க்கு அடிகளால் நல்வரவேற்பு நடந்தது. அரங்கனார் நீலாம்பிகை அம்மையாரைக் கண்டார். அம்மையாரின் அறிவு, அன்பு, அழகு, அடக்கம் முதலிய குணநலன்கள் அரங்கனாரின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. அம்மையாரும் அரங்கனார்மீது அன்புகொண்டார். இருவருடைய காதற்குறிகளையுங்கண்ட அடிகளார் தாம் அதற்குத் தடையேற்படுத்தவில்லை. உடன்பாடாக இருந்து அரங்கனார்க்குத் தம்மகளைத் திருமணஞ் செய்துதர உடன்பட்டனர்.

இடையே தடை

திருவரங்கனார்க்கும் மறைமலையடிகளார்க்கும் ஒரு சிறு தகராறு ஏற்பட்டு அது முற்றியது. இதனால் திருமணமுந் தடையாயிற்று. அரங்கனார் திருநெல்வேலி சென்று சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்னும் பெயருடன் கழகம் ஒன்றுதொடங்கி நூல்கள் பலவற்றை வெளிப்படுத்துந் திருப்பணியை மேற்கொண்டிருந்தார்.

நீலாம்பிகையாரோ லேடி வில்லிங்டன் கல்லூரியிற் சேர்ந்து ஆங்குள்ள பெண்பாலார் விடுதியில் தங்கியிருந்தனர்.

### நோய்

அம்மையார் இரண்டாண்டுகள் மேற்படி கல்லூரியில் தங்கியிருந்தார். இளைப்பிருமல் நோய் அம்மையாரைச் செம்மையாய்ப் பற்றியது. அதனால் தொல்லையடைந்த அம்மையார் பல்லாவரத்தை யடைந்தார். நோய் கடுமை யாயிற்று. அடிகளார் உள்ளம் வருந்தினர். தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் பலர் அம்மையாரின் நோயை அகற்றத் தம்மாலான முயற்சிகளையெல்லாஞ் செய்தனர். ஆனால், அந்நோய் அம்மையாரை விட்டு அடியோடு அகன் றொழியாமல் அடுத்தடுத்துத் தோன்றி அல்லல் விளைவித் துக்கொண்டிருந்தது.

### தமிழாசிரியர்

அந் நாளில் பல்லாவரத்தில் கல்லூரி ஒன்று தோன் றியது. அம்மையார் அப் பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்து இரண்டு ஆண்டுகள் அலுவல் பார்த்தார். பிறகு சென்னை இராயபுரத்தில் நார்த்விக் மகளிர் கல்லூரியில் தமிழாசிரியராக அமர்ந்து 1928-ஆம் ஆண்டுவரையில் அலுவல் பார்த்தார்.

### திருமணம்

அரங்கனார்க்கும் அம்மையார்க்கும் காதல் ஏற்பட்டுப் பத்தாண்டுகள் வரைநீண்டு நின்றது. அடிகளார், "காதலர் இருவருந் திருமணம்புரிந்து கொள்ளட்டும். நான் திரு மணம் நடக்கும் இடத்திற்கு வரமுடியாது" என்றனர். அரங்கனாரும் அம்மையாரும் அடிகளார் இல்லாமல் திரு மணம்புரிந்துகொள்ள விரும்பவில்லை. பின்னர் கா. சுப் பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல் திருவரங்கனாருடன்

பல்லாவரம் வந்து "அம்மையார் அரங்கனர் திருமணத்தை முன்னின்று நடத்தித்தரவேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர். இருவருடைய காதல் உறுதியையும் பத்தாண்டுகள் பார்த்த அடிகளார் மனம் இசைந்தார். சென்னை திருமயிலை கபாலீசுவரர் கோயிலில் திருமணம் 2-9-1927-இல் இனிது நிகழ்ந்தது. அப்போது பா. வே. மாணிக்க நாயக்கர், கா. சுப்பிரமணிய பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், கா. நமச்சிவாய முதலியார், மணி. திருநாவுக்கரசு முதலியார், ச. சச்சிதாநந்தம் பிள்ளை முதலிய புலவர் பெருமக்கள் ஒருங்கு கூடியிருந்து வாழ்த்துரை கூறினர். மறுநாள் மறைமலையடிகளாரின் பல்லாவரப் பொதுநிலைக் கழகமாளிகையில் மணமக்களுக்கு விருந்து நடைபெற்றது. அவ்விருந்துக்கும் முற்கூறிய புலவர் பெருமக்கள் வந்து சிறப்புச் செய்தனர்.

### இல்வாழ்வும் மக்கட்பேறும்

அரங்கனரும் நீலாம்பிகையம்மையாரும் தகுதி வாய்ந்த வாழ்க்கைத் துணைவர்களாக விளங்கினர்கள். திருமணம் முடிந்த பிறகு அம்மையார் தமிழாசிரியர் வேலையை விட்டுவிட்டுப் பாளையங்கோட்டையில் உள்ள தம் கணவனர் இல்லத்தில் 1928-ஆம் ஆண்டுமுதல் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டார். அம்மையார்க்கு எட்டுப் பெண்மக்களும் மூன்று ஆண்மக்களுந் தோன்றினர். மக்கட் செல்வப்பேற்றால் அம்மையார் உள்ளம் பெருங் களிப்படைந்தது. மக்களை மாண்புடன் போற்றி வளர்த்தனர்.

### நோய்நீக்கமும் மெலிவும்

1920-இல் அம்மையாரைப் பற்றிய இளைப்பிருமல் நோய் 1930-ஆம் ஆண்டுவரை அம்மையாரை வருத்தியது.

திருவரங்கனாரும் பெருஞ்செலவுகள் செய்து மருத்துவங்கள் செய்வித்தார். இறுதியில் பிச்சாண்டியா பிள்ளை என்னும் தமிழ் மருத்துவர் அரிய மருந்துகள் பலவற்றை அம்மையார்க்குச் செய்துகொடுத்தனர். அம்மருந்துகளால் அம்மையாரைப் பற்றியிருந்த நோய் தொலைந்தது. அம்மையார் அதனால் உள்ளங் களித்தார். தாம் எழுதிய நூல்ஒன்றைப் பிச்சாண்டியா பிள்ளையின் நினைவு வெளியீடாக அச்சிற்பதிப்பித்து வெளியிட்டதுமன்றித் தம் பெண்குழந்தைகளில் ஒன்றுக்குப், 'பிச்சம்மை' என்று பெயரிட்டும் தமது நன்றியறிவுடைமையைப் புலப்படுத்தினர். நன்றிமறப்பது நன்றன்று என்பது தமிழ்மறை அன்றோ? அம்மையாரைப் பற்றிய நோய் ஒழிந்ததாயினும் மக்களைப்பேணல் கண்விழித்து இரவிற்படித்தல் நூல்கள் எழுதுதல் முதலிய அலுவல்களால் அம்மையாரின் உடல்நலம் குன்றிக்கொண்டே வந்தது. அரங்கனார் அம்மையார் உடல்நலத்தில் நாட்டஞ் செலுத்திக் கவலையில் ஆழ்ந்திருந்தார்.

### தனித்தமிழ்ப் பணி

அம்மையாரின் தனித்தமிழ்த் தொண்டு நாடோறும் வளர்ந்துகொண்டு வந்தது. ஒரு சிலர் தனித்தமிழ்க் கொள்கையில் வெறுப்புக்கொண்டு பிதற்றிவந்தனராயினும் அவர்தம் கூற்று நிலைபெறவில்லை. 1925-ஆம் ஆண்டில் தனித்தமிழ்க் கட்டுரைகள் என்னும் நூலை அம்மையார் வெளியிட்டனர். அந்நூலால் தனித்தமிழ்க் கிளர்ச்சி வளர்ச்சி பெற்றது.

### நூல்கள் எழுதுதல்

அம்மையார் இளமைமுதற்கொண்டே இடைவிடாது நூல்களைப் படித்துப் பழகியவராதலின் அவரால் நூல்க

ளைப் படிக்காமல் இருக்கமுடியாது. பகலில் ஓய்வில்லாமற் போயினும் இரவிலேனும் படிப்பர். நோயடைந்துள்ள காலத்தில் அந்நோயையும் பொருட்படுத்தாமல் படித்தல், நூல்கள் எழுதுதல் முதலிய செயல்களைப் புரிவர். அம்மை யார் பணிகட்கு அரங்கனாரும் தம்மாலியன்ற உதவிகளைப் புரிந்தனர். அம்மையாருடைய நூல்கள் பெரும்பாலும் மாதர் முன்னேற்றங்கருதி எழுதப்பட்டவைகளாக விளங் கின. அம்மையாரால் எழுதப்பட்ட நூல்கள் தனித்தமிழ் இயக்கத்தில் வெறுப்புக்கொண்டவர்கட்குக்கூட இன்பம் பயக்கத்தக்கவைகளாக விளங்கின.

மற்றுந் துன்பங்கள்

1943-ஆம் ஆண்டில் மற்றோர் நோய் அம்மையாரைப் பீடித்தது. அந்நோயின் பெயர் பெரும்பாடு என்பது. இந்நோய் அம்மையாரைக் கடுமையாகத் தாக்கியதால் அம்மையாரின் உடல்நிலை மேலுஞ் சீர்கேடடைந்தது. 1944-ஆம் ஆண்டில் திருநெல்வேலிமாவட்டத்து டோணா வூரில் அம்மையார்க்கு அறுவை மருத்துவம் நடைபெற் றது. அம்மையார் சிறிது நலமடைந்து இல்லந்திரும்பினார். திடீரென்று திருவரங்கனார் 28-4-1944-இல் இறைவன் திருவடி நீழலை எய்தினார். அம்மையார் அல்லலுக்கு அள வில்லை. பெரிதும் வருந்திச் சோர்ந்தனர்.

அம்மையார் முடிவு

திருவரங்கனார் மறைவுக்குப்பின் அம்மையார் உயி ரற்ற உடலைப்போல் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந் தார். 10-10-1945-ல் காய்ச்சல்நோய் கண்டது. அது கணத்திற்குக்கணம் மிகுதிப்பட்டது. அம்மையார் தாம் இனி இறைவன் திருவடிநீழலை எய்துதல் உறுதியென்று அறிந்தார். தம் மக்களைப் பாதுகாக்குமாறு உற்றார் உறவி

னர்களை வேண்டிக்கொண்டார். நல்ல நினைவுடனும் கூத்தப் பிரான் திருக்காட்சியுடனும் இறைவன் திருவடிநீழலை அடைந்தார்.

**அம்மையார் இயற்றிய நூல்கள்**

1. தனித்தமிழ்க் கட்டுரைகள்
2. முப்பெண்மணிகள் வரலாறு
3. எலிசபெத் பிரை
4. தமிழ்நாடும் தமிழ்மொழியும் முன்னேறுவதெப்படி ?
5. ஆராய்ந்தெடுத்த அறுநூறு பழமொழிகளும் (ஆங்கிலப் பழமொழிகளும்)
6. வடசொல்தமிழ் அகரவரிசை
7. ஜோன் வரலாறு
8. பிளாரன்ஸ் நைட்டிங்கேல்
9. அருஞ்செயன் மூவர்
10. மேனாட்டுப் பெண்மணிகள்
11. ஷை இரண்டாம் பகுதி
12. பழந்தமிழ் மாதர்
13. நால்வர் வரலாறு

---

## உகூ. இராசேசுவரி அம்மையார்

**தோற்றம்**

ஈ. த. இராசேசுவரி அம்மையார் 1906-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 18-ஆம்நாள் ஈ. ந. தணிகாசல முதலியாரின் இரண்டாவது மகளாகப் பிறந்தார்.

**கல்வி**

தமிழ்க்கல்வியையும் ஆங்கிலக்கல்வியையும் முறைமையாகப் பயின்றார். ஆங்கிலத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றார். வெல்லிங்டன் பெருமாட்டி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பி.டி. பட்டம் பெற்றார்.

தொண்டு

1932-ஆம் ஆண்டில் மேரி அரசியார் கல்லூரியில் விஞ்ஞானத் துணைச் சொற்பொழிவாளராக அமர்ந்து அப்பணியைத் திறம்பெறச் செய்தார். 1946-ஆம் ஆண்டில் வெல்லிங்டன் பெருமாட்டி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் விஞ்ஞானச் சொற்பொழிவாளராக வேலைபார்க்கத் தொடங்கினார். 1953-ஆம் ஆண்டில் மேரி அரசியார் கல்லூரியில் பௌதிகத் துறைத்தலைவராகப் பணிபுரிந்தார்.

நூல்கள்

அம்மையார் போதனைப்பணியோடு நூலெழுதும் பணியிலும் புகுந்து பலநூல்கள் எழுதினார். சூரியன் என்பது அம்மையார் எழுதிய முதலாவது விஞ்ஞான நூலாகும். இந்நூல் தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பெற்றது. இது பி. ஏ. பட்டப் படிப்பிற்குப் பாடப் புத்தகமாகப் பன்முறை தென்னாட்டுப் பல்கலைக் கழகங்களில் அமைக்கப் பெற்றது. அம்மையாரின் வானக்குமிழி என்னும் மற்றொரு நூலும் பி. ஏ. வகுப்புப்பாடப் புத்தகமாக நிலவியது. ஆசிரியக் கல்லூரியில் அம்மையார் இருந்தபோது, குழவியுள்ளம் என்னும் பெயருடன் நூல் ஒன்று எழுதிவெளியிட்டார். அந்நூல் சென்னை மாநில அரசியலாரின் பரிசையும் சென்னைப் பல்கலைக் கழகத்தாரின் பரிசையும் பெற்றது. ஐன்ஸ்டைன் கண்ட காட்சி என்னும் அரிய நூலும் அம்மையாரால் எழுதப் பெற்றது. பரமாணுப் புராணம் என்பது அம்மையார் இயற்றிய மற்றொரு விஞ்ஞான நூல். இந்நூல் அணுவின் ஆற்றலையும் அதனை அறியவந்த மக்களின் வரலாற்றையும் விளக்குகின்றது. இந்நூலைத் தருமபுர ஆதீனத்தார் வெளியிட்டு, **விஞ்ஞானச் செல்வி** என்னுஞ் சிறப்புப் பெயரையும் வழங்கினர்.

பொது நலத் தொண்டு

அம்மையார் சொல்லாற்றல் நன்கு அமையப் பெற்றவர். எந்தப் பொருளைப்பற்றிப் பேசத்தொடங்கினும் அந்தப்பொருளை நன்கு விளக்கிக் கேட்பவர்கள் எளிதாக உணர்ந்து கொள்ளுமாறு பேசுதலில் வல்லவர். சென்னை மாநகரத்தின்கண் உள்ள பொதுச்சபைகள், கழகங்கள் முதலியவற்றில் அம்மையார் சொற்பொழிவு ஆற்றாத இடங்களே இல்லை. அம்மையார் விஞ்ஞானத்துறையில் விளங்கிய புகழாளராயினும் அஞ்ஞானம் போக்கும் சைவ சமயத்துறையிலும் உறைப்பாக நின்று பணிகள் பல புரிந்தனர். சைவசித்தாந்த மகாசமாசத்தில் அம்மையார் ஆற்றிய சொற்பொழிவுகளை அனைவரும் வியந்து கொண்டாடினர்.

சிந்தாதிரிப் பேட்டை நடுத்தரப்பள்ளிச் சங்கத்தின் துணைத்தலைவராக அம்மையார் அமைந்து நின்று நல்ல தொண்டு புரிந்தனர். சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப் பள்ளியைத் திறம்பெற நடத்துதற்கும் அம்மையார் செம்மையாக உதவிபுரிந்தனர். சங்ககாலத்துப் பெண்மணிகளைப்போல அம்மையார் இந்தக் காலத்தில் இலங்கிநின்று சீரும் சிறப்பும் பெற்றனர். அம்மையார் ஆங்கிலத்துறையோடு தமிழ்த்துறையிலும் ஆர்வம்மிகக்கொண்டு சிறந்து விளங்கினர்.

இறுதி

யாதொன்று சிறப்புடையதாக விளங்குகிறதோ அஃது இறுதிவரையில் நிலைபெற்றிருப்பதில்லை. உலகத்தில் கண்கூடாக இதனை எல்லோரும் அறியலாம். பேரறிவு பொருந்திய அறிஞர்கள் பெரும்பாலும் இளமையிலேயே முடிந்து போவார்கள். இம்முறையில் அம்மையாரும்

1-3-55-ஆம்நாள் செவ்வாய்க்கிழமை இரவு, தமது நாற்பத்தெட்டாவது அகவையில் இவ்வுலகவாழ்வைத் துறந்து இறைவன் திருவடிப் பேற்றை எய்தினர்.

---

## உஎ. வேதநாயக சாத்திரியார்

### தோற்றம்

கிறித்துவ சமயத்தினராகிய வேதநாயக சாத்திரியார் 1774-ஆம் ஆண்டு புரட்டாசித் திங்கள் 7-ஆம் நாள் திருநெல்வேலியிற் பிறந்தார். தந்தையார் பெயர் தேவ சகாயம் பிள்ளை. தாயார் பெயர் ஞானப்பூ அம்மாள்.

### கல்வி

வேதநாயகம் ஐந்தாம் அகவையை அடைந்தவுடன் தேவசகாயம் பிள்ளை இலக்கணப் புலவர் ஒருவரைக் கொண்டு தம் மகனுக்குக் கல்விப் பயிற்சியைத் தொடங்கினர். வேதநாயகத்தின் தாயார் மறு ஆண்டில் காலமானர். வேதநாயகம் குழந்தைப் பருவத்திலேயே தம் தாயை இழந்தபடியால் இவரும் இவருடன் பிறந்த பெண்மக்கள் இருவரும் மதுரைக்கடுத்த ஆனைக்குளத்தில் அவர்களுடைய பாட்டனர் வீட்டில் வளர்ந்தார்கள். பாட்டனர் வேதநாயகத்தினுடைய படிப்பைக் குறித்துக் கருத்துச் செலுத்தவில்லை. அவருக்கு மாடுகள் இருந்தபடியால் மாடு மேய்க்கிற வேலைக்காரர்களுடன் சேர்ந்து வேதநாயகமும் மாடுமேய்த்துக்கொண்டு திரிந்தார். பிறகு வேதநாயகத்தின் தந்தையாரான தேவசகாயம் பிள்ளை புளியங்குடி என்னும் ஊரில் இருந்த ஓர் இந்து ஆசிரியரிடத்திலே இவரைப் படிக்கவைத்தார். அப்போது வேதநாயகத்திற்கு அகவை ஒன்பது. பிறகு தேவசகாயம் மறுமணஞ்

செய்துகொண்டு தம் மகனைத் தம்முடன் அழைத்துச் சென்றார். திருநெல்வேலியில் ஒரு பள்ளிக்கூடத்தில் படிக்கவைத்தார்.

கிணற்றில் மூழ்கல்

ஒருநாள் வேதநாயகம் தம்முடைய பள்ளித் தோழர்கள் சிலருடன் சேர்ந்துகொண்டு வெள்ளத்தால் அழிந்த வெள்ளரித் தோட்டம் ஒன்றுக்குள் நுழைந்தார். தண்ணீருக்குள் கிடந்த வெள்ளரிக்கொடியில் இருந்து எல்லோரும் காய்களைத் தேடித் தேடிப் பறித்துக்கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் கிணறு ஒன்று இருந்தது. வெள்ளப்பெருக்கால் அது மறைபட்டிருந்தது. அக் கிணற்றுக்குள் வேதநாயகம் வீழ்ந்து மூழ்கிப்போனார். இவருடன் சென்ற பையன்கள் யாவரும் அஞ்சி ஓடிப்போய்விட்டார்கள். வேதநாயகம் இரண்டு மூன்று முறை தண்ணீரில் மூழ்கி எழுந்தார். மூன்றும் முறை மேலெழுந்தபோது கிணற்றின் விளிம்பைப் பிடித்துக்கொண்டு தப்பிப் பிழைத்தார். இச் செய்தியை வெகுநாள்வரை தந்தைக்குச் சொல்வதற்கு அஞ்சியிருந்தார். பிறகு தந்தையார் இந்தச் செய்தியைக் கேட்டபோது இறைவன் திருவருளை எண்ணிப் போற்றினார். மாடு மேய்ப்பவர்களோடுகூடி விளையாடப் பழகிய இவர் பிறகு கல்வி கற்கத் தொடங்கியபோது ஒழுங்காகக் கற்காமல் குறும்புகள் செய்து திரிந்தார். இதனைக் கண்ட தந்தை வருந்தினார். தந்தையின் வருத்தத்தைக் கண்ட இவர் பிறகு தந்தையின் வருத்தத்தை மாற்றுவதற்காகவே கல்வி கற்கத்தொடங்கினார். தம் மகன் நன்றாகப் பாடம் படித்து ஒப்புவித்தலைக்கண்ட தந்தையார் மைந்தனுக்குத் தின்பண்டங்களும் காசுகளுங் கொடுத்து ஊக்கம் உண்டாக்கினார். இந்தச் சூழ்ச்சி வேதநாயகம் கல்வி கற்பதற்கு மிகுந்த உதவியாக இருந்தது.

சுவார்ச்சு ஐயர்

அந்நாளில் சுவார்ச்சு ஐயர் என்னும் பெயருடைய கிறித்தவர் ஒருவர் தஞ்சையில் இருந்தார். அவர் ஓர் அலுவலை முன்னிட்டு நெல்லைக்குச் சென்றார். அங்கு வேதநாயகத்தைக் கண்டார். இவனுக்குக் கல்வி கற்பித்தால் சமய போதகனைச் செய்யலாம் என்று எண்ணினார். தேவசகாயத்தின் உடன்பாடுபெற்று வேதநாயகத்தைத் தஞ்சைக்கு அழைத்துவந்தார். வேறுசில மாணவர்களோடு சேர்த்துக் கல்வி கற்கச்செய்தார். மேலுந் தரங்கம்பாடிக்கு அனுப்பி அங்கிருந்த உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி கற்கச் செய்தார்.

சாத்திரி

பிறகு சுவார்ச்சு ஐயர் கிறித்தவ வேதநூலை வேத நாயகத்தினிடம் கொடுத்துப் படிக்கச்சொன்னார். வேத நாயகம் தரங்கம்பாடியில் இருந்து இலக்கண இலக்கியங் களையும் கற்றுச் செய்யுள் பாடும் திறமையையும் அடைந் தார். அவர் இயற்றிய செய்யுள் கிறித்தவ வேத சாத்திரக் கொள்கைகள் நிறைந்து சிறந்து விளங்கியபடியால் சாத்திரி யார் என்னுஞ் சிறப்புப் பெயர் அளிக்கப்பெற்றார். அது முதல் அவருடைய பெயர் வேதநாயக சாத்திரியார் என்று வழங்கத் தொடங்கியது.

வேதநாயகம் நூல்கள் இயற்றுதல்

வேதநாயகம் செய்யுள் வடிவமான பல நூல்களை இயற்றத்தொடங்கினார். இவருடைய பாடல்கள் சொற் சுவை பொருட்சுவை நிறைந்து இனிய முறையில் அமைந் தன. நூல் ஆசிரியராக அமர்ந்து நூல்கள் இயற்றியதோ டமையாமல் போதகாசிரியராக அமர்ந்து கல்வி கற்பிக்கும் தொழிலையும் இவர் மேற்கொண்டார். இதனால் இவருடைய

புகழ் யாண்டும் பரவிச் சிறப்படைந்தது. சென்னை முதலிய இடங்கட்குஞ் சென்று தம் நூல்களை அரங்கேற்றஞ் செய்து சிறப்படைந்தார். இவருடைய பாடல்கள் இனியவைகளாகவும் எளியவைகளாகவும் அமைந்தபடியாலும் இவருக்கு முன் யாரும் இத்தகைய பாடல்களை இயற்றாதபடியாலும் இவருடைய பாடல்களுக்குச் சிறப்பு மிகுதிப்படுவதாயிற்று.

(1) நித்திரைசெய் தெள்ளமிர்தே!
　　நேசமுறும் பைங்கிளியே!
சித்திரப்பூங் காவனத்தில்
　　சென்றுவருங் கோகிலமே!

(2) கோகிலமே! தாராவே!
　　கூவும் புறாவினமே!
பாகுதனி லேசமைந்த
　　பஞ்சா முதத்தேனே!

(3) தேனே! ரசமே!!
　　திகட்டாத செங்கரும்பே!
மானே!யென் கண்ணே!
　　வயிரமணிப் பெட்டகமே!

(4) பெட்டகமே! பொற்பணியே!!
　　பேழையே! என்னைசைத்
கட்டழகே! மாற்றுயர்ந்த
　　கட்டித் திரவியமே!!

(5) கட்டிமுத்தே! சிவரத்நக்
　　கண்ணே! எனதுயிரே!
வட்டமிட்டு ஆடும்
　　மயிலே! மயில்பேடே!

(6) பேடே! இளங்கொடியே!!
　　பிள்ளைக் கலிதீர்த்து
வீடே உலாவி
　　விளையாடும் நல்லனமே!

(7) அன்னமே! சோபனமே!
ஆதனமே! மாதனமே!
சொன்னமே! மின்னே!
துலங்கவரும் பாக்கியமே!

(8) பாக்கியமே! கூத்தாடும்
பாவையே! பங்கயமே!!
தீர்க்க மிகும்ஞான
தீபமே! கண்வளராய்.

(9) கண்ணுறங்கும் இன்னரசே!
கர்த்தர் இரக்கம் வைத்துப்
புண்ணியமாய்த் தந்தருளப்
பூத்துவளர் கற்பகமே!

என்பன இவருடைய திருச்சபைத் தாலாட்டின் பகுதிகளாகும்.

சரபோசி மன்னரும் சாத்திரியாரும்

வேதநாயக சாத்திரியார் தஞ்சையில் விளங்கியிருந்த போது, அஃதாவது 1829-ஆம் ஆண்டின் முற்பட்ட பிற்பட்ட காலங்களிலே சரபோசி மன்னர் தஞ்சையில் இருந்தார். வேதநாயக சாத்திரியார் சரபோசி மன்னர்மீது வாழ்த்துப்பாடல்கள் பாடிக்கொண்டு போய் அவரைக் கண்டார். அரசர் சாத்திரியாருக்குச் சிறப்புக்கள் செய்தார். தமக்கு அண்மையில் உட்காரவைத்துச் சால்வை போர்த்தினர். வெள்ளிநிலையங்கி தைத்துக் கொடுத்தார். திங்கள் ஊதியமும் ஏற்பாடு செய்துவைத்தார். சாத்திரியார் திங்களுக்கு இரண்டுமுறை மன்னரைக் கண்டு தாம் இயற்றிய பாடல்களை அவருக்குப் படித்துக்காட்டுவது வழக்கம். அரசரின் வழிமுறை வரலாற்றைப் பாடலாகவும் இயற்றினர். இவர் அரசரைக் காணுஞ் சமயங்களில்

இருவருக்கும் உரையாடல் நடக்கும். சாத்திரியார் எதற்கும் அஞ்சாமல் அரசரோடு எதிர் நியாயங்கொடுத்துப் பேசுவார். அரசர் இவர் கூறுகிற நியாயங்களைக் கேட்டு மகிழ்ச்சியடைவார். ஒருநாள் அரசர் சாத்திரியாரைப் பார்த்து, "நீர் பேசுகிறதைப் பார்த்தால் நம்மை மடக்கி விடுவீர்போல இருக்கிறதே" என்றார்.

மாறுபாடு

ஒருமுறை சாத்திரியார், "நோவாவின் கப்பல் பாட்டு" என்னும் நூலை இயற்றி அரசருடைய அவையிலே அரங்கேற்றஞ் செய்தார். அதற்காக அரசர் நூறு வராகன் நன்கொடை வழங்கினார். அப்பொழுது அரசர் சாத்திரியாரைப்பார்த்து, "நீர் ஊதியம் வாங்குகிறீர்; விழிப்பாக இரும். எவரையும் உம்முடைய சமயத்திற்கு இழுத்துக்கொள்ளாதேயும்," என்று கூறினார். சாத்திரியார் அரசரைப் பார்த்து, "நான் ஞாநஸ்நானம் (அறிவு முழுக்கு) கொடுக்கிறவன் அல்லன். அதற்காகக் குருக்கள் இருக்கிறார்கள். நான் அறிவு மட்டுஞ் சொல்லுகிறவன்," என்றார். பிறகு ஒருநாள் அரசர் சாத்திரியாரைப்பார்த்து, "நம்முடைய கடவுளாகிய பிரகதீசுரன் மேலே சில செய்யுள்கள் பாடும்" என்று கூறினார். சாத்திரியாரோ இந்துசமயக் கடவுளின்மீது பாடமுடியாது என்றார். இதுமுதல் அரசருக்கும் சாத்திரியாருக்கும் மனமாறுபாடு ஏற்பட்டது. ஆயினும் அது விரைவில் நீங்கிவிட்டது. அரசர் சாத்திரியாரை அவருடைய விருப்பம்போல் நடக்குமாறு கூறிவிட்டார். பிறகு சாத்திரியார் அரசர் இறக்கும் வரை (1832) அவருடைய உதவிபெற்றிருந்தார். சரபோசி மன்னர் இறந்த பிறகு சாத்திரியாருக்கு அரண்மனை உதவி நின்றுவிட்டது.

நிலம் வேண்டாம்

ஒருநாள் சரபோசி மன்னர் வேதநாயக சாத்திரியாரைப் பார்த்து, "உமக்குச் சிறிது நிலம் நன்கொடையாகக் கொடுக்கிறேன். அதை வைத்துக்கொண்டு நீர் எப்பொழுதும் நலத்துடன் உமது தொண்டைத் தடையில்லாமல் செய்துகொண்டிருக்கலாம்," என்று கூறினர். அதற்குச் சாத்திரியார், "தாங்கள் கொடுப்பது மகிழ்ச்சியாயிருந்தாலும் அதனுல் ஏற்படக்கூடிய தீமைகள் பல. சாப்பாட்டிற்காக நிலமிருப்பதால், ஆண்டவனை நோக்கி வேண்டுதல் மறந்துபோகும். இந்த நிலங்களின் பொருட்டுப் பிள்ளைகள் பிற்காலத்தில் ஒருவரோடொருவர் போரிட்டுப் பகைவர்களாவார்கள். இதனுல் வம்பு தும்புகளும் வழக்குகளும் ஏற்படும். ஆண்டவரைப் போற்றுகிற ஊழியம் நின்றுபோகும். மேலும் இதனுல் பல தீமைகள் உண்டாகும்," என்று கூறி அரசருடைய பூதானத்தை மறுத்துவிட்டார்.

வியத்தகு நிகழ்ச்சி

சாத்திரியார் தம் மாணவர்களோடு பல ஊர்களில் சுற்றுப்பயணஞ் செய்துகொண்டிருந்தார். ஒருநாள் இரவு இந்து சமயத்தினரின் அறச்சாலை ஒன்றில் சாத்திரியார் தங்கவேண்டியதாக ஏற்பட்டது. "இந்த உணவுச் சாலையில் இந்து சமயத்தினருக்கு மட்டுந்தான் உணவு கிடைக்கும். கிறித்தவர்களுக்குப் போடுவதில்லை," என்று அறச்சாலைச் செயலாளர் அறிவித்தார். சாத்திரியார், "சரி" என்று கூறிவிட்டுப் பட்டினியாகப்படுத்துக் கொண்டார். பிறகு அறச்சாலைச் செயலாளர் சாப்பிடுவதற்கு உட்கார்ந்தார். அவருடைய வலதுகை இயங்காமல் மரக்கட்டைபோல் இருந்தது. செயலாளர் அச்சங்

கொண்டார். கை என்ன காரணத்தினால் இவ்வாறாயது என்று அறிதற்கு மருத்துவர்களையும், கோடங்கிக்காரர்களையும், மந்திரவாதிகளையும் அழைத்து உசாவினார். ஒரு கோடங்கி, "யாரோ ஒரு தேவபத்தன் இந்த அறச்சாலையில் வந்து இறங்கியிருக்கிறான். அவனைத் தகுந்தபடி கனப்படுத்தாதபடியினால் இந்தத் தொல்லை வந்திருக்கிறது," என்று கூறினான். உடனே சாத்திரியாரையும் அவருடைய மாணவர்களையும் எழுப்பி உணவிட்டுப் போற்றினர். அதன்பிறகு அறச்சாலைச் செயலாளரின் கை, வழக்கம் போல இயங்கியது. இத்தகைய புதுமை நிகழ்ச்சிகள் பல சாத்திரியாரிடத்திலே காணப்பட்டன.

திருமணம்

சாத்திரியாருக்கு மூன்றுமுறை திருமணம் நடை பெற்றது. சில ஆண்மக்களும் பெண்மக்களும் பிறந்தார்கள்.

இறுதி

சாத்திரியார் பலருடைய உதவியையும் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்திருந்தார். இலங்கை முதலிய இடங்களுக்குஞ் சென்று சமயத்தொண்டு செய்தார். தமிழ்ப் புலவராகவும் கிறித்துவசமயப் பாவாணராகவும் அமைந்து நின்ற இவருடைய புகழ் எங்கும் பரவியிருந்தது. இவர் 1864-ஆம் ஆண்டு சனவரித்திங்கள் 24-ஆம் நாள் தமது தொண்ணூறாவது அகவையில் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

இவர் இயற்றிய நூல்கள்

1. பெத்லகேம் குறவஞ்சி
2. ஞானக்கும்மி
3. பரமநீதிப் புராணம்

4. காலவித்தியாசமாலை
5. ஞான எத்தப்பாட்டு
6. முன்னுரை
7. மெய்யறிவு
8. ஞானவழி
9. பராபரன் மாலை
10. ஆதியானந்தம்
11. அறிவானந்தம்
12. வத்து நிர்ணயம்
13. சைதன்யத் திறவுகோல்
14. பேரின்பக்காதல்
15. திருச்சபைத் தாலாட்டு
16. பிரலாப ஒப்பாரி
17. நோவாவின் கப்பல் பாட்டு
18. செபமாலை
19. ஞானபத கீர்த்தனங்கள்
20. தியானப்புலம்பல்
21. ஆரணாதிந்தம்
22. ஞானவுலா
23. ஞான அந்தாதி
24. சாத்திரக்கும்மி
25. குருட்டு வழி
26. விதி விலக்கு
27. கடைசி நியாயத்தீர்ப்பு
28. பத கீர்த்தனை

இவை முதலிய ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களை இவரியற்றியுள்ளார்.

# உஅ. சரவணப்பெருமாட் கவிராயர்

## தோற்றம்

அட்டாவதானம் சரவணப்பெருமாட் கவிராயருடைய பெயராகிய இவர், பாண்டிநாட்டிலே பரமக்குடி என இப்பொழுது வழங்கும் பரம்பக்குடிக்குத் தென்பக்கத்தில் உள்ள முதுகுளத்தூரில் வேளாளர் குலத்திலே ஏறக்குறைய நூற்றைம்பது யாண்டுகளுக்கு முன்பு பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் அருணசலக் கவிராயர்.

## கல்வி

இவர் உரிய காலத்திலே கல்வி கற்றுப் புலமை நிரம்பப் பெற்ருர். அவதானஞ் செய்தலினுஞ் சிறந்து விளங்கினுர். பிறகு இராமநாதபுரம் அரசருடைய அவையில் தாமும் ஒரு புலவராக அமர்ந்து புகழுடன் விளங்கினுர். கற்பனை, சிலேடை, யமகம், திரிபு முதலிய பாடல்களையும் சந்தப்பாடல்களையும் மிகு விரைவாகவும் மதுரமாகவும் பாடுந்திறமை இவருக்கு வியக்கத்தக்கவாறு அமைந்திருந்தது.

## தனிப்பாடல்கள்

இவர் பற்பல சமயங்களில் ஆங்காங்குச் சென்று பெருநிலக்கிழவர்கள்மீதும் செல்வர்கள்மீதும் அருமை மிக்க செய்யுட்கள் பலவற்றைப் பாடினுர். அவர்கள் இவருடைய புலமையைப் புகழ்ந்து தக்கவாறு நன்கொடைகள் வழங்கிப் போற்றினர். இவர் இயற்றிய தனிப்பாடல்கள் தனிச் செய்யுட் சிந்தாமணியிற் சேர்க்கப்பெற்றுள்ளன.

## இயற்றிய நூல்கள்

1. மதுரைச்சிலேடை வெண்பா
2. திருச்சுழியல் ஒரெழுத்தந்தாதி

3. கழுகுமலை ஓரெழுத்தந்தாதி
4. மகர வந்தாதி
5. பனசைத் திரிபந்தாதி
6. கயற்கண்ணி மாலை
7. புவனேந்திரன் அம்மானை
8. கந்தவருக்கச் சந்தவெண்பா

என்பன இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்.

"கும்பனுக்குஞ் சங்கரனுக் குங்குருவே பிள்ளைமதிக்
கும்பனுக்குஞ் சங்குவரிக் குங்குயிலுக்—கும்பயந்தேன்
தென்றலுக்கும் ஐங்கணைச்சிலம்பனுக்கும் என்செயச்சொல்
என்றலுக்கும் மங்கைநித்த மே."[1]

என்பது அவருடைய கந்தவருக்கச் சந்த வெண்பாவில் ஒரு பாட்டு.

இறுதி

இப்புலவர் ஏறக்குறைய அறுபது ஆண்டுகட்குமுன்பு காலமானார்.

---

## உ௯. பம்மல் விசயரங்க முதலியார்

தோற்றமுங் கல்வியும்

பம்மல் விசயரங்கமுதலியார் 1830-ஆம் ஆண்டு மார்ச் சுத் திங்கள் முதல்நாள் பிறந்தார். இளமையில் பச்சையப்ப முதலியார் தொடக்கப்பள்ளியிற் கல்வி கற்கத்தொடங்கினார். பிறகு இப்பொழுது இராசதானிக்கல்லூரி என வழங்கிவரும் பள்ளி, உயர்நிலைப்பள்ளியாக இருந்த காலத்தில் அதில் கற்றார். திறலோர் தேர்ச்சியில் இவர் இரண்டாவதாகத் தேறினமையின் அரசியலாருடைய பொன் மோதிரம் ஒன்றைப் பரிசாகப் பெற்றார்.

1. கும்பன் - அகத்தியமுனிவர். பனுக்கும் - தெளிக்கும். உவரி - கடல். சிலம்பன் - காமன். அலுக்கும் - சலிப்பான்,

நூல்

1851-ஆம் ஆண்டில் இராபர்ட்சன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய அமெரிக்க நாட்டு வரலாற்றைச் சீரிய நடையில் மொழிபெயர்த்தார். இதன்பொருட்டுப் பச்சையப்ப முதலியாருடைய பரிசிலைப் பெற்றார். இந்நூல் 1852-ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டு வெளியாயிற்று.

பணி

அரசினர் கலாசாலையில் தமிழாசிரியராகச் சிலகாலந் தொண்டு புரிந்தார். பின் பள்ளிக்கூடங்களின் துணைக் கண்காணிப்பாளராகத் திண்டுக்கல், மதுரை முதலிய ஊர்களில் பணிபுரிந்தார். அதன்பின் 1890-ஆம் ஆண்டுவரையிலும் சென்னையில் பணியாற்றினார். அகவை அறுபது நிறைந்த அவ்வாண்டில் வேலையில் இருந்து ஒய்வுபெற்று உதவி ஊதியம் பெற்றார்.

நூல்கள் வெளியிடல்

பள்ளிக்கு வேண்டிய தமிழ்நூல்களைச் செவ்விய முறையில் பதிப்பித்தார். மூன்றும் பாடப்புத்தகம் ஒன்றும் இவரால் அச்சிடப்பட்டது. தமிழ்நூல்கள் பல வெளிவருவதற்கு அறிஞர் சிலருக்கு இவர் துணைபுரிந்தார்.

பல துறைகளிற் பணி

சென்னைப் பல்கலைக்கழக உறுப்பினராக அமர்த்தப்பெற்றுப் பணிபுரிந்தார். சென்னையில் விசயநகர மன்னர் ஏற்படுத்திய நான்கு பெண்பாடசாலைகட்கு ஊதியமில்லாப் பணிபுரிந்தார். ஆசிரியன்மார் தேர்விற்காக ஏற்படுத்திய குழுவுக்கு அமைச்சராக இருந்தார். காஞ்சி ஏகாம்பரநாதர் கோவில், சென்னை ஏகாம்பரநாதர் கோவில், திருவேட்டீச்சுரர் கோவில் முதலியவைகளுக்குத் தருமத்

தலைவராக இருந்தார். தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் பள்ளியிலுந் தொண்டுசெய்தார்.

### இறுதி

நற்செயல்கள் பலவற்றில் ஈடுபட்டிருந்த இவர், 1895-ஆம் ஆண்டில் இறைவன் திருவடி நீழலை எய்தினார்.

---

## ௩௦. திருத்தணிகைக் கந்தப்பையர்

### தோற்றம் முதலியன

கந்தப்பையர் வீரசைவ மரபினர். இவர் திருத்தணிகையில் தோன்றித் தக்கார்களிடம் கல்வி கற்றுப் பெரும்புலவராக விளங்கியிருந்தார். முருகக் கடவுளை வழிபடுவதும் அவர்மீது பாக்கள் இயற்றுவதுமே இவருக்கு நிலைபெற்ற தொழிலாக இருந்தன. திருமணம் முடிந்து பல ஆண்டுகளாகியும் மக்கட்பேறு உண்டாகவில்லை. மக்கட்பேற்றை மிகுதியும் விரும்பிய இவர் தம்முடைய மனைவியின் தங்கையை இரண்டாம் மனைவியாகத் திருமணம் புரிந்தார். இருவரிடமும் நீண்டநாள் மக்கட்பேறு உண்டாகவில்லை.

### மனைவியர் உரையாடல்

ஒருநாள் மங்கையர் இருவரும் தண்ணீர் எடுத்தற்குக் குளத்தை நாடிச் சென்றுகொண்டிருந்தனர். அப்போது திருவேங்கடமலை அவர்களுக்குக் காட்சியளித்தது. இருவரும் உரையாடிக்கொண்டு சென்றனர். ஒரு மாது "நமக்கு இதுவரையில் மக்கட்பேறு உண்டாகுமாறு முருகன் திருவருள் புரிந்திலன். இனிமேல் நமக்கு மக்கட்பேறு உண்டாயின் அதோ தெரிகிற திருவேங்கடமலையா

னுடைய பெயரைத்தான் அவர்கட்கு வைக்கவேண்டும்," என்றனர். மற்றொரு மாது தன்னுடைய உடன் பிறந்தவள் பேச்சை ஆதரித்து "அப்படியேதான் செய்யவேண்டும்," என்றனர்.

மக்கட்பேறு

ஆண்டுகள் சில சென்றன. மங்கையர் இருவரும் ஒரே காலத்தில் கருக்கொண்டனர். ஒருநாள் முன்பின்னுக மக்களைப் பெற்றனர். இரண்டு குழந்தைகளும் ஆண் குழந்தைகளே. கந்தப்பையர் பெரும் மகிழ்ச்சியடைந்தார். மைந்தர்க்குச் செய்யவேண்டிய சிறப்புக்களை யெல்லாம் செய்தார். பிறகு பெயரிடத் தொடங்கினர். ஒரு குழந்தைக்கு விசாகன் என்றும், மற்றொரு குழந்தைக்குச் சரவணன் என்றும் பெயர் வைக்கலானர்.

பெருமாள்

மாதர்கள் இருவரும் திடுக்கிட்டனர். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பிறகு தாம் உரையாடிக் கொண்ட செய்தியைத் தம் கணவருக்குக் கூறினர். இதனைக் கேட்ட கந்தப்பையர் சிறிதும் கவலையடையவில்லை. "அப்படியா? மிகநல்லது" என்று கூறிவிட்டு விசாகப் பெருமாள் என்றும் சரவணப்பெருமாள் என்றும் பெயரை நீட்டிவிட்டனர். கூடியிருந்தவர்கள் கந்தப்பையரின் அறிவு மாட்சியைக் கண்டு வியந்தனர். இவர்கள் இருவரும் ஒரு நாள் ஏற்றத்தாழ்வைக் கொண்டே அண்ணன் தம்பிகள் என்று அழைக்கப்பட்டனர். இருவரும் கல்வியை நன்கு கற்றுப் பல நூல்கள் எழுதி மிகுந்த சிறப்புடன் உலகில் விளங்கியிருந்தார்கள். கந்தப்பையர் நூல்கள் யாவும் முருகக்கடவுள்மீது பாடப்பெற்ற புகழ் நூல்களேயாம்.

இவர் இயற்றிய நூல்கள்

1. திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ்
2. ஐங்கரமாலை
3. தயாநிதிமாலை
4. வேலாயுத சதகம்
5. திருத்தணிகை யந்தாதி
6. திருத்தணிகைக் கலம்பகம்
7. மயிற்பத்து
8. சேவற்பத்து
9. வேற்பத்து
10. சீர்பாதப்பத்து
11. திருத்தணிகையுலா
12. மலைப்பத்து

என்பன. இந்நூல்கள் யாவும் ஒன்றுபடுத்தப் பெற்றுத் திருத்தணிகைச் சந்நிதிமுறை என்னும் பெயருடன் அச்சிட்டு வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றன. பாடல்கள் சொன்னயமும் பொருள்நயமும் அமைந்து விளங்கு கின்றன.

"கண்ணனும் கனகநிற வண்ணனும் திருநுதல்
கண்ணனும் ஒருங்குறைதல்போல்
கருமலை இடத்துறச் செம்மலை வலத்துறக்
கவினும்வெண் மலையிடையதாய்ப்
பண்ணமரு நந்திநதி புடைசூழ இடையிடைப்
பைஞ்சுனை வயங்கமீச்செல்
பயோதரம் வயாநலி வுறக்கொடிகள் தாக்கல்பல
பாவையர் மருத்துவஞ்செய்(து)
உண்ணிலவு நீர்மக வுயிர்த்திட விலாப்புறத்
தொண்கரந் தால்வருடல்போல்
ஓங்குமுடி மேலூன்று வெள்ளிவீ ழன்னமழை
ஒழுகுநீ ருவியழிதல்
தண்ணிலவு கல்லார மாலையணி மாண்புநிகர்
தணிகைநா யகன்வருகவே

தடாமலப் பிணியெனை அடாதுசிற் சுகமருள்
சடானனக் குருவருகவே."

என்பது தணிகைப் பிள்ளைத்தமிழில் ஒரு செய்யுள்.

காதலாய் ஒருமயிலிற் களித்தேறுந்
தணிகைவரைக் கந்தன் யார்க்கும்
நாதனே எனத்தெளிந்த அருணகிரி
நாதனுமுன் நவின்ற பாவை
ஓதுவார் திருப்புகழென் றுலகினுள்ளோர்
அதற்குநிகர் உண்டோ மற்றைச்
சாதலார் விண்ணவர்கள் தம்புகழைத்
திருப்புகழாய்ச் சாற்றி டாரே.

அறுமு கந்தனில் ஒருமு கந்தனை
அடியனேற்குற வாக்கிடீர்
அம்ப சும்பனி ரண்டி லொன்றிலென்
ஆண வங்கெட நோக்கிடீர்
வெறிகொள் பன்னிரு கையி லொன்றிலென்
வெம்ப வக்கடல் தடுத்திடீர்
விளங்கும் ஆறுசெவ் வாயில் ஒன்றினில்
வீடு சேர்மொழி கொடுத்திடீர்
செறியும் ஆறிரு செவியில் ஒன்றிலென்
செய்தி யாவையுங் கேட்டிடீர்
செய்ய மார்பமோர் ஆறில் ஒன்றில்என்
செந்த மிழ்த்தொடை பூட்டிடீர்
தறுகண் வேடர்கள் உதவு மின்கொடி
தனமும் அன்பர்கள் மனமுநீள்
தணிகை யங்கிரி முடியு நண்பு
தழைத்தசெங்கல்வ ராயரே.

என்பன கலம்பகப் பாடல்கள்.

## ௩௧. புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார்

### தோற்றம்

சென்னைப் புரசையிலே சபாபதி முதலியார் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் வெண்ணெய்க்கார இரிசப்ப முதலியார். தாயார் பெயர் முனியாத்தையம்மாள்.

### கல்வி

சபாபதி முதலியார் அந்நாளில் புரசையில் தெருப் பள்ளிக்கூடம் வைத்துக்கொண்டிருந்த புதுவை அச்சுத உபாத்தியாயர் என்பவரிடத்தில் கல்வி கற்கத் தொடங்கினார். முதலில் சிறு இலக்கிய நூல்களையும் இலக்கண வினாவிடை முதலியவைகளையுங் கற்றார். இடையிடையே அவதானஞ் செய்யவும் பழகினார். பின்னர் அரசினர் பாடசாலையில் ஆங்கிலமும் தமிழும் கற்றுத் தேர்வுகளில் தேறிப் பரிசு பெற்றார். வித்துவான் தாண்டவராய முதலியாரிடத்தில் தமிழ் நூல்களைப் பாடங்கேட்டார். தாண்டவராய முதலியார் நீதிமன்றத் தலைவராக வேறு ஊர்களுக்குச் சென்றபின் காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் பல நூல்களைக்கற்றார். கல்வி கற்றுக்கொண்டிருக்கும்போதே சென்னை அரசாங்கக் கணக்குப் பிரிவுக்காரியாலயத்திலும் தங்கசாலையிலும் 116 ரூபா திங்கள் ஊதியத்தில் அலுவல் பார்க்கத் தொடங்கினார். சென்னையில் இருந்து தங்கசாலை எடுபட்டபின் கைப்பொருளைக்கொண்டு வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார். பிறகு காஞ்சிபுரம் சரவணதேசிகர், மழவை மகாலிங்கையர், திருத்தணிகை விசாகப்பெருமாள் ஐயர், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், புதுவை நயனப்ப முதலியார் ஆகியவர்களிடத்தே ஐந்திலக்கணங்களையும் இலக்கிய நூல்களையும் புராணங்களையும் நன்கு பயின்றார்.

அட்டாவதானம்

இவர் தகுந்த அகவையை அடைந்தபோது அட்டாவதானம் பழகுவதற்கு எண்ணினார். தமக்கு இளமையில் கல்வி போதித்த புதுவை அச்சுத உபாத்தியாயரிடத்திலே அட்டாவதானங் கற்றார். புரசை கங்காதரேசுரர் கோயிலிலும், மயிலாப்பூரிலும், செங்கற்பட்டிலும், புதுவையிலும், திரிசிரபுரம் தாயுமானவர் கோயிலிலும், மதுரை திருஞானசம்பந்தராதீனத்திலும், திருப்போரூரிலும், காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலிலும் புலவர்கள் பலரும் வியக்குமாறு அட்டாவதானம் செய்தார்.

செய்யுள் செய்யுந் திறன்

நால்வகைப் பாக்களையும் மிக விரைவாகப் பாடும் ஆற்றலை இவர் மிக நன்றாகப் பெற்றிருந்தார். திருப்போரூர்ப் புராணத்தைச் சித்திரக் கவிகளும் சொன்னயம் பொருணயங்களும் நன்கு அமையுமாறு பாடித் தம் ஆசிரியராகிய காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாருடைய தலைமையில் திருப்போரூரில் அரங்கேற்றஞ் செய்தார். காலத்தையும் இடத்தையும் நோக்கித் தனிப்பாக்களையும் இவர் இயற்றியிருக்கிறார். இவர் வைத்திருந்த வெள்ளித் தாள் பரணையை ஒருவர் களவாடிவிட்டார். அப்போது முதலியார்,

"அள்ளித்தாள் பணித்தன்பர் வினையனைத்தும்
ஒழிக்குமுருகையா! செந்தேன்,
துள்ளித்தாள் பரிமளங்கூர் பொழில்தணிகா
சலக்குகனே! தொல்லைக் கான்மேல்
தள்ளித்தாள் பதத்தாலே பெண்ணுக்கு
மால்மருகா தமியேன் வைத்த
வெள்ளித்தாள் பரணைவிட்டுப் போனவிதம்
இன்னதென்று விளம்பு வாயே"

என்று பாடினர். பரணையைக் களவு செய்தவர் மறுநாள் பக்குவமாக இவருடைய வீட்டிலே கொண்டுவந்து சேர்த்துவிட்டார்.

## மழையைத் தடுத்தல்

ஓர் ஆண்டில் சென்னையில் இராப்பகல் பத்துநாள் ஓயாமல் பெருமழை பொழிந்தது. அதனால் வீடு முதலியவைகள் இடிந்து விழுந்து பலவகையான தொல்லைகள் ஏற்பட்டன. மழையின் கொடுமையைப் பார்த்த முதலியார்,

“மழையேநீ இன்னுமிந்த வாறுகப் பெய்தால்
அழையே எவர்க்குமல் லாமல்—பழசான
கட்டிடங்கள் எல்லாம் கலகலத்துப் போய்விடுமால்
மட்டடங்கி மேல்வருடம் வா”

என்னும் வெண்பா ஒன்றைப் பாடினர். மழையும் நின்றுவிட்டது.

## ஆசிரியரும் நூலாசிரியரும்

இவர் மாணவர் பலருக்குக் கல்வி போதித்து அவர்கள் அனைவரையும் புலவர்களாக்கினர். பல நூல்களை எழுதித் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அரிய தொண்டு செய்தார். உரையற்ற பல நூல்களுக்கு உரையெழுதினர். திருப்புகழ்ச் சுவாமிகள் முருகதாச சுவாமிகள் என்று புகழ் பெற்ற தண்டபாணியடிகளால் இயற்றப்பட்ட சென்னை நூல்கள் சில இவருடைய தலைமையில் கூடிய அவையில் அரங்கேற்றஞ் செய்யப்பட்டன.

## இவரால் இயற்றப்பட்ட நூல்கள்

1. திருப்போரூர்ப் புராணம்
2. ” கலம்பகம்
3. ” அலங்கார பஞ்சகம்

4. திருப்போரூர் யமகவந்தாதி
5. ,, பதிற்றுப்பத்தந்தாதி
6. ,, வெண்பாமாலை
7. ,, திரிபந்தாதி
8. ,, நான்மணிமாலை
9. ,, இருசொல் யமக மாலை
10. ,, சதகம்
11. ,, பிரணவாசல சதகம்
12. ,, பிரணவாசல வெண்பா மாலை
13. ,, சிதம்பரசுவாமிகள் வரலாறு
14. ,, சிதம்பரசுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி
15. திருப்போரூர்ப் புராண உரைநடை
16. திருத்தணிகை இரட்டைச்சொல் யமக மாலை
17. புரசை பதிற்றுப்பத்தந்தாதி
18. புரசை வெண்பா மாலை
19. புரசை இரட்டைச்சொல் யமகமாலை (உரையுடன்)
20. திருப்போரூர்க் குறவஞ்சி
21. திருவொற்றியூர் வடிவுடையம்மை பதிற்றுப்பத்தந்தாதி
22. வடிவுடையம்மை தோத்திரச் சந்த மாலை
23. பழநி வெண்பா மாலை
24. அருணை வெண்பா மாலை
25. மயிலை வெண்பா மாலை
26. காஞ்சி வெண்பா மாலை
27. காஞ்சி குமரகோட்டக் கலம்பகம்
28. சென்னைக் கந்தசாமி வெண்பா மாலை
29. சென்னைக் கந்தசாமி புராணம்
30. திருத்தணிகையாற்றுப்படை உரை
31. கந்தரநுபூதி விருத்தியுரை
32. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் உரை

முதலியன இவருடைய நூல்களாம்.

## ௩௨. வித்துவான் தாண்டவராய முதலியார்

### தோற்றம்

வித்துவான் தாண்டவராய முதலியார், இப்போது செங்கற்பட்டு மாவட்டத்திலே வில்லியம்பாக்கம் என வழங்கும் வில்லி நல்லூரிலே பிறந்தார். இவர் பிறந்த ஆண்டு திங்கள் முதலியன புலப்படவில்லை. இவருடைய தந்தையார் பெயர் கந்தசாமி முதலியார். குலம் சைவ வேளாளர் குலம்.

### கல்வி

தாண்டவராயருடைய இளமைப் பருவத்திலேயே தந்தையார் மறைந்து போனார். பிறகு பொன் விளைந்த களத்தூரிலே இருந்த தம் அம்மான் குமாரசாமி உபாத்தியாயரிடத்திலே வளர்ந்தார். அவரிடத்திலேதான் நெடுங்கணக்கு, எண்சுவடி முதலியவைகளைக் கற்றார். தமிழ் மொழியை நன்றாகக் கற்றுணர வேண்டும் என்னும் ஆர்வம் மிகுதிப்படவே உழலூர் வேலப்ப தேசிகர் என்பவரிடம் இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்றார். இவ் வேலப்ப தேசிகர் அந்தகக்கவி வீரராகவ முதலியார் வழி முறையைச் சேர்ந்தவர்.

### சென்னையைச் சேர்தல்

பிறகு தாண்டவராயர் சென்னையை அடைந்து, புதுவை விசுவநாத பிள்ளை, கூனிமேடு வித்துவான் இராமானுச முதலியார் ஆகியவர்களிடம் இலக்கியங்களைப் பயின்றார். மேலும் தொல்காப்பியம், வரதப்ப முதலியார், சீகாழி அருணாசலக் கவிராயர் வழிமுறையைச் சேர்ந்த சீகாழி வடுகநாதத் தம்பிரான் ஆகியவர்களிடம் இலக்கணம் கற்றார். இவ்வாறு பல அறிஞர்களிடம் தமிழ் நூல்களைப் பயின்று புலமை நிரம்பப்பெற்றதோடமையாமல்,

வடமொழி, தெலுங்கு, கன்னடம், உருது, மகாராட்டிரம், ஆங்கிலம் முதலிய பிறமொழிகளையும் பயின்றார்.

### ஆசிரியத் தொழில்

தாண்டவராயருடைய புலமைத் திறத்தைப்பற்றிக் கேள்வியுற்ற அரசாங்கத்தினர் இவரைச் சென்னை அரசாங்கக் கல்லூரியில் தமிழ்ப் புலவராக ஏற்படுத்தினார்கள். இவரோடு தமிழ்ப் புலவராக இருந்தவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்.

### நீதிமன்றத் தலைவர்

சில காலஞ் சென்றபின் அரசாங்கக் கல்லூரி எடுபட்டது. 1843-ஆம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்ட நீதிமன்றத் தலைவராக இவர் ஏற்படுத்தப்பட்டார்.

### நூல்கள் எழுதி வெளியிடல்

தாண்டவராய முதலியார் தம் அலுவல்களுக்கிடையே நூல்கள் எழுதுவதினும் தமது கருத்தைச் செலுத்தினார். இவரது காலத்தில் பஞ்சதந்திரக்கதை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுச் செய்யுளாக வழங்கிக்கொண்டிருந்தது. ஆயினும் அதனைக் கற்பவரும் கேட்பவரும் அரியராயினர். ஆகவே இவர் தாம் பஞ்சதந்திரக்கதையை உரைநடையில் எழுதி எல்லோரும் படித்துணருமாறு வெளியிட வேண்டும் என்று எண்ணினார். மகாராட்டிர மொழியில் இருந்து இனிய அமைப்பில் மொழிபெயர்த்தார். முதல் நான்கு பகுதிகளை எளியநடையில் எழுதியவர் ஐந்தாவது பகுதியைச் சிறிது கடுமையான நடையில் அமைத்து மாணவர்கள் உரைநடையில் சிறிது சிறிதாக முன்னேறிப் புலவர் நடையையும் பின்பற்றுதற்கு வழிகாட்டியிருக்கிறார். இப்பஞ்சதந்திரக் கதையை அல்லாமல் கதாமஞ்சரி என்னும்

நூலும் இவரால் எழுதப்பெற்றிருக்கிறது. இலக்கண வினா விடை என்னும் நூலை மாணவர்களின் பொருட்டு எழுதி வெளியிட்டார். திவாகரம், சூடாமணி நிகண்டு என்னும் நூல்களைத் திருத்திச் சுத்தப் பதிப்பாக அச்சிட்டார். புரசைப் பொன்னம்பல அடிகள் என்பவர் விவிலிய நூலைக் கண்டித்து எழுதிய வேதவிகற்பம் என்னும் நூலை மறுத்து வேதவிகற்ப திக்காரம் என்னும் கண்டன நூலைப் பாதிரியார்களுடைய வேண்டுகோளின்படி எழுதினார். இந்நூல் வேறொருவர் பெயரால் வெளியிடப்பட்டது.

*இவர் இயற்றிய நூல்கள்*

1. பஞ்சதந்திர வசனம்
2. கதாமஞ்சரி
3. திருத்தணிகை மாலை
4. திருப்போரூர்ப் பதிகம்
5. இலக்கண வினாவிடை
6. வேதவிகற்பதிக்காரம்

*இறுதி*

சீரிய முறையில் செந்தமிழ்த் தொண்டு செய்திருந்த இவர், 1850-ஆம் ஆண்டிலே இவ்வுலகைவிட்டு மறைந்தார்.